

# பயன்தரவல்ல திருமுறைப் பாக்கள்



வெளியீடு:

இந்து சமயப் பேரவை

ஒன்ராறியோ

உ

# பயன்தரவல்ல திருமுறைப் பாக்கள்

தொகுப்பாசிரியர்
வி. கந்தவனம்

இந்து சமயப் பேரவை
ஒன்ராறியோ

நூல்: பயன்தரவல்ல
திருமுறைப் பாக்கள்

தொகுப்பு: வி. கந்தவனம்

எழுத்தமைப்பு: மா. கனகசபாபதி

நூல் அமைப்பு: விவேகா அச்சகம்

வெளியீடு: இந்து சமயப் பேரவை, ஒன்ராறியோ. கனடா

முதற்பதிப்பு: யூலாய் 2006

Title: Selected Verses from THIRUMURAI

Compiled by: V. Kandavanam

Typesetting: M. Kanagasabapathy

Printed & Bound by: Viveka Press

Published by: Hindu Religious Society of Ontario, Canada

First Edition: July 2006

# சமர்ப்பணம்



திருமுறை ஓதிய சிவனடியார்களின்
அனுசரணையுடன் வெளியிடப்படும்
இந் நூலை சகல உயிரினங்களையும்
இயக்குவிக்கும் எல்லாம் வல்ல
நடராசப் பெருமானின் திருவடிக்குச்
சமர்ப்பிக்கின்றோம்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | 7 |
| முன்னுரை | 10 |
| முதலாம்திருமுறை | |
| தோடுடைய செவியன் | 17 |
| அங்கமும் வேதமும் | 18 |
| உண்ணாமுலை உமையாளொடு | 21 |
| நன்றுடையானை தீயதிலானை | 23 |
| பூவியர் புரிகுழல் | 24 |
| புலனைந்தும் பொறிகலங்கி | 26 |
| இரண்டாம் திருமுறை | |
| நல்லானை நான்மறை | 29 |
| சடையா யெனுமால் | 31 |
| உருவார்ந்த மெல்லியவோர் | 32 |
| உண்டாய் நஞ்சை | 34 |
| மந்திரமாவது நீறு | 36 |
| வேயுறு தோளிபங்கன் | 37 |
| என்ன புண்ணியம்செய்தனை | 40 |
| மூன்றாம் திருமுறை | |
| இடரினும் தளரினும் | 42 |
| துஞ்சலும் துஞ்சலிலாத | 45 |
| காதலாகிக் கசிந்து | 46 |
| வானவர்கள் தான்வர்கள் | 48 |
| திரி தரு மாமணி நாகமாட | 50 |
| கல்லூர் பெருமணம் | 51 |
| நான்காம் திருமுறை | |
| சொற்றுணை வேதியன் | 54 |
| நம்பனே யெங்கள் | 55 |
| ஊனினுள் உயிரைவாட்டி | 57 |
| பொள்ளத்த காயமாய | 59 |
| மறையது பாடிப்பிச்சை | 60 |
| ஆதியில் பிரமனார் | 62 |

| | |
|---|---|
| படுகுழிப் பவ்வத் தன்ன | 63 |
| பகைத்திட்டார் புரங்கள் மூன்றும் | 65 |
| பாசமும் கழிக்க கில்லா அரக்கரை | 66 |
| வரைகிலேன் புலன்கள் ஐந்தும் | 68 |
| ஈன்றாளும் ஆயென | 69 |

ஐந்தாம் திருமுறை

| | |
|---|---|
| பண்ணின் நேர் மொழி | 71 |
| என்னி லாரும் மெனக்கினி | 73 |
| பாவமும் பழி பற்றற | 74 |

ஆறாம் திருமுறை

| | |
|---|---|
| விற்றூணொன் றில்லாத | 76 |
| நினைந்துருகும் அடியாரை | 79 |
| முளைத்தானை யெல்லார்க்கும் | 82 |
| பொய்மாயப் பெருங்கடலிற் | 85 |
| ஒருவனாய் உலகேத்த | 87 |
| ஓசை ஒலியெலாம் மானாய் | 90 |
| நல்லான் காண் நான்மறை | 93 |
| மூத்தவனை வானவர்க்கும் | 96 |
| முன்னானைத் தோல் போர்த்த | 98 |
| உரித்தவன் காண் | 101 |
| ஒன்றா வுலகனைத்து | 104 |
| விண்ணாகி நில னாகி | 106 |
| எண்ணு கேன் என் சொல்லி | 109 |

ஏழாம் திருமுறை

| | |
|---|---|
| பித்தா பிறைசூடி | 112 |
| மத்தயானை ஏறி | 113 |
| தம்மையே புகழ்ந் திச்சை | 115 |
| மற்றுப் பற்றெனக் கின்றி | 118 |
| மருவார் கொன்றை மதி | 120 |
| அந்த ணாளனுள் அடைக்கலம் | 122 |
| நீறு தாங்கிய | 124 |
| மீளா அடிமை உமக்கே | 127 |

தானெனை முன்படைத்தா 129

## எட்டாம் திருமுறை

சிவபுராணம் 131
திருவெம்பாவை 134
திருப்பள்ளி யெழுச்சி 139
அடைக்கலப் பத்து 141
புணர்ச்சிப் பத்து 143
வாழாப் பத்து 146
பிரார்த்தனைப் பத்து 148
குழைத்த பத்து 151

## ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பா 155
திருப்பல்லாண்டு 160

## பத்தாம் திருமுறை

திருமந்திரம் 164

## பதினொராம்திருமுறை

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 171
ஐயடிகள் காடவர் கோன்
சேத்திரத்திருவெண்பா 174
சேரமான் பெருமான்நாயனார் அருளிச்செய்த
பொன்வண்ணத் தந்தாதி 177
நக்கீரர் திருமுருகாற்றுப்படை 179
பட்டினத்துப்பிள்ளையார் அருளிய
திருவேகம்பமுடைய திருவந்தாதி 190
விநாயகர் திருவிரட்டைமணிமாலை 191

## பன்னிரண்டாம்திருமுறை

திருதொண்டர் புராணம் 195

# பதிப்புரை

புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளில் சைவத்திருமுறைகள் பேணப்பட வேண்டுமென்ற ஒன்ராறியோ இந்துசமயப் பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் வேண்டுகோளை பேரவை பூர்த்தி செய்து வருகின்றது. பேரவை கடந்த ஏழு வருடமாக பன்னிருதிருமுறை முற்றோதலை ரொறன்ரோவில் அவரின் ஞாபகார்த்தமாக நடத்தி வருகின்றது.

தேவைக்கேற்ற திருமுறைத்திரட்டு, என்ற நூலை தொகுத்து 2001ஆம் ஆண்டு திருமுறை முற்றோதல் பூர்த்திவிழாவில் வெளிக்கொணர்ந்தது. 2004ஆம் ஆண்டு மறுபதிப்பாகவும் அந்நூலை வெளியீடு செய்தது. அந்நூல் யாவும் மக்களுக்கு மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. ஆகையால் அத்திருமுறைத்திரட்டில் இடம்பெறாத பயன் உள்ள திருமுறைப்பாடல்களை தொகுக்க வேண்டுமென்ற பேரவையின் விருப்புக்கமைய இந்நூல் பேரவையின் தலைவர் சைவதுரந்தரர் கவிஞர் வி. கந்தவனம் அவர்களால் தொகுக்கப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு பேரவையின் தாபகர் திருமுறை மாநாட்டை நடத்துவதற்கு ஒழுங்கு செய்யுங்கள் என நிர்வாகிகளைப் பணித்தார். ஆனால் திருமுறை மாநாட்டை அவர் வாழும்பொழுது நடத்துவதற்கு திருவருள் கைகூடவில்லை. 1999ஆம் ஆண்டு கனடா கந்தசாமி ஆலயத்தில் திருமுறை விழாவை நடத்தியிருந்தோம். தாபகர் ஆத்மஜோதி ஐயாவின் திருமுறைக் கதைகள் என்ற நூலையும் வெளியிட்டிருந்தோம். அவரின் சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் இந்துசமயப் பேரவை 12 வருடங்களுக்குப் பின்பு நான்கு நாட்கள் திருமுறை மாநாட்டை நடத்துவதற்கு உத்தேசித்து 2006 யூலை 28, 29, 30ஆம் திகதிகளில் ரொறன்ரோவிலும் ஆகஸட் 5ஆம்திகதி மொன்றியலிலும் நடத்தவுள்ளது.

பேரவையின் பின்புலமாகச் செயல்படும் பேரவையின் திருமுறை அடியார்கள் திருமுறைகளில் கொண்டுள்ள ஈடுபாடும் பக்தியும் அவர்களின் பிரார்த்தனையுமே திருமுறைமாநாடு நடத்துவதற்கும் இந்நூலை வெளிவருவதற்கும் மூலகாரணமாகும். எமது வெளியீடான நூல்களை மக்கள் மயப்படுத்துவதும் பேரவையின் திருத்தொண்டர்களாகிய திருக்கூட்டத்தினரின் முயற்சியேயாகும்.

திருமுறைகள் சைவக்கருவூலங்கள். எல்லாம் வல்ல சிவபெருமான் திருமுறை பாடிய நாயன்மார்களின் உள்ளத்தில் எழுந்தருளி அதிட்டிக்க இறைவாக்காக பாடப்பட்டதே திருமுறைகள். சைவசமயம் நலிவுற்ற காலத்தில் நாயன்மார்கள் பிறப்பெடுத்தார்கள். திருமுறைகள் வெளிவந்தன. சொற்கோயிலாகிய திருமுறை வாக்குகள் சைவசமயத்தையும் சைவப் பாரம்பரியங்களையும் மேலோங்கச் செய்கின்றன. திருமுறைகள் மூலமாக இருந்து சைவசித்தாந்த தத்துவங்களை உள் அடக்கிய மெய்கண்ட சாத்திரங்களை சைவ உலகுக்கு தந்தது. இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அருளாளர்களால் பாடப்பட்ட திருமுறைகள் பலநூறு வருடங்களாக சைவத்தமிழ் மக்களிடையே விழிப்புணர்வைத் தட்டியெழுப்பும் உயர்ந்த பனுவல்களாக உள்ளன.

திருமுறைகளைப் பக்தியுடனும் உள்ளத் தூய்மையுடனும் ஓதுவதால் மனத்தில் உள்ள மாசுக்கள் நீங்குவதுடன் சுற்றாடலும் செவிசாய்க்கும் மக்களும் தூய்மையடையும் வாய்ப்புள்ளது. சைவத் தமிழ் மக்களுக்குள் சைவவாழ்வு வாழும் சைவப் பெரியார்கள் ஏதோவொரு திருமுறையில் மிகுந்த நாட்டமுள்ளவர்களாக இருப்பார்கள். திருமுறைகளிலும் நாயன்மார்களிலும் இருந்த ஈடுபாட்டினாலும் உயர்ந்த பக்தியினாலுமே நாவலர் பெருமான் உயர்ந்த சைவ அபிமானியாகவும், சைவத்தின் காவலனாகவும் மாறினார்.

இன்று புலம்பெயர்ந்து கூடுதலாக தமிழர்கள் வாழும் இந்நாட்டில் நாம் திருமுறைகளைப் பேணுவதால் அவற்றில் இருந்து வெளிப்படும் அருள்சக்தி இங்கு சைவத்தை காக்கும். காப்பதோடு எமது பேரவை திருமுறை மாநாட்டை நடத்திச் சைவசமய எழுச்சியை ஏற்படுத்துவதற்கும் வழிவகுத்துள்ளது. அன்பும், பண்பும், விசுவாசமும், புரிந்துணர்வும் திருமுறைகளை ஓதுவதால் மேலோங்குகின்றன. திருமுறை வாக்குகள் அறியாமையில் இருந்து எங்களைப் பாதுகாப்பதற்கு உதவுகின்றன. திருமுறைகளில் உள்ள ஒவ்வொரு சொல்லும் மந்திர ஆற்றல் உடையது.

திருமுறைகளை நாம் பாராயணம் செய்யும்பொழுது அதில் உள்ள மந்திர ஆற்றல் எங்கள் உயிரில் கலந்து நமது அறியாமையைப் போக்குகின்றது. எங்களைத் தூயவர்கள் ஆக்குகின்றது. திருமுறைகளை ஓதி பல பிறவிகளில் நமது ஆன்மா சுமந்து வந்த கர்மவினைகளில் இருந்து விடுபடவே இறைவன்

அருளாளர்கள் மூலம் திருமுறைகளை வழங்கியுள்ளான். எமது அகப்பகைவர்களான ஆணவம், பேராசை, சுயநலம், கோபம், குரோதம், கர்வம் போன்றவற்றினால் இருந்து வரும் தாக்கங்களில் இருந்து திருந்தி வாழுவதற்கு திருமுறைகள் பெரிதும் உதவுகின்றன.

பயன் உள்ள உயர்ந்த தத்துவச் செறிவுள்ள பாடல்களைக் கொண்ட இந்நூல் சைவத்தமிழ் மக்களின் பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை. இந் நூல் பிழைதிருத்தம் செய்வதற்கு உதவி புரிந்த பேரவையின் பொருளாளர் செ. சோமசுந்தரம், உப பொருளாளர் திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் ஆகியோருக்கும் இந்நூலை ஒழுங்காக வடிவமைப்புச் செய்த மா. கனகசபாபதி அவர்களுக்கும், அழகுற அச்சிட்டு நல்கிய விவேகா அச்சகத்தினருக்கும், நூலைத் தொகுத்த சைவதுரந்தரர் வி. கந்தவனம் ஐயா அவர்களுக்கும், வழமைபோல எமது வெளியீடுகளை மக்கள் மயப்படுத்தும் எங்கள் திருக்கூட்டத்தினருக்கும் இந்து சமயப் பேரவையின் சார்பில் அடியேனின் நன்றிகள் உரித்தாகுக.

வணக்கம்.

சிவ முத்துலிங்கம்<br>
செயலாளர், நூல் வெளியீட்டுப் பொறுப்பாளர்,<br>
இந்துசமயப் பேரவை.

# முன்னுரை

# திருமுறை மாநாடு

கனடாவில் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை திருமுறை மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது.

யூலாய் 28ஆந் திகதி மாலை நல்லூர் கந்தசுவாமி கோயிலில் மாநாடு தொடங்கப்பெறும். யூலாய் 29ல் கனடா கந்தசுவாமி கோயிலிலும், 30ல் இரிச்மண்ட் பிள்ளையார் கோயிலிலும் முழுநாள் நிகழ்ச்சிகளாக மாநாடு தொடர்ந்து நடைபெறும். நிறைவு விழா ஆகஸ்ட் 05ஆம் நாள் மொன்றியல் முருகன் கோயிலில் நடைபெறவுள்ளது.

மாநாட்டில் பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார், தாயகத்திலிருந்து சித்தாந்தகலாநிதி க. கணேசலிங்கம், சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், விரிவுரையாளர் வாகீச கலாநிதி க. நாகேசுவரன் ஆகியோர் கலந்துகொண்டு உரைகள் நிகழ்த்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களோடு எமது கனடியப் பெருமக்களும் சொற்பொழிவுகள், திருமுறை இசைக் கச்சேரிகள், கவியரங்கம், கருத்தரங்கம் ஆகியவற்றிற் பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளனர். சிறுவர்களும் நிகழ்ச்சிகள் வழங்குவார்கள்.

**இந்து சமயப் பேரவை**

கனடாவில் இந்து சமயப் பேரவை ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களால் 1994ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. தொடங்கப்பெற்ற காலத்திலிருந்தே பேரவை திருமுறைக்கு முதன்மை அளித்து வருகின்றது. கனடாவிலே பல ஆலயங்களில் திருமுறை முற்றோதலை ஒழுங்கு செய்து நடத்தியிருக்கின்றது.

முற்றோதல் நிறைவு விழாக்களை நடத்தி அவற்றில் பங்குபற்றிய அடியார்களுக்குப் பரிசுகள் வழங்கியும் வருகின்றது. சிறுவர் களையும் திருமுறைகளில் ஈடுபடுத்தும் நோக்குடன் அவ்வப்போது மனனப் போட்டி, பண்ணிசைப் போட்டி, பேச்சுப் போட்டி, எழுத்துப் போட்டி என்பனவற்றை நடத்திவருகின்றது. பாரதத்திலும் இந்து

சமயப் பேரவை திருவாசக முற்றோதல்களை நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த பல ஆண்டுகளாத் தொடர்ந்து ஸ்காபரோ நல்லூர் கந்த சுவாமி கோயிலில் திருமுறை முற்றோதல்கள் வாரந்தோறும் நடத்தப்பட்டு வரும் வழக்கத்தையொட்டி நல்லூர்க் கந்தனுக்குத் 'திருமுறைக் கந்தன்' என்று பெயர் சூட்டியிருக்கின்றேன். முற்றோதல் களை முன்னின்று நடத்தும் ஆத்மஜோதி நா. முத்தையா அவர் களின் உத்தம சீடர் திரு. சிவ. முத்துலிங்கம் அவர்களுக்கு 'திருமுறைச் செல்வர்' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்புச் செய்துள்ளேன்.

திருமுறை சார்ந்த பல நூல்களையும் இந்து சமயப் பேரவை வெளியிட்டுள்ளது. **'பயன்தரவல்ல திருமுறைப் பாக்கள்'** என்ற இந்த நூலும் அவ்வரிசையில் வருகின்றதாயினும் திருமுறை மாநாட்டில் வெளியிடப் பெறுகின்ற தனிச் சிறப்பு இதற்கு உண்டு.

### திருமுறைகளின் பெருமை

கனடாவில் எத்தனையோ மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. ஆனால் திருமுறை மாநாடு நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். .திருமுறைகளின் அருமை பெருமைகளைச் சைவப் பெருமக்களுக்கு எடுத்துக் கூறுவது மாநாட்டின் நோக்கமாகும்.

திருமுறைகள் சைவப் பெருமக்களுக்குக் கிடைத்த தெய்வப் பொருள் நூல்கள். அவை அருளாளர்களாற் பாடப்பெற்றவை யாதலால் அருள் மிகுந்தவை. மூவர் முதலிகள் தேவாரங்களால் அற்புதங்கள் நிகழ்த்தியமையையும் அவர்களின் வரலாறுகள் தெரிவிக்கின்றன. திருமுறைகள் பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு போன்றவற்றையும் விளக்குகின்றன. அவை கண்ணெனப் போற்றப்பட வேண்டியவை. அவற்றைப் பொருள் உணர்ந்து ஓதிவருபவர் அருள் நிறைந்த வாழ்க்கையில் திளைத்து வருவதைக் காண்கின்றோம்.

கனடாவுக்கு வருகை தந்திருந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துத் தமிழத் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் தாம் நடத்தும் சைவ அனாதைகள் இல்லத்துக்கு நிதிப் பற்றாக்குறையால் ஏற்பட்ட இடர்ப்பாட்டைத் திருஞானசம்பந்தப் பெருமானின் 'இடரினுந் தளரினும்' என்ற

தேவாரத்தைப் பாடித் தீர்த்த தெய்வீகச் சூழ்நிலையைக் கண்ணீர் மல்க விவரித்த அநுபவம் திருமுறைகளின் பயன்பாட்டுக்கு நல்ல சான்று.

திருமுறைகளின் பெருமைகளை உணராத பலர் கோயில்களிலும் பிற வழிபாட்டு நிலையங்களிலும் 'பஜனை' என்ற பெயரில் வெற்றுப் பாடல்களைப் பாடிப் பொழுதை வறிதே போக்குகின்றனர். இசைப் பாடல்கள் என்ற பெயரில் வசைப் பாடல்கள் பாடுகிறார்கள். பிள்ளையாரைத் தொந்திக் கணபதி என்றும் ஒற்றைக் கொம்பன் என்றும் பழித்துப் பாடும் பரிதாபங்கள் பக்தி வழிபாட்டின் போலித்தனத்துக்கு நல்ல சான்றுகள்.

இந்த நிலைமை சைவர்கள் வாழும் ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்லாது தாயகத்திலும் காணப்படுகின்றது. தமிழகத்திலும் காணப்படுகின்றது. இதற்குத் திருமுறைகளின் சிறப்புக்கள் பற்றிய அறியாமையே காரணமாகும்.

## கோயிலா கோவிலா?

கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவது போல அருமந்த திருமுறை இருக்க பத்திப் பாடல்களை எப்படிப் பாட வேண்டும் என்று அறியாதார் பாடிய பாடல்கள் கோயில் வரை வருவதற்குக் கோயில் நிர்வாகமும் ஒரு காரணமாகும். அவர்களுக்கும் திருமுறைகளில் அதிக பயிற்சி இருப்பதாகத் தெரியவில்லை. பலர் கோவில் என்றே எழுதுகிறார்கள். கோயில் என்று எழுதுவதே திருமுறை மரபு என்பதனை அறியாதவராக உள்ளனர். கோ + இல் கோவில் என்று புணரும்மாயினும் புணர்ந்ததைத் திருப்பிப் பிரிக்கையில் கோ + வில் என்று அது வேறு பொருளுக்கு - பெரிய வில் என்ற பொருளுக்கு - இடந்தருதலாற் போலும் திருமுறை அருளாளர் கோவில் என்று எழுதுவதைத் தவிர்த்தனர். திருமுறை கோயில் என்று எழுதிக் காட்டியிருப்பதால் கோயில் என்றே எழுதுமாறு கோயில் நிர்வாகிகளையும் மற்றும் எழுத்தாளர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

## நம்பியாண்டார் நம்பி

எத்தனையோ பண்டைத் தமிழ் நூல்கள் மறைந்தொழிந்த நிலையிலும் திருமுறைகள் எமக்குக் கிடைத்தமை தெய்வ

சித்தமேயாகும். அவையும் எமக்கு முழுமையாகக் கிடைக்க வில்லை. கிடைத்தவற்றைத் திருமுறைகளாகத் தொகுத்துத் தந்த நம்பியாண்டார் நம்பிக்கும் அவரை அவ்விதம் செய்யத் தூண்டிய அபயகுலசேகரன் (கி.பி.870-907) என்ற சோழ மன்னனுக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாரின் அருள் பெற்றவர். கற்றறிந்த பெரும் புலவர். திருத்தொண்டர் திருவந்தாதியையும் பல பிரபந்தங்களையும் இயற்றியவர். அவர் தேவார திருவாசகங்களையும் பிற திருப்பாடல்களையும் பின்வரும் ஒழுங்கில் தொகுத்தருளினார்:

| நூல்கள் | வைப்பு முறை |
|---|---|
| திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரங்கள் | 1 - 3 |
| திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்கள் | 4 - 6 |
| சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரங்கள் | 7 |
| மாணிக்கவாசகர் திருவாசகமும் திருக்கோவையாரும் | 8 |
| ஒன்பது அருளாளரின் திருவிசைப்பாக்களும் சேந்தனார் பாடியருளிய திருப்பல்லாண்டும் | 9 |
| திருமூலர் அருளிய திருமந்திரம் | 10 |
| காரைக்கால் அம்மையார் முதலாய பன்னிருவரின் 40 பிரபந்தங்கள் | 11 |

இவற்றோடு பின்பு சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணமும் இறுதியாகச் சேர்க்கப்பட்டதால் திருமுறைகள் பன்னிரண்டாயின.

தமிழில் 'திரு' என்ற சொல் தனிச் சிறப்பு வாய்ந்தது. இதற்கு உயர்வு, அழகு, செல்வம், தூய்மை, தெய்வீகம் என்று பல பொருள்கள் உள்ளன. முறை என்பது வைப்பு முறையைக் குறிக்கும். எனவே திருமுறை என்றால் தெய்வப் பாடல்களின் (நூல்களின்) வைப்பு முறை என்று பொருளாகின்றது.

திருமுறை என்பது தெய்வ நூல்களைக் குறிப்பதால் முறை என்பதற்கு நூல் என்ற பெயரும் வழங்கலாயிற்று. இனி, முறை என்ற சொல்லுக்கு நீதி என்ற பொருளும் உள்ளமையால் திருமுறை என்பது தெய்வநீதி என்றும் பொருள் குறிக்கக் காண்கின்றோம். தெய்வ நீதி என்பது இங்கே சைவநீதியாகும். எனவே வைப்பு

முறையால் சைவநீதியைப் புகட்டும் நூல்கள் பன்னிரண்டாக வுள்ளன. இவற்றுள்ளும் மூவர் முதலிகள் பாடியருளிய தேவா ரங்கள் அடங்கன்முறை என்னும் தனிப்பெயரால் வழங்கப்படுகின்றன.

பன்னிரு திருமுறைகளும் தமிழ் வேதம் என்றும் அழைக்கப்பெறும். இவை தனித்து நூல்களாக உள்ளனவேயன்றி கிறித்தவருக்கு இருக்கும் விவிலியத்தைப் போலவோ இசுலாமியருக்கு இருக்கும் திருக்குரானைப் போலவோ ஒரு தொகுப்பாக இல்லை. அதனால் இவற்றின் சில பகுதிகளைத் தெரிவுசெய்து கைக்கு அடக்கமாகச் சைவ அமைப்புகள் அவ்வப்போது வெளியிட்டு வருகின்றன.

## தேவைக்கேற்ற திருமுறைத் திரட்டு

நாமும் கனடியச் சைவ மக்களின் தேவை கருதி 2001ஆம் ஆண்டு 'தேவைக்கேற்ற திருமுறைத் திரட்டு' என்ற பெயரில் ஒரு தொகுப்பை வெளியிட்டோம். பேரவையின் கிளை அமைப் பாகிய ஆத்மஜோதி தியான நிலையம் இதனை வெளியிட்டது. அற்புதங்கள் சார்ந்த தேவாரங்களுக்கு அத்தொகுதியில் முதன்மை அளிக்கப்பட்டது. சைவர்கள் எந்த இடத்தில் எந்தத் தேவாரத்தை ஓதினால் அதிக பயனுண்டாகும் என்பதை அறிந்து கொள்ள அத்தொகுப்புப் பெரிதும் உதவியாக இருந்தது. 2004ல் இரண்டாம் பதிப்பும் வெளியிட வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

## பயன்தரவல்ல திருமுறைப் பாக்கள்

திருமுறை மாநாட்டின் நோக்கம் திருமுறைகளின் அருமை பெருமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வது. சொல்வதோடு நின்றுவிடாது திருமுறைகளை அவர்கள் நாளாந்தம் ஓதுவதற்கு வழிசெய்யும் வகையில் 'பயன்தரவல்ல திருமுறைப் பாக்கள்' என்ற பெயரில் இத்தொகுப்பை இந்து சமயப் பேரவை வெளியிடுகின்றது.

பெயரைப் பார்த்து இத்தொகுப்பில் உள்ளவைதாம் பயனுள்ளவை, மற்றையவை பயனில்லாதவை என்று கருதவேண்டிய தில்லை. திருமுறைப் பாக்கள் எல்லாமே பயனுள்ளவைதாம். குறிப்பாக, நாயன்மார்கள் தேவாரங்களை ஓதுவதனால் ஆகும் பயன்களைச் சொல்லியே பதிகங்களை நிறைவு செய்திருக்கிறார்கள். பயன்கூறும் இறுதிச் செய்யுள் திருக்கடைக்காப்பு எனப்படும்.

‘பயன்தரவல்ல’, ‘தேவைக்கேற்ற’ போன்ற அடைகள் சைவத்தில் அதிக நாட்டம் இல்லாதவர்களையும் திருமுறைபால் ஈர்க்க வல்லன என்ற உளவியல் தந்திரோபாயத்தில் தெரிவு செய்யப்பட்டவையே யன்றி வேறொன்றில்லை.

## சமய நாட்டம்

சைவ சமயத்தில் மட்டுமல்லாது எல்லாச் சமயங்களிலுமே நாட்டம் குன்றிவரும் காலம் இது. மக்களுக்கு நாட்டம் இல்லையென்பதற்காக சமூகப் பொறுப்புள்ளவர்கள் வாழாதிருப்ப தில்லை. பாடாதிருக்க மாட்டாத குயில்களைப்போல சமூக நலன் விரும்பிகளும் மக்களுக்கு நன்மையானவற்றைச் செய்துகொண்டே யிருப்பார்கள்.

நன்மையானவற்றுள் ஆன்மிக வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் வழிகாட்டுவதே தலையாயது.

> தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
> மன்னுயிர் எல்லாம் தொழும்.

என்றார் வள்ளுவர் பெருமான். ஆன்மிக முதிர்ச்சி பிற பிரச்சனைகளைத் தானாகவே தீர்க்க வல்லது என்பதனால் அதுவே முக்கியமாகின்றது.

கனடியத் தமிழர் மத்தியில் பல சமய அமைப்புகள் ஆன்மிகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. எனினும் ஆன்மிகப் பணிகளுக்கு ஆதரவு தருபவர்கள் குறைவாகவே உள்ளனர். அவர்களுக்கு எது நிலையான பயனை அளிக்க வல்லது, எது எதற்கு முதன்மை அளித்தல் வேண்டும் என்பனபோன்றவற்றில் தெளிவு இருப்பதாகத் தெரியவில்லை.
எம்மவர்கள் மத்தியில் இருக்கும் தலையாய குறைபாடு ஒற்றுமை யின்மையேயாகும். இந்த ஒற்றுமையீனம் சமய நிகழ்வுகளிலும் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றது. இக் குழப்பங்கள் பலர் சைவத்தைவிட்டு விலகுவதற்கும் ஒரு வகையில் காரணமாகின்றன.

இத்தகைய சூழ்நிலையிலும் இறையருளை முன்வைத்துப் பலவகையான ஆன்மிகப் பணிகளில் ஈடுபட்டுவரும் இந்து சமயப்

பேரவை அடியார்களைப் பாராட்டுகின்றேன். அவர்களும் சமய வளர்ச்சிக்கு என்னபட்டும் உதவவேண்டும் என்ற உயர்ந்த நோக்கமுள்ள தொழில் அதிபர்களும் தந்துள்ள ஆதரவுடனேயே இந்த மாநாடு நடைபெற வுள்ளது. அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நிறைவாக**

'தேவைக்கேற்ற திருமுறைத் திரட்டு' என்ற தொகுப்பில் இடம் பெறாத பல பாக்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. அதனால் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று ஆதாரமானவை என்பதை அடியார்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தொகுப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பதிப்புகளின் பட்டியல் தொகுப்பின் இறுதியில் தரப்பட்டுள்ளது. அவற்றிலும் சிலவற்றில் அச்சுத் தவறுகள் அவதானிக்கப்பட்டன. முடிந்த அளவுக்கு இதனை ஒரு திருத்தப் பதிப்பாக வெளியிட முயன்றிருக்கிறோம்.

இம்முயற்சியில் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தவர் இந்து சமயப் பேரவையின் இயக்க சக்தியாக விளங்கும் திருமுறைச் செல்வர் திரு. சிவ. முத்துலிங்கமாவர். அவர் திருமுறைகளிலும் அவற்றைப் பாடியருளிய அருளாளர்களிலும் தளராத பக்தியுடையவர். குருபூசைகள், திருமுறை, திருப்புகழ் முற்றோதல், புராண படனம் ஆகியற்றை நடத்துவதில் முன்னின்று உழைப்பவர். அவருக்கு எல்லாம் வல்ல நடராசப் பெருமானின் அருள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. அவருக்கு எனது அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

திருமுறைகளைப் படிப்போம், தீவினைகளை முடிப்போம்!

ஓம் நமச்சிவாய.

- வி. கந்தவனம்

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
## முதலாம் திருமுறை

**1:1. திருப்பிரமபுரம்:** **பண் - நட்டபாடை**

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே. 1

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம் பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால் தொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண் மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரஎன் னுள்ளங் கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய ஓரூ ரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்கு தலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங் கவர்கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்த வரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும் மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம் இதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே. 5

மறைகலந்தஒலி பாடலோடாடல ராகி மழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரஎன் னுள்ளங் கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக் கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே. 6

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச் சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங் கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ் சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம் விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங் கவர்கள்வன்
துயரிலங்கும்உல கிற்பலஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானி வனன்றே. 8

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டா மரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங் கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத் தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே. 9

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூற நெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம் மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே. 10

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கை யலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மா னிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன் னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்த லெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

## 1:6. திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்:
## பண் - நட்டபாடை

### வினாவுரை

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளு மடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 1

நெய்தவழ் மூவெரி காவலோம்பு
நேர்புரி நூன்மறை யாளரேத்த
மைதவழ் மாட மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செய்தவ நான்மறை யோர்களேத்துஞ்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கைதவழ் கூரெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 2

தோலொடு நூலிழை சேர்ந்தமார்பர்
தொகுமறையோர்கள் வளர்த்த செந்தீ
மால்புகை போய்விம்மு மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேல்புல்கு தண்வயற் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கால்புல்கு பைங்கழ லார்க்கஆடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 3

நாமரு கேள்வியர் வேள்வியோவா
நான்மறை யோர்வழி பாடுசெய்ய
மாமரு வும்மணிக் கோயில்மேய
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
தேமரு பூம்பொழிற் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காமரு சீர்மகிழ்ந் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 4

பாடல் முழவும் விழவுமோவாப்
பன்மறை யோரவர் தாம்பரவ
மாட நெடுங்கொடி விண்தடவு
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேடக மாமலர்ச் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காடக மேயிட மாகஆடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 5

புனையழ லோம்புகை யந்தணாளர்
பொன்னடி நாடொறும் போற்றிசைப்ப
மனைகெழு மாடம் மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சினைகெழு தண்வயற் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கனைவளர் கூரெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 6

**ஏழாவது பாடல் இல்லை**

பூண்டங்கு மார்பி னிலங்கைவேந்தன்
பொன்னெடுந் தோள்வரை யாலடர்த்து
மாண்டங்கு நூன்மறை யோர்பரவ
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேண்டங்கு மாமலர்ச் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காண்டங்கு தோள்பெயர்த் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 8

அந்தமு மாதியும் நான்முகனும்
அரவணை யானு மறிவரிய
மந்திர வேதங்க ளோதுநாவர்
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செந்தமி ழோர்கள் பரவியேத்துஞ்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கந்த மகிற்புகை யேகமழுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 9

இலைமரு தேயழ காகநாளும்
இடுதுவர்க் காயொடு சுக்குத்தின்னும்
நிலையமண் தேரரை நீங்கிநின்று
நீதரல் லார்தொழும் மாமருகல்
மலைமகள் தோள்புணர் வாயருளாய்
மாசில்செங் காட்டங் குடியதனுள்
கலைமல்கு தோலுடுத் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 10

நாலுங் குலைக்கமு கோங்குகாழி
ஞானசம் பந்தன் நலந்திகழும்
மாலின் மதிதவழ் மாடமோங்கு
மருகலின் மற்றதன் மேல்மொழிந்த
சேலுங் கயலுந் திளைத்தகண்ணார்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
சூலம்வல் லான்கழலேத்து பாடல்
சொல்லவல் லார்வினை யிலலையாமே. 10

திருச்சிற்றம்பலம்

## 1:10. திருவண்ணாமலை: பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. 1

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே. 2

பீலிம்மயில் பெடையோடுறை பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேனிறை சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழி லண்ணாமலை யண்ணல்
காலன்வலி தொலைசேவடி தொழுவாரென புகழே. 3

உதிரும்மயி ரிடுவெண்டலை கலனாவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவு மெருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை யிளவெண்பிறை முடிமேல்கொள அடிமேல்
அதிருங்கழ லடிகட்கிட மண்ணாமலை யதுவே. 4

மரவஞ்சிலை தரளம்மிகு மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படு மண்ணாமலை யண்ணல்
உரவஞ்சடை யுலவும்புனல் உடனாவதும் ஓரார்
குரவங்கமழ் நறுமென்குழ லுமைபுல்குதல் குணமே. 5

பெருகும்புன லண்ணாமலை பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி யணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ் சடையார்கழல் பரவி
உருகும்மன முடையார்தமக் குறுநோயடை யாவே. 6

கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதையுண்டவை யுருள
எரியாடிய இறைவர்க்கிட மினவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடு மண்ணாமலை யதுவே. 7

ஒளிறூபுலி யதளாடைய னுமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன்னிரா வணனை
அளறூபட அடர்த்தானிட மண்ணாமலை யதுவே. 8

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவாவண மழலாகிய அண்ணாமலை யண்ணல்
தளிராமுலை முறுவல்லுமை தலைவன்னடி சரணே. 9

வேர்வந்துற மாசூர்தர வெயில்நின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர மறையாவரு வாரும்
ஆரம்பர்த முரைகொள்ளன்மின் அண்ணாமலை யண்ணல்
கூர்வெண்மழுப் படையான்நல்ல கழல்சேர்வது குணமே. 10

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவ னண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே. 11

திருச்சிற்றம்பலம்

## 1:98. திருச்சிராப்பள்ளி: பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே. 1

கைம்மகவேந்திக் கடுவனொடூடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே. 2

மந்தம்முழவம் மழலைததும்ப வரைநீழல்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம்மடிக ளடியார்க்கல்ல லில்லையே. 3

துறைமல்குசாரற் சுனைமல்குநீலத் திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியும்பாடுஞ் சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங் கடவுள்ளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள் பெருமானே. 4

கொலைவரையாத கொள்கையர்தங்கள் மதில்மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரைநாளுந் தலைவரல்லாமை யுரைப்பீர்காள்
நிலவரைநீல முண்டதும்வெள்ளை நிறமாமே. 5

வெய்யதண்சாரல் விரிநிறவேங்கைத் தண்போது
செய்யபொன்சேருஞ் சிராப்பள்ளிமேய செல்வனார்
தையலொர்பாக மகிழ்வர்நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங்கொள்வ ராரிவர்செய்கை யறிவாரே. 6

வேயுயர்சாரற் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர்கோயிற் சிராப்பள்ளிமேய செல்வனார்
பேயுயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
தீயுகந்தாடல் திருக்குறிப்பாயிற் றாகாதே. 7

மலைமல்குதோளன் வலிகெடவூன்றி மலரோன்றன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவலவேதஞ் சொலவலகீதஞ் சொல்லுங்கால்
சிலவலபோலுஞ் சிராப்பள்ளிச்சேடர் செய்கையே. 8

அரப்பளியானு மலருறைவானு மறியாமைக்
கரப்புள்ளிநாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேய வார்சடைச்செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீரும்மை யேதிலர்கண்டார் இகழாரே. 9

நாணாதுடைநீத் தோர்களுங்கஞ்சி நாட்காலை
ஊணாப்பகலுண் டோதுவோர்க ளுரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர் பெறுதுமென்பீரெம் பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று சேர்மினே. 10

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகுபாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

## 1:123. திருவலிவலம் - திருவிராகம்:
## பண் - வியாழக்குறிஞ்சி

*திருச்சிற்றம்பலம்*

பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்
ஏவியல் கணைபிணை யெதிர்விழி யுமையவள்
மேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலமுறை யிறையே. 1

இட்டம தமர்பொடி யிசைதலி னசைபெறு
பட்டவிர் பவளநன் மணியென அணிபெறு
விட்டொளிர் திருவுரு வுடையவன் விரைமலர்
மட்டமர் பொழில்வலி வலமுறை யிறையே. 2

உருமலி கடல்கடை வுழியுல கமருயிர்
வெருவுறு வகையெழு விடம்வெளி மலையணி
கருமணி நிகர்கள முடையவன் மிடைதரு
மருமலி பொழில்வலி வலமுறை யிறையே. 3

அனல்நிகர் சடையழ லவியுற வெனவரு
புனல்நிகழ் வதுமதி நனைபொறி யரவமும்
எனநினை வொடுவரு மிதுமெல முடிமிசை
மனமுடை யவர்வலி வலமுறை யிறையே. 4

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. 5

தரைமுத லுலகினி லுயிர்புணர் தகைமிக
விரைமலி குழலுமை யொடுவிர வதுசெய்து
நரைதிரை கெடுதகை யதுஅரு ளினனெழில்
வரைதிகழ் மதில்வலி வலமுறை யிறையே. 6

நலிதரு தரைவர நடைவரு மிடையவர்
பொலிதரு மடவர லியர்மனை யதுபுகு
பலிகொள வருபவ னெழில்மிகு தொழில்வளர்
வலிவரு மதில்வலி வலமுறை யிறையே. 7

இரவண னிருபது கரமெழில் மலைதனின்
இரவண நினைதர வவன்முடி பொடிசெய்து
இரவண மமர்பெய ரருளின னகநெதி
இரவண நிகர்வலி வலமுறை யிறையே. 8

தேனமர் தருமல ரணைபவன் வலிமிகும்
ஏனம தாய்நில மகழரி யடிமுடி
தானனை யாவுரு வுடையவன் மிடைகொடி
வானனை மதில்வலி வலமுறை யிறையே. 9

இலைமலி தரமிகு துவருடை யவர்களும்
நிலைமையி லுணலுடை யவர்களு நினைவது
தொலைவலி நெடுமறை தொடர்வகை யுருவினன்
மலைமலி மதில்வலி வலமுறை யிறையே. 10

மன்னிய வலிவல நகருறை யிறைவனை
இன்னியல் கழுமல நகரிறை யெழில்மறை
தன்னியல் கலைவல தமிழ்விர கனதுறை
உன்னிய வொருவது முயர்பொருள் தருமே. 11

திருச்சிற்றம்பலம்

## 1:130. திருவையாறு: பண் - மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று
அருள் செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே. 1

விடலேறு படநாக மரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர்
பலியென்னு மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியின்
உடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தம்
ஈன்றலைக்குந் திருவையாறே. 2

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காளப் பொழில்நுழைந்து கூர்வாயால்
இறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கானல்
இரைதேருந் திருவையாறே. 3

ஊன்பாயு முடைதலைகொண் டூரூரின்
பலிக்குழல்வா ருமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார்
தழலுருவர் தங்குங்கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கள்தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே. 4

நீரோடு கூவிளமும் நிலாமதியும்
வெள்ளெருக்கும் நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்குங்கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார்வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே. 5

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங் கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே. 6

நின்றுலா நெடுவிசும்பி னெருக்கிவரு
புரமூன்றும் நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோயில்
குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே. 7

அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
அரக்கர்கோன் தலைகள்பத்தும்
மஞ்சாடு தோள்நெரிய அடர்த்தவனுக்கு
அருள்புரிந்த மைந்தர்கோயில்
இஞ்சாய லிளந்தெங்கின் பழம்வீழ
இளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே. 8

மேலோடி விசும்பணவி வியன்நிலத்தை
மிகஅகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவைய்யாறே. 9

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே
ஆளாமின் மேவித்தொண்டீர்
எண்டோளர் முக்கண்ண ரெம்மீசர்
இறைவரினி தமருங்கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவையாறே. 10

அன்னமலி பொழில்புடைசூ ழையாற்றெம்
பெருமானை யந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கால்
ஈசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகில் தவநெறிசென்று
எய்துவார் தாழாதன்றே. 11

திருச்சிற்றம்பலம்

## இரண்டாம் திருமுறை

### 2:11. சீகாழி: பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நல்லானை நான்மறை யோடிய லாறங்கம்
வல்லானை வல்லவர் பால்மலிந் தோங்கிய
சொல்லானைத் தொன்மதிற் காழியே கோயிலாம்
இல்லானை யேத்தநின் றார்க்குள தின்பமே. 1

நம்மான மாற்றி நமக்கரு ளாய்நின்ற
பெம்மானைப் பேயுடன் ஆடல்பு ரிந்தானை
அம்மானை யந்தணர் சேரும ணிகாழி
எம்மானை யேத்தவல் லார்க்கிட ரில்லையே. 2

அருந்தானை யன்புசெய் தேத்தகில் லார்பாற்
பொருந்தானைப் பொய்யடி மைத்தொழில் செய்வாருள்
விருந்தானை வேதிய ரோதிமி டைகாழி
இருந்தானை யேத்துமின் நும்வினை யேகவே. 3

புற்றானைப் புற்றர வம்மரை யின்மிசைச்
சுற்றானைத் தொண்டுசெய் வாரவர் தம்மொடும்
அற்றானை யந்தணர் காழி யமர்கோயில்
பற்றானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே. 4

நெதியானை நெஞ்சிடங் கொள்ளநி னைவார்தம்
விதியானை விண்ணவர் தாம்வியந் தேத்திய
கதியானைக் காருல வும்பொழிற் காழியாம்
பதியானைப் பாடுமின் நும்வினை பாறவே. 5

செப்பான மென்முலை யாளைத் திகழ்மேனி
வைப்பானை வார்கழ லேத்தி நினைவார்தம்
ஒப்பானை யோத முலாவு கடற்காழி
மெய்ப்பானை மேவிய மாந்தர் வியந்தாரே. 6

துன்பானைத் துன்ப மழித்தரு ளாக்கிய
இன்பானை யேழிசை யின்னிலை பேணுவார்
அன்பானை யணிபொழிற் காழிந கர்மேய
நம்பானை நண்ணவல் லார்வினை நாசமே. 7

குன்றானைக் குன்றெடுத் தான்புய நாலைந்தும்
வென்றானை மென்மல ரானொடு மால்தேட
நின்றானை நேரிழை யாளொடுங் காழியுள்
நன்றானை நம்பெரு மானை நணுகுமே. 8

சாவாயும் வாதுசெய் சாவகர் சாக்கியர்
மேவாத சொல்லவை கேட்டுவெ குளேன்மின்
பூவாய கொன்றையி னானைப் புனற்காழிக்
கோவாய கொள்கையி னானடி கூறுமே. 9-10

கழியார்சீ ரோதமல் குங்கடற் காழியுள்
ஒழியாது கோயில்கொண் டானை யுகந்துள்கித்
தழியார்சொல் ஞானசம் பந்தன் தமிழார
மொழிவார்கள் மூவுல கும்பெறு வார்களே. 11

திருச்சிற்றம்பலம்

## 2:18. திருமருகல்: பண் - இந்தளம்

### விடந்தீர்த்த பதிகம்

*திருச்சிற்றம்பலம்*

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே. 1

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவளே சறவே. 2

அறையார் கழலும் மழல்வா யரவும்
பிறையார் சடையும் முடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே. 3

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே. 4

துணிநீ லவண்ணம் முகில்தோன் றியன்ன
மணிநீ லகண்ட முடையாய் மருகல்
கணிநீ லவண்டார் குழலா ளிவள்தன்
அளிநீ லவொண்கண் ணயர்வாக் கினையே. 5

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன் றுடையாய் மருகல்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ அடியா ளிவளே. 6

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவாள் நினைவா ளிரவும் பகலும்
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
தொழுவா ளிவளைத் துயராக் கினையே. 7

இலங்கைக் கிறைவன் விலங்கல் லெடுப்பத்
துலங்கவ் விரலூன் றனுந்தோன் றலனாய்
வலங்கொள் மதில்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் லிவளை யலராக் கினையே. 8

எரியார் சடையும் மடியும் மிருவர்
தெரியா ததொர்தீத் திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியா ளிவளை யயர்வாக் கினையே. 9

அறிவில் சமணும் மலர்சாக் கியரும்
நெறியல் லனசெய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமான்
நெறியார் குழலி நிறைநீக் கினையே. 10

வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தன்பா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. 11

திருச்சிற்றம்பலம்

## 2: 54. திருப்புகலி: பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

உருவார்ந்த மெல்லியலோர் பாகமுடையீ ரடைவோர்க்குக்
கருவார்ந்த வானுலகங் காட்டிக்கொடுத்தல் கருத்தானீர்
பொருவார்ந்த தெண்கடலொண் சங்கந்திளைக்கும் பூம்புகலித்
திருவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. 1

நீரார்ந்த செஞ்சடையீர் நிரையார்கழல்சேர் பாதத்தீர்
ஊரார்ந்த சில்பலியீ ருழைமானுரிதோ லாடையீர்
போரார்ந்த தெண்டிரைசென் றணையுங்கானற் பூம்புகலிச்
சீரார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. 2

அழிமல்கு பூம்புனலு மரவுஞ்சடைமே லடைவெய்த
மொழிமல்கு மாமறையீர் கறையார்கண்டத் தெண்டோளீர்
பொழில்மல்கு வண்டினங்க ளறையுங்கானற் பூம்புகலி
எழில்மல்கு கோயிலே கோயிலாக இருந்தீரே. 3

கையிலார்ந்த வெண்மழுவொன் றுடையீர்கடிய கரியின்தோல்
மயிலார்ந்த சாயல்மட மங்கைவெருவ மெய்போர்த்தீர்
பயிலார்ந்த வேதியர்கள் பதியாய்விளங்கும் பைம்புகலி
எயிலார்ந்த கோயிலே கோயிலாக இசைந்தீரே. 4

நாவார்ந்த பாடலீ ராடலரவ மரைக்கார்த்தீர்
பாவார்ந்த பல்பொருளின் பயன்களானீ ரயன்பேணும்
பூவார்ந்த பொய்கைகளும் வயலுஞ்சூழ்ந்த பொழிற்புகலித்
தேவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. 5

மண்ணார்ந்த மண்முழவந் ததும்பமலையான் மகளென்னும்
பெண்ணார்ந்த மெய்மகிழப் பேணியெரிகொண் டாடினீர்
விண்ணார்ந்த மதியமிடை மாடத்தாரும் வியன்புகலிக்
கண்ணார்ந்த கோயிலே கோயிலாகக் கலந்தீரே. 6

களிபுல்கு வல்லவுண ரூர்மூன்றெரியக் கணைதொட்டீர்
அளிபுல்கு பூமுடியீ ரமரரேத்த அருள்செய்தீர்
தெளிபுல்கு தேனினமு மலருள்விரைசேர் திண்புகலி
ஒளிபுல்கு கோயிலே கோயிலாக வுகந்தீரே. 7

பரந்தோங்கு பல்புகழ்சே ரரக்கர்கோனை வரைக்கீழிட்
டுரந்தோன்றும் பாடல்கேட் டுகவையளித்தீ ருகவாதார்
புரந்தோன்று மும்மதிலு மெரியச்செற்றீர் பூம்புகலி
வரந்தோன்று கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 8

சலந்தாங்கு தாமரைமே லயனுந்தரணி யளந்தானுங்
கலந்தோங்கி வந்திழிந்துங் காணாவண்ணங் கனலானீர்
புலந்தாங்கி ஐம்புலனுஞ் செற்றார்வாழும் பூம்புகலி
நலந்தாங்கு கோயிலே கோயிலாக நயந்தீரே. 9

நெடிதாய வன்சமணும் நிறைவொன்றில்லாச் சாக்கியருங்
கடிதாய கட்டுரையாற் கழறமேலோர் பொருளானீர்
பொடியாரு மேனியினீர் புகலிமறையோர் புரிந்தேத்த
வடிவாருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 10

ஒப்பரிய பூம்புகலி ஓங்குகோயில் மேயானை
அப்பரிசிற் பதியான அணிகொள்ஞான சம்பந்தன்
செப்பரிய தண்டமிழால் தெரிந்தபாடல் இவைவல்லார்
எப்பரிசி லிடர்நீங்கி யிமையோருலகத் திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

## 2:61. திருவெண்காடு: பண் - காந்தாரம்

*திருச்சிற்றம்பலம்*

உண்டாய் நஞ்சை யுமையோர் பங்கா என்றுள்கித்
தொண்டாய்த் திரியு மடியார் தங்கள் துயரங்கள்
அண்டா வண்ண மறுப்பா னெந்தை யூர்போலும்
வெண்டா மரைமேற் கருவண் டியாழ்செய் வெண்காடே. 1

நாதன் நம்மை யாள்வா னென்று நவின்றேத்திப்
பாதம் பன்னாள் பணியு மடியார் தங்கள்மேல்
ஏதந் தீர இருந்தான் வாழு மூர்போலும்
வேதத் தொலியாற் கிளிசொற் பயிலும் வெண்காடே. 2

தண்முத் தரும்பத் தடமூன் றுடையான் றனையுன்னிக்
கண்முத் தரும்பக் கழற்சே வடிகை தொழுவார்கள்
உண்முத் தரும்ப வுவகை தருவா னூர்போலும்
வெண்முத் தருவிப் புனல்வந் தலைக்கும் வெண்காடே. 3

நரையார் வந்து நாளுங் குறுகி நணுகாமுன்
உரையால் வேறா வுள்கு வார்க ளுள்ளத்தே
கரையா வண்ணங் கண்டான் மேவு மூர்போலும்
விரையார் கமலத் தன்ன மருவும் வெண்காடே. 4

பிள்ளைப் பிறையும் புனலுஞ் சூடும் பெம்மானென்(று)
உள்ளத் துள்ளித் தொழுவார் தங்கள் உறுநோய்கள்
தள்ளிப் போக அருளுந் தலைவ னூர்போலும்
வெள்ளைச் சுரிசங் குலவித் திரியும் வெண்காடே. 5

ஒளிகொள் மேனி யுடையா யும்ப ராளீயென்(று)
அளிய ராகி யழுதுற் றூறும் அடியார்கட்
கெளியா னமரர்க் கரியான் வாழு மூர்போலும்
வெளிய வுருவத் தானை வணங்கும் வெண்காடே. 6

கோள்வித் தனைய கூற்றந் தன்னைக் குறிப்பினால்
மாள்வித் தவனை மகிழ்ந்தங் கேத்த மாணிக்காய்
ஆள்வித் தமர ருலக மளிப்பா னூர்போலும்
வேள்விப் புகையால் வான மிருள்கூர் வெண்காடே. 7

வளையார் முன்கை மலையாள் வெருவ வரையூன்றி
முளையார் மதியஞ் சூடி யென்று முப்போதும்
இளையா தேத்த இருந்தா னெந்தை யூர்போலும்
விளையார் கழனிப் பழனஞ் சூழ்ந்த வெண்காடே. 8

கரியா னோடு கமல மலரான் காணாமை
எரியாய் நிமிர்ந்த எங்கள் பெருமா னென்பார்கட்
குரியா னமரர்க் கரியான் வாழு மூர்போலும்
விரியார் பொழிலின் வண்டு பாடும் வெண்காடே. 9

பாடு மடியார் பலருங் கூடிப் பரிந்தேத்த
ஆடு மரவ மசைத்த பெருமா னறிவின்றி
மூட முடைய சமண்சாக் கியர்க ளுணராத
வேட முடைய பெருமான் பதியாம் வெண்காடே. 10

விடையார் கொடியான் மேவி யுறையும் வெண்காட்டைக்
கடையார் மாடங் கலந்து தோன்றுங் காழியான்
நடையா ரின்சொல் ஞானசம் பந்தன் தமிழ்வல்லார்க்
கடையா வினைக ளமர லோக மாள்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

## 2:66. திருஆலவாய்: பண் - காந்தாரம்

## திருநீற்றுப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே. 1

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 4

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந் தவத்தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே. 8

மாலொடு அயனறி யாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமு துண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவாயான் திருநீறே. 10

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீர
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

## 2:85. பொது: பண் - பியந்தைக்காந்தாரம்

## கோளறு பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியோடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன் மங்கை ஒருபாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

## 2:106. திருவலஞ்சுழி: பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே. 1

விண்டொ ழிந்தன நம்முடை வல்வினை விரிகடல் வருநஞ்சம்
உண்டி றைஞ்சுவா னவர்தமைத் தாங்கிய இறைவனை யுலகத்தில்
வண்டு வாழ்குழல் மங்கையொர் பங்கனை வலஞ்சுழி யிடமாகக்
கொண்ட நாதன்மெய்த் தொழில்புரி தொண்டரோ டினிதிருந்
தமையாலே. 2

திருந்த லார்புரந் தீயெழச் செறுவன விறலின்க ணடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில் வருவன மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்து மாவன மந்திர மாவன வலஞ்சுழி யிடமாக
இருந்த நாயக னிமையவ ரேத்திய இணையடித் தலந்தானே. 3

கறைகொள் கண்டத்தர் காய்கதிர் நிறத்தின ரறத்திற
முனிவர்க்கன்(று)
இறைவ ராலிடை நீழலி லிருந்துகந் தினிதருள் பெருமானார்
மறைக ளோதுவர் வருபுனல் வலஞ்சுழி யிடமகிழ்ந் தருகங்கானத்
தறைக ழல்சிலம் பார்க்கநின் றாடிய அற்புத மறியோமே. 4

மண்ணர் நீர்வண் காற்றின ராற்றலா மெரியுரு வொருபாகம்
பெண்ண ராணெனத் தெரிவரு வடிவினர் பெருங்கடற்
பவளம்போல்
வண்ண ராகிலும் வலஞ்சுழி பிரிகிலார் பரிபவர் மனம்புக்க
எண்ண ராகிலு மெனைப்பல இயம்புவ ரிணையடி தொழுவாரே. 5

ஒருவ ராலுவ மிப்பதை யரியதோர் மேனியர் மடமாதர்
இருவ ராதரிப் பார்பல பூதமும் பேய்களு மடையாளம்
அருவ ராததோர் வெண்டலை கைப்பிடித் தகந்தொறும்
பலிக்கென்று
வருவ ரேலவர் வலஞ்சுழி யடிகளே வரிவளை கவர்ந்தாரே. 6

குன்றி யூர்குட மூக்கிடம் வலம்புரங் குலவிய நெய்த்தானம்
என்றிவ் வூர்களி லோமென்று மியம்புவ ரிமையவர் பணிகேட்பார்
அன்றி யூர்தமக் குள்ளன அறிகிலோம் வலஞ்சுழி யரனார்பால்
சென்ற வூர்தனில் தலைப்பட லாமென்று சேயிழை தளர்வாமே. 7

குயிலி னோர்மொழிக் கொடியிடை வெருவுறக் குலவரைப்
பரப்பாய
கயிலை யைப்பிடித் தெடுத்தவன் கதிர்முடி தோளிரு பதுமூன்றி
மயிலி னேரன சாயலோ டமர்ந்தவன் வலஞ்சுழி யெம்மானைப்
பயில வல்லவர் பரகதி காண்பவ ரல்லவர் காணாரே. 8

அழல தோம்பிய அலர்மிசை யண்ணலு மரவணைத்
துயின்றானும்
கழலுஞ் சென்னியுங் காண்பரி தாயவர் மாண்பமர் தடக்கையில்
மழலை வீணையர் மகிழ்திரு வலஞ்சுழி வலங்கொடு பாதத்தால்
சுழலு மாந்தர்கள் தொல்வினை யதனொடு துன்பங்கள்
களைவாரே. 9

அறிவி லாதவன் சமணர்கள் சாக்கியர் தவம்புரிந் தவஞ்செய்வார்
நெறிய லாதன கூறுவர் மற்றவை தேறன்மின் மாறாநீர்
மறியு லாந்திரைக் காவிரி வலஞ்சுழி மருவிய பெருமானைப்
பிறிவி லாதவர் பெறுகதி பேசிடி லளவறுப் பொண்ணாதே. 10

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆத ரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந் தவர்தம்மை
வாதி யாவினை மறுமைக்கு மிம்மைக்கும் வருத்தம்வந்
தடையாவே. 11

திருச்சிற்றம்பலம்

# மூன்றாம் திருமுறை

## 3:4. திருவாவடுதுறை : பண் - காந்தாரபஞ்சமம்

## நாலடிமேல்வைப்பு

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழல் தொழுதெழுவேன்
கடல்தனி லமுதொர்டு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே. 1

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினு முனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே. 2

நனவினுங் கனவினும் நம்பாவுன்னை
மனவினும் வழிபடல் மறவேனம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே. 3

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மல ரடியலா லரற்றாதென்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதி லெரியெழ முனிந்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே. 4

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழ லடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே. 5

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் னடியலா லேத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே. 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலா லரற்றாதென்நா
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யாலெழ விழித்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே. 7

பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
சீருடைக் கழலலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே. 8

உண்ணினும் பசிப்பினு முறங்கினும்நின்
ஒண்மல ரடியலா லுரையாதென்நாக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலு மளப்பரி தாயவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே. 9

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலா லரற்றாதென்நாப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே. 10

அலைபுன லாவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர் நிலமிசை நிலையிலரே. 11

திருச்சிற்றம்பலம்

## 3:22. பொது : பண் - காந்தாரபஞ்சமம்

## பஞ்சாக்கரத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்(று)
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்(கு)
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 2

ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 4

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே. 5

தும்ம லிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. 6

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாள்தொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன அஞ்செ ழுத்துமே. 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்ட மளிப்பன அஞ்செ ழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்(கு)
ஆர்வண மாவன அஞ்செ ழுத்துமே. 9

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன அஞ்செ ழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமில் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே. 11

திருச்சிற்றம்பலம்

## 3:49. பொது: பண் - கௌசிகம்

## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே. 1

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாம நமச்சி வாயவே. 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாம நமச்சி வாயவே. 3

இயமன் தூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாம நமச்சி வாயவே. 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. 5

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே. 6

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாம நமச்சி வாயவே. 7

இலங்கை மன்ன னெடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாம நமச்சி வாயவே. 8

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே. 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
செஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. 10

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

## 3:69. திருக்காளத்தி: பண் - சாதாரி

## திருவிராகம்

*திருச்சிற்றம்பலம்*

வானவர்கள் தானவர்கள் வாதைபட வந்ததொரு மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன் மேவுமலை தன்னைவினவில்
ஏனமின மானினொடு கிள்ளிதினை கொள்ளஎழி லார்கவணினால்
கானவர்த மாமகளிர் கனகமணி விலகுகா ளத்திமலையே. 1

முதுசினவி லவுணர்புரம் மூன்றுமொரு நொடிவரையின் மூளஎரிசெய்
சதுரர்மதி பொதிசடையர் சங்கரர்வி ரும்புமலை தன்னைவினவில்
எதிரெதிர வெதிர்பிணைய எழுபொறிகள் சிதறஎழி லேனமுழுத
கதிர்மணியின் வளரொளிக ளிருளகல நிலவுகா ளத்திமலையே. 2

வல்லைவரு காளியைவ குத்துவலி யாகிமிகு தாரகனைநீ
கொல்லென விடுத்தருள் புரிந்தசிவன் மேவுமலை கூறிவினவில்
பல்பல இருங்கனி பருங்கிமிக வுண்டவை நெருங்கியினமாய்க்
கல்லதிர நின்றுகரு மந்திவிளை யாடுகா ளத்திமலையே. 3

வேயனைய தோளுமையொர் பாகமது வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடில்நட மாடிமலை தன்னைவினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகுநயனம்
காய்கணையி னாலிடந் தீசனடி கூடுகா ளத்திமலையே. 4

மலையின்மிசை தனில்முகில்போல் வருவதொரு மதகரியை
மழைபோல் அலறக்
கொலைசெய்துமை யஞ்சவுரி போர்த்தசிவன் மேவுமலை கூறிவினவில்
அலைகொள்புன லருவிபல சுனைகள்வழி யிழியவயல் நிலவுமுதுவேய்
கலகலென வொளிகொள்கதிர் முத்தமவை சிந்துகா ளத்திமலையே. 5

பாரகம் விளங்கிய பகீரத னருந்தவ முயன்றபணிகண்
டாரருள் புரிந்தலைகொள் கங்கைசடை யேற்றஅரன் மலையைவினவில்
வாரத ரிருங்குறவர் சேவலின் மடுத்தவ ரெரித்தவிறகில்
காரகி லிரும்புகை விசும்புகமழ் கின்றகா ளத்திமலையே. 6

ஆருமெதி ராதவலி யாகியச லந்தரனை யாழியதனால்
ஈரும்வகை செய்தருள் புரிந்தவ னிருந்தமலை தன்னைவினவில்
ஊருமர வம்மொழிகொள் மாமணியு மிழ்ந்தவையு லாவிவரலால்
காரிருள் கடிந்துகன கம்மெனவி ளங்குகா ளத்திமலையே. 7

எரியனைய சுரிமயி ரிராவணனை யீடழிய எழில்கொள்விரலால்
பெரியவரை யூன்றியருள் செய்தசிவன் மேவுமலை பெற்றிவினவில்
வரியசிலை வேடுவர்க ளாடவர்கள் நீடுவரை யூடுவரலால்
கரியினொடு வரியுழுவை யரியினமும் வெருவுகா ளத்திமலையே. 8

இனதளவி லிவனதடி யிணையுமுடி யறிதுமென இகலுமிருவர்
தனதுருவ மறிவரிய சகலசிவன் மேவுமலை தன்னைவினவில்
புனவர்புன மயிலனைய மாதரொடு மைந்தரும ணம்புணரும்நாள்
கனகமென மலர்களணி வேங்கைகள் நிலாவுகா ளத்திமலையே. 9

நின்றுகவ ளம்பலகொள் கையரொடு மெய்யிலிடு போர்வையரும்
நன்றியறி யாதவகை நின்றசிவன் மேவுமலை நாடிவினவில்
குன்றில்மலி துன்றுபொழில் நின்றகுளிர் சந்தின்முறி தின்றுகுலவிக்
கன்றினொடு சென்றுபிடி நின்றுவிளை யாடுகா ளத்திமலையே. 10

காடதிட மாகநட மாடுசிவன் மேவுகா ளத்திமலையை
மாடமொடு மாளிகைகள் நீடுவளர் கொச்சைவய மன்னுதலைவன்
நாடுபல நீடுபுகழ் ஞானசம் பந்தனுரை நல்லதமிழின்
பாடலொடு பாடமிசை வல்லவர்கள் நல்லர்பர லோகமெளிதே. 11

திருச்சிற்றம்பலம்

## 3:101. திருஇராமேச்சுரம்: பண் - பழம்பஞ்சுரம்

*திருச்சிற்றம்பலம்*

திரிதரு மாமணி நாகமாடத் திளைத்தொரு தீயழல்வாய்
நரிகதிக் களரி யேந்தி யாடு நலமே தெரிந்துணர்வார்
எரிகதிர் முத்த மிலங்குகான லிராமேச் சுரமேய
விரிகதிர் வெண்பிறை மல்குசென்னி விமலர் செயுஞ்செயலே. 1

பொறிகிளர் பாம்பரை யார்த்தயலே புரிவோ டுமைபாடத்
தெறிகிள ரப்பெயர்ந் தெல்லியாடுந் திறமே தெரிந்துணர்வார்
எறிகிளர் வெண்டிரை வந்துபேரு மிராமேச் சுரமேய
மறிகிளர் மான்மழுப் புல்குகையெம் மணாளர் செயுஞ்செயலே. 2

அலைவளர் தண்புனல் வார்சடைமே லடக்கி யொருபாகம்
மலைவளர் காதலி பாடஆடி மயக்கா வருமாட்சி
இலைவளர் தாழை முகிழ்வுரியு மிராமேச் சுரமேயார்
தலைவளர் கோலநன் மாலைசூடுந் தலைவர் செயுஞ்செயலே. 3

மாதன நேரிழை யேர்தடங்கண் மலையான் மகள்பாடத்
தேதெரி யங்கையி லேந்தியாடுந் திறமே தெரிந்துணர்வார்
ஏதமி லார்தொழு தேத்திவாழ்த்து மிராமேச் சுரமேயார்
போதுவெண் திங்கள்பைங் கொன்றைசூடும் புனிதர் செயுஞ்செயலே. 4

சூலமோ டொண்மழு நின்றிலங்கச் சுடுகா டிடமாகக்
கோலநன் மாதுடன் பாடஆடுங் குணமே குறித்துணர்வார்
ஏல நறும்பொழில் வண்டுபாடு மிராமேச் சுரமேய
நீலமார் கண்ட முடையவெங்கள் நிமலர் செயுஞ்செயலே. 5

கணைபிணை வெஞ்சிலை கையிலேந்திக் காமனைக் காய்ந்தவர்தாம்
இணைபிணை நோக்கிநல் லாளொடாடு மியல்பின ராகிநல்ல
இணைமலர் மேலன்னம் வைகுகான லிராமேச் சுரமேயார்
அணைபிணை புல்கு கரந்தைசூடு மடிகள் செயுஞ்செயலே. 6

நீரினார் புன்சடை பின்புதாழ நெடுவெண் மதிசூடி
ஊரினார் துஞ்சிருள் பாடியாடு முவகை தெரிந்துணர்வார்
ஏரினார் பைம்பொழில் வண்டுபாடு மிராமேச் சுரமேய
காரினார் கொன்றைவெண் திங்கள்சூடுங் கடவுள்
செயுஞ்செயலே. 7

பொன்திகழ் சுண்ணவெண் ணீறுபூசிப் புலித்தோ லுடையாக
மின்திகழ் சோதியர் பாடலாடல் மிக்கார் வருமாட்சி
என்றுநல் லோர்கள் பரவியேத்து மிராமேச் சுரமேயார்
குன்றினா லன்றரக் கன்தடந்தோ ளடர்த்தார்கொளுங் கொள்கையே. 8

கோவலன் நான்முகன் நோக்கொணாத குழக னழகாய
மேவல னொள்ளெரி யேந்தியாடு மிமையோ ரிறைமெய்ம்மை
ஏவல னார்புகழ்ந் தேத்திவாழ்த்து மிராமேச் சுரமேய
சேவல வெல்கொடி யேந்துகொள்கையெம் மிறைவர் செயுஞ்செயலே. 9

பின்னொடு முன்னிடு தட்டைச்சாத்திப் பிரட்டே திரிவாரும்
பொன்னெடுஞ் சீவரப் போர்வையார்கள் புறங்கூறல் கேளாதே
இன்னெடுஞ் சோலைவண் டியாழ்முரலு மிராமேச் சுரமேய
பன்னெடு வெண்டலை கொண்டுழலும் பரமர் செயுஞ்செயலே. 10

தேவியை வவ்விய தென்னிலங்கை யரையன் திறல்வாட்டி
ஏவியல் வெஞ்சிலை யண்ணல்நண்ணு மிராமேச் சுரத்தாரை
நாவியன் ஞானசம் பந்தன்நல்ல மொழியால் நவின்றேத்தும்
பாவியன் மாலை வல்லாரவர்தம் வினையாயின பற்றறுமே. 11

திருச்சிற்றம்பலம்

## 3:125. திருநல்லூர்ப்பெருமணம்:
### பண் - அந்தாளிகுறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே. 1

தருமண லோதஞ்சேர் தண்கடல் நித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயு நல்லூர்ப்
பெருமணத் தான்பெண்ணோர் பாகங்கொண் டானே. 2

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே. 3

வல்லியந் தோலுடை யார்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத் துரிவிரி கோவணம்
நல்லிய லார்தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கையெம் புண்ணிய னார்க்கே. 4

ஏறுகந் தீரிடு காட்டெரி யாடிவெண்
நீறுகந் தீர்நிறை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீருமை கூறுகந் தீரே. 5

சிட்டப்பட் டார்க்கெளி யான்செங்கண் வேட்டுவப்
பட்டங்கட் டுஞ்சென்னி யான்பதி யாவது
நட்டக்கொட் டாட்டறா நல்லூர்ப் பெருமணத்
திட்டப்பட் டாலொத்தி ராலெம் பிரானிரே. 6

மேகத்த கண்டனெண் டோளன்வெண் ணீற்றுமை
பாகத்தன் பாய்புலித் தோலொடு பந்தித்த
நாகத்தன் நல்லூர்ப் பெருமணத் தான்நல்ல
போகத்தன் யோகத்தை யேபுரிந் தானே. 7

தக்கிருந் தீரன்று தாளா லரக்கனை
உக்கிருந் தொல்க வுயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே. 8

ஏலுந்தண் டாமரை யானு மியல்புடை
மாலுந்தம் மாண்பறி கின்றிலர் மாமறை
நாலுந்தம் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடை யார்க்கே. 9

ஆத ரமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறு வீர்வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய
வேதன தாள்தொழ வீடெளி தாமே. 10

நறும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவல மிலரே. 11

***திருச்சிற்றம்பலம்***

# திருநாவுக்கரசு நாயனார்
## நான்காம் திருமுறை

### 4:11. பொது: பண் - காந்தார பஞ்சமம்

### நமச்சிவாயத் திருப்பதிகம்

*திருச்சிற்றம்பலம்*

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே. 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. 3

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. 4

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே. 5

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறு நல்கு வான்நலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. 6

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே. 7

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்கண் இல்லையே. 10

திருச்சிற்றம்பலம்

## 4:26. திருவதிகை வீரட்டானம்: திருநேரிசை

*திருச்சிற்றம்பலம்*

நம்பனே யெங்கள் கோவே நாதனே யாதி மூர்த்தி
பங்கனே பரம யோகி யென்றென்றே பரவி நாளும்
செம்பொனே பவளக் குன்றே திகழ்மலர்ப் பாதங் காண்பான்
அன்பனே யலந்து போனே னதிகைவீ ரட்ட னீரே. 1

பொய்யினால் மிடைந்த போர்வை புரைபுரை யழுகி வீழ
மெய்யனாய் வாழ மாட்டேன் வேண்டிற்றொன் றைவர் வேண்டார்
செய்யதா மரைக ளன்ன சேவடி யிரண்டுங் காண்பான்
ஐயநா னலந்து போனே னதிகைவீ ரட்ட னீரே. 2

நீதியால் வாழ மாட்டேன் நித்தலுந் தூயே னல்லேன்
ஓதியு முணர மாட்டேன் உன்னையுள் வைக்க மாட்டேன்
சோதியே சுடரே யுன்றன் தூமலர்ப் பாதங் காண்பான்
ஆதியே யலந்து போனே னதிகைவீ ரட்ட னீரே. 3

தெருளுமா தெருள மாட்டேன் தீவினைச் சுற்ற மென்னும்
பொருளுளே யழுந்தி நாளும் போவதோர் நெறியுங் காணேன்
இருளுமா மணிகண் டாநின் னிணையடி யிரண்டுங் காண்பான்
அருளுமா றருள வேண்டு மதிகைவீ ரட்ட னீரே. 4

அஞ்சினா லியற்றப் பட்ட ஆக்கைபெற் றதனுள் வாழும்
அஞ்சினா லடர்க்கப் பட்டிங் குழிதரு மாத னேனை
அஞ்சினா லுய்க்கும் வண்ணங் காட்டினாய்க் கச்சந் தீர்ந்தேன்
அஞ்சினாற் பொலிந்த சென்னி யதிகைவீ ரட்ட னீரே. 5

உறுகயி றூசல் போல வொன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல் போல வந்துவந் துலவு நெஞ்சம்
பெறுகயி றூசல் போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயி றூச லானே னதிகைவீ ரட்ட னீரே. 6

கழித்திலேன் காம வெந்நோய் காதன்மை யென்னும் பாசம்
ஒழித்திலே னூன்கண் நோக்கி யுணர்வெனு மிமைதி றந்து
விழித்திலேன் வெளிறு தோன்ற வினையெனுஞ் சரக்குக் கொண்டேன்
அழித்திலே னயர்த்துப் போனே னதிகைவீ ரட்ட னீரே. 7

மன்றத்துப் புன்னை போல மரம்படு துயர மெய்தி
ஒன்றினா லுணர மாட்டே னுன்னையுள் வைக்க மாட்டேன்
கன்றிய காலன் வந்து கருக்குழி விழுப்ப தற்கே
அன்றினா னலமந் திட்டே னதிகைவீ ரட்ட னீரே. 8

பிணிவிடா ஆக்கை பெற்றேன் பெற்றமொன் றேறு வானே
பணிவிடா இடும்பை யென்னும் பாசனத் தழுந்து கின்றேன்
துணிவிலேன் தூய னல்லேன் தூமலர்ப் பாதங் காண்பான்
அணியனா யறிய மாட்டே னதிகைவீ ரட்ட னீரே. 9

திருவினாள் கொழுந னாருந் திசைமுக முடைய கோவும்
இருவரு மெழுந்தும் வீழ்ந்து மிணையடி காண மாட்டா
ஒருவனே யெம்பி ரானே யுன்திருப் பாதங் காண்பான்
அருவனே யருள வேண்டு மதிகைவீ ரட்ட னீரே. 10

திருச்சிற்றம்பலம்

## 4:29. திருச்செம்பொன்பள்ளி: திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

ஊனினுள் ளுயிரை வாட்டி யுணர்வினார்க் கெளிய ராகி
வானினுள் வான வர்க்கும் அறியலா காத வஞ்சர்
நானெனிற் றானே யென்னு ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனுமின் னமுது மானார் திருச்செம்பொன் பள்ளி யாரே. 1

நொய்யவர் விழுமி யாரு நூலினுள் நெறியைக் காட்டும்
மெய்யவர் பொய்யு மில்லா ருடலெனு மிடிஞ்சில் தன்னில்
நெய்யமர் திரியு மாகி நெஞ்சத்துள் விளக்கு மாகிச்
செய்யவர் கரிய கண்டர் திருச்செம்பொன் பள்ளி யாரே. 2

வெள்ளியர் கரியர் செய்யர் விண்ணவ ரவர்கள் நெஞ்சுள்
ஒள்ளிய ரூழி யூழி யுலகம தேத்த நின்ற
பள்ளியர் நெஞ்சத் துள்ளார் பஞ்சமம் பாடி யாடும்
தெள்ளியார் கள்ளந் தீர்ப்பார் திருச்செம்பொன் பள்ளி யாரே. 3

தந்தையுந் தாயு மாகித் தானவன் ஞான மூர்த்தி
முந்திய தேவர் கூடி முறைமுறை யிருக்குச் சொல்லி
எந்தைநீ சரண மென்றங் கிமையவர் பரவி யேத்தச்
சிந்தையுட் சிவம தானார் திருச்செம்பொன் பள்ளி யாரே. 4

ஆறுடைச் சடையர் போலும் அன்பருக் கன்பர் போலும்
கூறுடை மெய்யர் போலுங் கோளர வரையர் போலும்
நீறுடை யழகர் போலு நெய்தலே கமழு நீர்மைச்
சேறுடைக் கமல வேலித் திருச்செம்பொன் பள்ளி யாரே. 5

ஞாலமு மறிய வேண்டில் நன்றென வாழ லுற்றீர்
காலமுங் கழிய லான கள்ளத்தை ஒழிய கில்லீர்
கோலமும் வேண்டா ஆர்வச் செற்றங்கள் குரோத நீக்கில்
சீலமும் நோன்பு மாவார் திருச்செம்பொன் பள்ளி யாரே. 6

புரிகாலே நேசஞ் செய்ய இருந்தபுண் டரீகத் தாரும்
எரிகாலே மூன்று மாகி யிமையவர் தொழநின் றாரும்
தெரிகாலே மூன்று சந்தி தியானித்து வணங்க நின்று
திரிகாலங் கண்ட வெந்தை திருச்செம்பொன் பள்ளி யாரே. 7

காருடைக் கொன்றை மாலை கதிர்மதி யரவி னோடும்
நீருடைச் சடையுள் வைத்த நீதியார் நீதி யுள்ளார்
பாரொடு விண்ணுமண்ணும் பதினெட்டுக் கணங்க ளேத்தச்
சீரொடு பாட லானார் திருச்செம்பொன் பள்ளி யாரே. 8

ஓவாத மறைவல் லானு மோதநீர் வண்ணன் காணா
மூவாத பிறப்பி லாரு முனிகளா னார்க ளேத்தும்
பூவான மூன்றும் முந்நூற் றறுபது மாகு மெந்தை
தேவாதி தேவ ரென்றுந் திருச்செம்பொன் பள்ளி யாரே. 9

அங்கங்க ளாறு நான்கு மந்தணர்க் கருளிச் செய்து
சங்கங்கள் பாட ஆடுஞ் சங்கரன் மலையெ டுத்தான்
அங்கங்க ளுதிர்ந்து சோர அலறிட அடர்த்து நின்றும்
செங்கண்வெள் ளேற தேறுந் திருச்செம்பொன் பள்ளி யாரே. 10

திருச்சிற்றம்பலம்

## 4:31. திருக்கடவூர்: திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

பொள்ளத்த காய மாயப் பொருளினைப் போக மாதர்
வெள்ளத்தைக் கழிக்க வேண்டில் விரும்புமின் விளக்குத் தூபம்
உ ள்ளத்த திரியொன் றேற்றி யுணருமா றுணர வல்லார்
கள்ளத்தைக் கழிப்பர் போலுங் கடவூர்வீ ரட்ட னாரே. 1

மண்ணிடைக் குரம்பை தன்னை மதித்துநீர் மைய லெய்தில்
விண்ணிடைத் தரும ராசன் வேண்டினால் விலக்கு வாரார்
பண்ணிடைச் சுவைகள் பாடி யாடிடும் பத்தர்க் கென்றுங்
கண்ணிடை மணியர் போலுங் கடவூர்வீ ரட்ட னாரே. 2

பொருந்திய குரம்பை தன்னுட் பொய்ந்நடை செலுத்து கின்றீர்
ஒருத்தனை யுணர மாட்டீ ருள்ளத்திற் கொடுமை நீக்கீர்
வருத்தின களிறு தன்னை வருத்துமா வருத்த வல்லார்
கருத்தினி லிருப்பர் போலுங் கடவூர்வீ ரட்ட னாரே. 3

பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தற்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே. 4

தலக்கமே செய்து வாழ்ந்து தக்கவா றொன்று மின்றி
விலக்குவா ரிலாமை யாலே விளக்கதிற் கோழி போன்றேன்
மலக்குவார் மனத்தி னுள்ளே காலனார் தமர்கள் வந்து
கலக்கநான் கலங்கு கின்றேன் கடவூர்வீ ரட்ட னீரே. 5

பழியுடை யாக்கை தன்னிற் பாழுக்கே நீரி றைத்து
வழியிடை வாழ மாட்டேன் மாயமுந் தெளிய கில்லேன்
அழிவுடைத் தாய வாழ்க்கை யைவரா லலைக்கப் பட்டுக்
கழியிடைத் தோணி போன்றென் கடவூர்வீ ரட்ட னீரே. 6

மாயத்தை யறிய மாட்டேன் மையல்கொள் மனத்த னாகிப்
பேயொத்துக் கூகை யானேன் பிஞ்ஞகா பிறப்பொன் றில்லீ
நேயத்தால் நினைய மாட்டேன் நீதனே நீச னேன்நான்
காயத்தைக் கழிக்க மாட்டேன் கடவூர்வீ ரட்ட னீரே. 7

பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பாழுக்கே நீரி றைத்தேன்
உற்றலால் கயவர் தேறா ரென்னுங்கட் டுரையோ டொத்தேன்
எற்றுளே னென்செய் கேன்நான் இடும்பையால் ஞான மேதுங்
கற்றிலேன் களைகண் காணேன் கடவூர்வீ ரட்ட னீரே. 8

சேலின்நே ரனைய கண்ணார் திறம்விட்டுச் சிவனுக் கன்பாய்ப்
பாலுநற் றயிர்நெய் யோடு பலபல ஆட்டி யென்றும்
மாலினைத் தவிர நின்ற மார்க்கண்டற் காக அன்று
காலனை யுதைப்பர் போலுங் கடவூர்வீ ரட்ட னாரே. 9

முந்துரு விருவ ரோடு மூவரு மாயி னாரும்
இந்திர னோடு தேவ ரிருடிக ளின்பஞ் செய்ய
வந்திரு பதுகள் தோளா லெடுத்தவன் வலியை வாட்டிக்
கந்திரு வங்கள் கேட்டார் கடவூர்வீ ரட்ட னாரே. 10

திருச்சிற்றம்பலம்

## 4: 43. திருக்காஞ்சித் திருமேற்றளி: திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

மறையது பாடிப் பிச்சைக் கென்றகந் திரிந்து வாழ்வார்
பிறையது சடைமு டிமேற் பெய்வளை யாள்தன் னோடுங்
கறையது கண்டங் கொண்டார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
இறையவர் பாட லாடல் இலங்குமேற் றளிய னாரே. 1

மாலன மாயன் தன்னை மகிழ்ந்தனர் விருத்த ராகும்
பாலனார் பசுபதியார் பால்வெள்ளை நீறு பூசிக்
காலனைக் காலாற் செற்றார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏலநற் கடம்பன் தாதை இலங்குமேற் றளிய னாரே. 2

விண்ணிடை விண்ண வர்கள் விரும்பிவந் திறைஞ்சி வாழ்த்தப்
பண்ணிடைச் சுவையின் மிக்க கின்னரம் பாடல் கேட்பார்
கண்ணிடை மணியி னொப்பார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எண்ணிடை யெழுத்து மானா ரிலங்குமேற் றளிய னாரே. 3

சோமனை யரவி னோடு சூழ்தரக் கங்கை சூடும்
வாமனை வான வர்கள் வலங்கொடு வந்து போற்றக்
காமனைக் காய்ந்த கண்ணார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏமநின் றாடு மெந்தை இலங்குமேற் றளிய னாரே. 4

ஊனவ னுயிரி னோடு முலகங்க ளூழி யாகித்
தானவர் தனமு மாகித் தனஞ்சய னோடெ திர்ந்த
கானவர் காள கண்டர் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏனமக் கோடு பூண்டார் ரிலங்குமேற் றளிய னாரே. 5

மாயனாய் மால னாகி மலரவ னாகி மண்ணாய்த்
தேயமாய்த் திசையெட் டாகித் தீர்த்தமாய்த் திரிதர் கின்ற
காயமாய்த் காயத் துள்ளார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏயமென் றோளி பாக ரிலங்குமேற் றளிய னாரே. 6

மண்ணினை யுண்ட மாயன் தன்னையோர் பாகங் கொண்டார்
பண்ணினைப் பாடி யாடும் பத்தர்கள் சித்தங் கொண்டார்
கண்ணினை மூன்றுங் கொண்டார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எண்ணினை யெண்ண வைத்தா ரிலங்குமேற் றளிய னாரே. 7

செல்வியைப் பாகங் கொண்டர் சேந்தனை மகனாகக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையி லாத காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எல்லியை விளங்க நின்றா ரிலங்குமேற் றளிய னாரே. 8

வேறிணை யின்றி யென்றும் விளங்கொளி மருங்கி னாளைக்
கூறியல் பாகம் வைத்தார் கோளரா மதியும் வைத்தார்
ஆறினைச் சடையுள் வைத்தா ரணிபொழிற் கச்சி தன்னுள்
ஏறினை யேறு மெந்தை யிலங்குமேற் றளிய னாரே. 9

தென்னவன் மலையெ டுக்கச் சேயிழை நடுங்கக் கண்டு
மன்னவன் விரலா லூன்ற மணிமுடி நெரிய வாயால்
கன்னலின் கீதம் பாடக் கேட்டவர் காஞ்சி தன்னுள்
இன்னவற் கருளிச் செய்தா ரிலங்குமேற் றளிய னாரே. 10

திருச்சிற்றம்பலம்

## 4:49. திருக்குறுக்கை வீரட்டம்: திருநேரிசை

*திருச்சிற்றம்பலம்*

ஆதியிற் பிரம னார்தாம் அர்ச்சித்தா ரடியி ணைக்கீழ்
ஓதிய வேத நாவ ருணருமா றுணர லுற்றார்
சோதியுட் சுடராய்த் தோன்றிச் சொல்லினை யிறந்தார் பல்பூக்
கோதிவண் டறையுஞ் சோலைக்குறுக்கைவீ ரட்ட னாரே. 1

நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித் தாட்டும் அந்தண னாரைக் கொல்வான்
சாற்றுநா ளற்ற தென்று தருமரா சற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே. 2

தழைத்ததோ ராத்தி யின்கீழ்த் தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக் கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. 3

சிலந்தியும் ஆனைக் காவிற் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே கோச்செங்க ணானு மாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே. 4

ஏறுட னேழ டர்த்தா னெண்ணியா யிரம்பூக் கொண்டு
ஆறுடைச் சடையி னானை அர்ச்சித்தா னடியி ணைக்கீழ்
வேறுமோர் பூக்கு றைய மெய்ம்மலர்க் கண்ணை மிண்டக்
கூறுமோ ராழி யீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. 5

கல்லினா லெறிந்து கஞ்சி தாமுணுஞ் சாக்கியனார்
நெல்லினார் சோறு ணாமே நீள்விசும் பாள வைத்தார்
எல்லியாங் கெரிகை யேந்தி எழில்திகழ் நட்ட மாடிக்
கொல்லியாம் பண்ணு கந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. 6

காப்பதோர் வில்லும் அம்புங் கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீ ரொழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்ட னாரே. 7.

நிறைமறைக் காடு தன்னில் நீண்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவா னுலக மெல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்டனாரே. 8

அணங்குமை பாக மாக அடக்கிய ஆதி மூர்த்தி
வணங்குவா ரிடர்கள் தீர்க்கும் மருந்துநல் லருந்த வத்த
கணம்புல்லர்க் கருள்கள் செய்து காதலா மடியார்க் கென்றுங்
குணங்களைக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே. 9

எடுத்தன னெழிற்கயிலை இலங்கையர் மன்னன் தன்னை
அடுத்தொரு விரலா லூன்ற அலறிப்போ யவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைந ரம்பால் வேதகீ தங்கள் பாடக்
கொடுத்தனர் கொற்ற வாணாள் குறுக்கைவீ ரட்ட னாரே. 10

திருச்சிற்றம்பலம்

## 4:52. திருஆரூர்: திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

படுகுழிப் பவ்வத் தன்ன பண்டியைப் பெய்த வாற்றால்
கெடுவதிம் மனிதர் வாழ்க்கை காண்டொறுங் கேது கின்றேன்
முடுகுவ ரிருந்துள் ஐவர் மூர்க்கரே யிவர்க ளோடும்
அடியனேன் வாழ மாட்டே னாரூர்மூ லட்ட னீரே. 1

புழுப்பெய்த பண்டி தன்னைப் புறமொரு தோலான் மூடி
ஒழுக்கறா ஒன்பதுவா யொற்றுமை யொன்று மில்லை
சழக்குடை யிதனு ளைவர் சங்கடம் பலவுஞ் செய்ய
அழிப்பனாய் வாழ மாட்டே னாரூர்மூ லட்ட னீரே. 2

பஞ்சின்மெல் லடியி னார்கள் பாங்கரா யவர்கள் நின்று
நெஞ்சில்நோய் பலவுஞ் செய்து நினையினும் நினைய வொட்டார்
நஞ்சணி மிடற்றி னானே நாதனே நம்ப னேநான்
அஞ்சினேற் கஞ்ச லென்னீ ராரூர்மூ லட்ட னீரே. 3

கெண்டையந் தடங்கண் நல்லார் தம்மையே கெழும வேண்டிக்
குண்டராய்த் திரிதந் தைவர் குலைத்திடர்க் குழியில் நூக்கக்
கண்டுநான் தரிக்க கில்லேன் காத்துக்கொள் கறைசேர் கண்டா
அண்டவா னவர்கள் போற்று மாரூர்மூ லட்ட னீரே. 4

தாழ்குழ லின்சொல் நல்லார் தங்களைத் தஞ்ச மென்று
ஏழையே னாகி நாளு மென்செய்கே னெந்தை பெம்மான்
வாழ்வதே லரிது போலும் வைகலு மைவர் வந்து
ஆழ்குழிப் படுத்த ஆற்றே னாரூர்மூ லட்ட னீரே. 5

மாற்றமொன் றருள கில்லீர் மதியிலேன் விதியி லாமை
சீற்றமுந் தீர்த்தல் செய்யீர் சிக்கன வுடைய ராகிக்
கூற்றம்போ லைவர் வந்து குலைத்திட்டுக் கோகு செய்ய
ஆற்றவுங் கில்லேன் நாயே னாரூர்மூ லட்ட னீரே. 6

உயிர்நிலை யுடம்பே காலா உள்ளமே தாழி யாகத்
துயரமே யேற்ற மாகத் துன்பக்கோ லதனைப் பற்றிப்
பயிர்தனைச் சுழிய விட்டுப் பாழ்க்குநீ ரிறைத்து மிக்க
அயர்வினா லைவர்க் காற்றே னாரூர்மூ லட்ட னீரே. 7

கற்றதே லொன்று மில்லைக் காரிகை யாரோ டாடிப்
பெற்றதேற் பெரிதுந் துன்பம் பேதையேன் பிழைப்பி னாலே
முற்றினா லைவர் வந்து முறைமுறை துயரஞ் செய்ய
அற்றுநா னலந்து போனே னாரூர்மூ லட்ட னீரே. 8

பத்தனாய் வாழ மாட்டேன் பாவியேன் பரவி வந்து
சித்தத்து ளைவர் தீய செய்வினை பலவுஞ் செய்ய
மத்துறு தயிரே போல மறுகுமென் னுள்ளந் தானும்
அத்தனே யமரர் கோவே யாரூர்மூ லட்ட னீரே. 9

தடக்கைநா லைந்து கொண்டு தடவரை தன்னைப் பற்றி
எடுத்தவன் பேர்க்க வோடி யிரிந்தன பூத மெல்லாம்
முடித்தலை யனைத்துந் தோளும் முறிதர இறையே யூன்றி
அடர்த்தருள் செய்த தென்னே யாரூர்மூ லட்ட னீரே. 10

*திருச்சிற்றம்பலம்*

## 4:54. திருப்புகலூர்: திருநேரிசை

*திருச்சிற்றம்பலம்*

பகைத்திட்டார் புரங்கள் மூன்றும் பாறிநீ றாகி வீழப்
புகைத்திட்ட தேவர் கோவே பொறியிலே னுடலந் தன்னுள்
அகைத்திட்டங் கதனை நாளும் ஐவர்கொண் டாட்ட வாடித்
திகைத்திட்டேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 1

மையரி மதர்த்த வொண்கண் மாதரார் வலையிற் பட்டுக்
கையெரி சூல மேந்துங் கடவுளை நினைய மாட்டேன்
ஐநெரிந் தகமி டற்றே யடைக்கும்போ தாவி யார்தாம்
செய்வதொன் றறிய மாட்டேன் திருப்புக லூர னீரே. 2

முப்பது முப்பத் தாறு முப்பது மிடுகு ரம்பை
அப்பர்போ லைவர் வந்து அதுதரு கிதுவி டென்று
ஒப்பவே நலிய லுற்றா லுய்யுமா றறிய மாட்டேன்
செப்பமே திகழு மேனித் திருப்புக லூர னீரே. 3

பொறியிலா அழுக்கை யோம்பிப் பொய்யினை மெய்யென் றெண்ணி
நெறியலா நெறிகள் சென்றேன் நீதனே நீதி யேதும்
அறிவிலே னமரர் கோவே அமுதினை மனனில் வைக்குஞ்
செறிவிலேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 4

அளியினார் குழலி னார்க ளவர்களுக் கன்ப தாகிக்
களியினார் பாட லோவாக் கடவூர்வீ ரட்ட மென்னுந்
தளியினார் பாத நாளும் நினைவிலாத் தகவில் நெஞ்சந்
தெளிவிலேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 5

இலவினார் மாதர் பாலே இசைந்துநா னிருந்து பின்னும்
நிலவுநாள் பலவென் றெண்ணி நீதனேன் ஆதி யுன்னை
உலவிநா னுள்க மாட்டே னுன்னடி பரவு ஞானஞ்
செலவிலேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 6

காத்திலே னிரண்டும் மூன்றுங் கல்வியே லில்லை யென்பால்
வாய்த்திலே னடிமை தன்னுள் வாய்மையால் தூயே னல்லேன்
பார்த்தனுக் கருள்கள் செய்த பரமனே பரவு வார்கள்
தீர்த்தமே திகழும் பொய்கைத் திருப்புக லூர னீரே. 7

நீருமாய்த் தீயு மாகி நிலனுமாய் விசும்பு மாகி
ஏருடைக் கதிர்க ளாகி யிமையவ ரிறைஞ்ச நின்று
ஆய்வதற் கரிய ராகி யங்கங்கே யாடு கின்ற
தேவர்க்குந் தேவ ராவார் திருப்புக லூர னாரே. 8

மெய்யுளே விளக்கை யேற்றி வேண்டள வுயரத் தூண்டி
உய்வதோ ருபாயம் பற்றி உகக்கின்றே னுகவா வண்ணம்
ஐவரை யகத்தே வைத்தீ ரவர்களே வலியர் சாலச்
செய்வதொன் றறிய மாட்டேன் திருப்புக லூர னீரே. 9

அருவரை தாங்கி னானும் அருமறை யாதி யானும்
இருவரு மறிய மாட்டா ஈசனா ரிலங்கை வேந்தன்
கருவரை யெடுத்த ஞான்று கண்வழி குருதி சோரத்
திருவிரல் சிறிது வைத்தார் திருப்புக லூர னாரே. 10

திருச்சிற்றம்பலம்

## 4:61. திரு இராமேச்சுரம்: திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

பாசமுங் கழிக்க கில்லா அரக்கரைப் படுத்துத் தக்க
வாசமிக் கலர்கள் கொண்டு மதியினால் மால்செய் கோயில்
நேசமிக் கன்பி னாலே நினைமின்நீர் நின்று நாளுந்
தேசமிக் கானி ருந்த திருவிரா மேச்சு ரம்மே. 1

முற்றின நாள்க ளென்று முடிப்பதே கார ணம்மாய்
உற்றவன் போர்க ளாலே யுணர்விலா வரக்கர் தம்மைச்
செற்றமால் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தைப்
பற்றிநீ பரவு நெஞ்சே படர்சடை யீசன் பாலே. 2

கடலிடை மலைகள் தம்மா லடைத்துமால் கருமம் முற்றித்
திடலிடைச் செய்த கோயிற் றிருவிரா மேச்சு ரத்தைத்
தொடலிடை வைத்து நாவிற் சுழல்கின்றென் தூய்மை யின்றி
உடலிடை நின்றும் பேரா ஐவராட் டுண்டு நானே. 3

குன்றுபோற் றோளு டைய குணமிலா வரக்கர் தம்மைக்
கொன்றுபோ ராழி யம்மால் வேட்கையாற் செய்த கோயில்
நன்றுபோல் நெஞ்ச மேநீ நன்மையை யறிதி யாயில்
சென்றுநீ தொழுதுய் கண்டாய் திருவிரா மேச்சு ரம்மே. 4

வீரமிக் கெயிறு காட்டி விண்ணுற நீண்ட ரக்கன்
கூரமிக் கவனைச் சென்று கொன்றுடன் கடற்ப டுத்துத்
தீரமிக் கானி ருந்த திருவிரா மேச்சு ரத்தைக்
கோரமிக் கார்த வத்தாற் கூடுவார் குறிப்பு ளாரே. 5

ஆர்வலம் நம்மின் மிக்கா ரென்றவவ் வரக்கர் கூடிப்
போர்வலஞ் செய்து மிக்குப் பொருதவர் தம்மை வீட்டித்
தேர்வலஞ் செற்ற மால்செய் திருவிரா மேச்சு ரத்தைச்
சேர்மட நெஞ்ச மேநீ செஞ்சடை யெந்தை பாலே. 6

வாக்கினா லின்பு ரைத்து வாழ்கிலார் தம்மை யெல்லாம்
போக்கினாற் புடைத்த வர்க ளுயிர்தனை யுண்டு மால்தான்
தேக்குநீர் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தை
நோக்கினால் வணங்கு வார்க்கு நோய்வினை நுணுகு மன்றே. 7

பலவுநாள் தீமை செய்து பார்தன்மேற் குழுமி வந்து
கொலைவிலார் கொடிய ராய வரக்கரைக் கொன்று வீழ்த்த
சிலையினான் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தைத்
தலையினால் வணங்கு வார்கள் தாழ்வராந் தவம தாமே. 8

கோடிமா தவங்கள் செய்து குன்றினார் தம்மை யெல்லாம்
வீடவே சக்கரத்தா லெறிந்துபின் னன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தை
நாடிவாழ் நெஞ்ச மேநீ நன்னெறி யாகு மன்றே. 9

வன்கண்ணர் வாள ரக்கர் வாழ்வினை அறியார் ஒன்றும்
புன்கண்ண ராகி நின்று போர்கள்செய் தாரை மாட்டிச்
செங்கண்மால் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தைத்
தங்கணா லெய்த வல்லார் தாழ்வராந் தலைவன் பாலே. 10

வரைகளொத் தேயு யர்ந்த மணிமுடி யரக்கர் கோனை
விரையமுற் றறவொ டுக்கி மீண்டுமால் செய்த கோயில்
திரைகள்முத் தால்வ ணங்குந் திருவிரா மேச்சு ரத்தை
உரைகள்பத் தாலு ரைப்பா ருள்குவா ரன்பி னாலே. 11

திருச்சிற்றம்பலம்

## 4:67. திருக்கொண்டீச்சரம்: திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

வரைகிலேன் புலன்க ளைந்தும் வரைகிலாப் பிறவி மாயப்
புரையிலே யடங்கி நின்று புறப்படும் வழியுங் காணேன்
அரையிலே மிளிரு நாகத் தண்ணலே யஞ்ச லென்னாய்
திரையுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து ளானே. 1

தொண்டனேன் பிறந்து வாளா தொல்வினைக் குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து நைந்து போர்வதோர் வழியுங் காணேன்
அண்டனே யண்ட வாணா அறிவனே யஞ்ச லென்னாய்
தெண்டிரைப் பழனஞ் சூழ்ந்த திருக்கொண்டீச் சரத்து ளானே. 2

கால்கொடுத் தெலும்பு மூட்டிக் கதிர்நரம் பாக்கை யார்த்துத்
தோலுடுத் துதிரமட்டித் தொகு மயிர் மேய்ந்த கூரை
ஓலெடுத் துழைஞர் கூடி யொளிப்பதற் கஞ்சு கின்றேன்.
சேலுடைப் பழனஞ் சூழ்ந்த திருக்கொண்டீச் சரத்து ளானே. 3

கூட்டமா யைவர் வந்து கொடுந்தொழிற் குணத்த ராகி
ஆட்டுவார்க் காற்ற கில்லே னாடர வசைத்த கோவே
காட்டிடை யரங்க மாக ஆடிய கடவு ளேயோ
சேட்டிரும் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து ளானே. 4

பொக்கமாய் நின்ற பொல்லாப் புழுமிடை முடைகொ ளாக்கை
தொக்குநின் றைவர் தொண்ணூற் றறுவருந் துயக்க மெய்த
மிக்குநின் றிவர்கள் செய்யும் வேதனைக் கலந்து போனேன்
செக்கரே திகழும் மேனித் திருக்கொண்டீச் சரத்து ளானே. 5

ஊனுலா முடைகொ ளாக்கை யுடைகல மாவ தென்றும்
மானுலா மழைக்க ணார்தம் வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
நாளெலா மினைய கால நண்ணிலே னெண்ண மில்லேன்
தேனுலாம் பொழில்கள் சூழ்ந்த திருக்கொண்டீச் சரத்து ளானே. 6

காணிரு மருங்கு நீண்ட சழக்குடைப் பதிக்கு நாதர்
வாணிக ரைவர் தொண்ணூற் றறுவரும் மயக்கஞ் செய்து
பேணிய பதியின் நின்று பெயரும்போ தறிய மாட்டேன்
சேணுயர் மாட நீடு திருக்கொண்டீச் சரத்து ளானே. 7

பொய்ம்மறித் தியற்றி வைத்துப் புலால்கமழ் பண்டம் பெய்து
மைம்மறித் தியற்றி யன்ன பாங்கிலாக் குரம்பை நின்று
கைம்மறித் தனைய வாவி கழியும்போ தறிய மாட்டேன்
செந்நெறிச் செலவு காணேன் திருக்கொண்டீச் சரத்து ளானே. 8

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளுங் குறிக்கோளி லாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து ளானே. 9

விரைதரு கருமென் கூந்தல் விளங்கிழை வேலொண் கண்ணாள்
வெருவர இலங்கைக் கோமான் விலங்கலை யெடுத்த ஞான்று
பருவரை யனைய தோளும் முடிகளும் பாறி வீழத்
திருவிர லூன்றி னானே திருக்கொண்டீச் சரத்து ளானே. 10

திருச்சிற்றம்பலம்

## 4:94. திருப்பாதிரிப் புலியூர்: திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே. 1

பற்றாய் நினைந்திடப் போதுநெஞ் சேயிந்தப் பாரைமுற்றும்
சுற்றா யலைகடல் மூடினுங் கண்டேன் புகல்நமக்கு
உற்றா னுமையவட் கன்பன் திருப்பா திரிப்புலியூர்
முற்றா முளைமதிக் கண்ணியி னான்றன் மொய்கழலே. 2

விடையான் விரும்பியென் னுள்ளத் திருந்தான் இனிநமக்கிங்
கடையா அவலம் அருவினை சாரா நமனையஞ்சோம்
புடையார் கமலத் தயன்போல் பவர்பா திரிப்புலியூர்
உடையா னடியா ரடியடி யோங்கட் கரியதுண்டே. 3

மாயமெல் லாமுற்ற விட்டிருள் நீங்க மலைமகட்கே
நேயம் நிலாவ இருந்தா னவன்றன் திருவடிக்கே
தேய மெல்லாநின் றிறைஞ்சுந் திருப்பா திரிப்புலியூர்
மேயநல் லான்மலர்ப் பாதமென் சிந்தையுள் நின்றனவே. 4

வைத்த பொருள்நமக் காமென்று சொல்லி மனத்தடைத்துச்
சித்த மொருக்கிச் சிவாய நமவென் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திரிப்புலியூர்
அத்த னருள்பெற லாமோ அறிவிலாப் பேதைநெஞ்சே. 5

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றே னுனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே. 6

எண்ணா தமர ரிரக்கப் பரவையுள் நஞ்சை யுண்டாய்
திண்ணா ரசுரர் திரிபுரந் தீயெழச் செற்றவனே
பண்ணார்ந் தமைந்த பொருள்கள் பயில்பா திரிப்புலியூர்
கண்ணார் நுதலாய் கழல்நங் கருத்தி லுடையனவே. 7

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே. 8

மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினு மஞ்சல்நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோந் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே. 9

திருந்தா அமணர்தந் தீநெறிப் பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா அரக்க னுடல்நெரித் தாய்பா திரிப்புலியூர்
இருந்தா யடியே னினிப்பிற வாமல்வந் தேன்றுகொள்ளே. 10

திருச்சிற்றம்பலம்

# ஐந்தாம் திருமுறை

## 5:10. திருமறைக்காடு: திருக்குறுந்தொகை

*திருச்சிற்றம்பலம்*

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1

ஈண்டு செஞ்சடை யாகத்து ளீசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீ்ண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 2

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே. 3

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. 4

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழ லேத்தரோ
விலையில் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. 5

பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. 6

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி யணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 10

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

## 5:21. திருஇன்னம்பர்: திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே. 1

மட்டுண் பார்கள் மடந்தையர் வாட்கண்ணால்
கட்டுண் பார்கள் கருதுவ தென்கொலோ
தட்டி முட்டித் தள்ளாடித் தழுக்குழி
எட்டு மூர்த்திய ரின்னம்ப ரீசனே. 2

கனலுங் கண்ணியுந் தண்மதி யோடுடன்
புனலுங் கொன்றையுஞ் சூடும் புரிசடை
அனலுஞ் சூலமும் மான்மறிக் கையினர்
எனலு மென்மெனத்தின்னம்ப ரீசனே. 3

மழைக்கண் மாமயி லாலு மகிழ்ச்சியான்
அழைக்குந் தன்னடி யார்கள்த மன்பினைக்
குழைக்குந் தன்னைக் குறிக்கொள வேண்டியே
இழைக்கு மென்மெனத் தின்னம்ப ரீசனே. 4

தென்ன வன்னெனை யாளுஞ் சிவனவன்
மன்ன வன்மதி யம்மறை யோதியான்
முன்ன மன்னவன் சேர்வன பூழியான்
இன்னம் இன்புற்ற வின்னம்ப ரீசனே. 5

விளக்கும் வேறு படப்பிற ருள்ளத்தில்
அளக்குந் தன்னடி யார்மனத் தன்பினைக்
குளக்கு மென்னைக் குறிக்கொள வேண்டியே
இளக்கு மென்மனத் தின்னம்ப ரீசனே. 6

சடைக்க ணாள்புன லாள்அனல் கையதோர்
கடைக்க ணால்மங்கை நோக்கிம வான்மகள்
படைக்க ணால்பரு கப்படு வான்நமக்
கிடைக்க ணாய்நின்ற வின்னம்ப ரீசனே. 7

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே. 8

விரியுந் தண்ணிள வேனிலில் வெண்பிறை
புரியுங் காமனை வேவப் புருவமும்
திரியு மெல்லையில் மும்மதில் தீயெழுந்
தெரிய நோக்கிய வின்னம்ப ரீசனே. 9

சனியும் வெள்ளியுந் திங்களும் ஞாயிறும்
முனிவ னாய்முடி பத்துடை யான்றனைக்
கனிய வூன்றிய காரண மென்கொலோ
இனிய னாய்நின்ற வின்னம்ப ரீசனே. 10

திருச்சிற்றம்பலம்

## 5:99. பாவநாசத் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பாவ மும்பழி பற்றற வேண்டுவீர்
ஆவில் அஞ்சுகந் தாடு மவன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந் துள்குமின்
காவ லாளன் கலந்தருள் செய்யுமே. 1

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே. 2

பட்ட ராகிலென் சாத்திரங் கேட்கிலென்
இட்டு மட்டியு மீதொழில் பூணிலென்
எட்டு மொன்று மிரண்டு மறியிலென்
இட்ட மீச னெனாதவர்க் கில்லையே. 3

வேத மோதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்மோ ராறு முணரிலென்
ஈச னையுள்கு வார்க்கன்றி யில்லையே. 4

காலை சென்று கலந்துநீர் மூழ்கிலென்
வேலை தோறும் விதிவழி நிற்கிலென்
ஆலை வேள்வி யடைந்தது வேட்கிலென்
ஏல ஈசனென் பார்கன்றி யில்லையே. 5

கான நாடு கலந்து திரியிலென்
ஈன மின்றி யிரும்தவஞ் செய்யிலென்
ஊனை யுண்ட லொழிந்துவான் நோக்கிலென்
ஞான னென்பவர்க் கன்றிநன் கில்லையே. 6

கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லயே. 7

நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்
குன்ற மேறி இருந்தவஞ் செய்யிலென்
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்
என்று மீசனென் பார்க்கன்றி யில்லையே. 8

கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே. 9

மற்று நற்றவஞ் செய்து வருந்திலென்
பொற்றை யுற்றெடுத் தானுடல் புக்கிறக்
குற்ற நற்குரை யார்கழற் சேவடி
பற்றி லாதவர்க் குப்பய னில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

## ஆறாம் திருமுறை

### 6:8. திருக்காளத்தி: திருத்தாண்டகம்

விற்றூணொன் றில்லாத நல்கூர்ந் தான்காண்
வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சை யல்லால்
மற்றூணொன் றில்லாத மாசது ரான்காண்
மயானத்து மைந்தன்காண் மாசொன் றில்லாப்
பொற்றூண்காண் மாமணிநற் குன்றொப் பான்காண்
பொய்யாது பொழிலேழுந் தாங்கி நின்ற
கற்றூண்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காண்அவனென் கண்ணுள் ளானே. 1

இடிப்பான்காண் என்வினையை ஏகம் பன்காண்
எலும்பா பரணன்காண் எல்லாம் முன்னே
முடிப்பான்காண் மூவுலகு மாயி னான்காண்
முறைமையால் ஐம்புரியும் வழுவா வண்ணம்
படித்தான் தலையறுத்த பாசு பதன்காண்
பராய்த்துறையான் பழனம்பைஞ் ஞீலி யான்காண்
கடித்தார் கமழ்கொன்றைக் கண்ணி யான்காண்
காளத்தி யானவனென் கண்ணுள் ளானே. 2

நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன் தான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் தான்காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க் கெல்லாம்
காரணன்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காண்அவனென் கண்ணுள் ளானே. 3

செற்றான்காண் என்வினையைத் தீயா டீகாண்
திருவொற்றி யூரான்காண் சிந்தை செய்வார்க்
குற்றான்காண் ஏகம்பம் மேவி னான்காண்
உமையாள்நற் கொழுநன்காண் இமையோ ரேத்தும்
சொற்றான்காண் சோற்றுத் துறையு ளான்காண்
சுறாவேந்தன் ஏவலத்தை நீறா நோக்கக்
கற்றான்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன்காண் அவனென் கண்ணுள் ளானே. 4

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணுள் ளானே. 5

எல்லாம்முன் றோன்றாமே தோன்றி னான்காண்
ஏகம்பம்மேயான் காண் இமையோ ரேத்தப்
பொல்லாப் புலனைந்தும் போக்கி னான்காண்
புரிசடைமேற் பாய்கங்கை பூரித் தான்காண்
நல்லவிடை மேல்கொண்டு நாகம் பூண்டு
நளிர்சிரமொன் றேந்தியோர் நாணா யற்ற
கல்லாடை மேல்கொண்ட காபாலி தான்காண்
காளத்தி யானவனென் கண்ணுள் ளானே. 6

கரியுருவு கண்டத்தெங் கண்ணு ளான்காண் கண்டன்காண்
வண்டுண்ட கொன்றை யான்காண்
எரிபவள வண்ணன்காண் ஏகம் பன்காண் எண்டிசையுந்
தானாய குணத்தி னான்காண்
திரிபுரங்கள் தீயிட்ட தீயா டிகாண்
தீவினைகள் தீர்த்திடுமென் சிந்தை யான்காண்
கரியுரிவை போர்த்துகந்த காபாலி தான்காண்
காளத்தி யானவனென் கண்ணுள் ளானே. 7

இல்லாடிச் சில்பரிசென் றேற்கின் றான்காண்
இமையவர்கள் தொழுதிறைஞ்ச இருக்கின் றான்காண்
வில்லாடி வேடனா யோடி னான்காண்
வெண்ணூலுஞ் சேர்ந்த அகலத் தான்காண்
மல்லாடு திரள்தோண்மேல் மழுவா ளன்காண்
மலைமகள்தன் மணாளன்காண் மகிழ்ந்து முன்னாள்
கல்லாலின் கீழிருந்த காபாலி தான்காண்
காளத்தி யானவனென் கண்ணுள் ளானே. 8

தேனப்பூ வண்டுண்ட கொன்றை யான்காண்
திருவேகம் பத்தான்காண் தேனார்ந் துக்க
ஞானப்பூங் கோதையாள் பாகத் தான்காண்
நம்பன்காண் ஞானத் தொளியா னான்காண்
வானப்பே ரூரு மறிய வோடி
மட்டித்து நின்றான்காண் வண்டார் சோலைக்
கானப்பே ரூரான்காண் கறைக்கண் டன்காண்
காளத்தி யானவனென் கண்ணுள் ளானே. 9

இறையவன்கா ணேழுலகு மாயி னான்காண்
ஏழ்கடலுஞ் சூழ்மலையு மாயி னான்காண்
குறையுடையார் குற்றேவல் கொள்வான் தான்காண்
குடமூக்கிற் கீழ்க்கோட்டம் மேவி னான்காண்
மறையுடைய வானோர் பெருமான் தான்காண்
மறைக்காட் டுறையு மணிகண் டன்காண்
கறையுடைய கண்டத்தெங் காபா லிகாண்
காளத்தி யானவனென் கண்ணுள் ளானே. 10

உண்ணா வருநஞ்ச முண்டான் தான்காண்
ஊழித்தீ யன்னான்காண் உகப்பார் காணப்
பண்ணாரப் பல்லியம் பாடி னான்காண்
பயின்றநால் வேதத்தின் பண்பி னான்காண்
அண்ணா மலையான்காண் அடியா ரீட்டம்
அடியிணைகள் தொழுதேத்த அருளு வான்காண்
கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சி யான்காண்
காளத்தி யானவனென் கண்ணுள் ளானே. 11

திருச்சிற்றம்பலம்

## 6:14. திருநல்லூர்: திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 1

பொன்னலத்த நறுங்கொன்றை சடைமேல் வைத்தார்
புலியுரியின் அதள்வைத்தார் புனலும் வைத்தார்
மன்னலத்த திரள்தோள்மேல் மழுவாள் வைத்தார்
வார்காதிற் குழைவைத்தார் மதியும்வைத்தார்
மின்நலத்த நுண்ணிடையாள் பாகம் வைத்தார்
வேழத்தி னுரிவைத்தார் வெண்ணூல் வைத்தார்
நன்னலத்த திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 2

தோடேறும் மலர்க்கொன்றை சடைமேல் வைத்தார்
துன்னெருக்கின் வடம் வைத்தார் துவலை சிந்தப்
பாடேறு படுதிரைக ளெறிய வைத்தார்
பனிமத்த மலர்வைத்தார் பாம்பும் வைத்தார்
சேடேறு திருநுதல்மேல் நாட்டம் வைத்தார்
சிலைவைத்தார் மலைபெற்ற மகளை வைத்தார்
நாடேறு திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 3

வில்லருளி வருபுருவத் தொருத்தி பாகம்
பொருத்தாகி விரிசடைமே லருவி வைத்தார்
கல்லருளி வரிசிலையா வைத்தா ரூராக்
கயிலாய மலைவைத்தார் கடவூர் வைத்தார்
சொல்லருளி யறநால்வர்க் கறிய வைத்தார்
சுடுசுடலைப் பொடிவைத்தார் துறவி வைத்தார்
நல்லருளால் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 4

விண்ணிரியுந் திரிபுரங்க ளெரிய வைத்தார்
வினைதொழுவார்க் கறவைத்தார் துறவி வைத்தார்
கண்ணெரியாற் காமனையும் பொடியா வைத்தார்
கடிக்கமல மலர்வைத்தார் கயிலை வைத்தார்
திண்ணெரியுந் தண்புனலு முடனே வைத்தார்
திசைதொழுது மிசையமரர் திகழ்ந்து வாழ்த்தி
நண்ணரிய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 5

உற்றுலவு பிணியுலகத் தெழுமை வைத்தார்
உயிர்வைத்தார் உயிர்செல்லுங் கதிகள் வைத்தார்
மற்றமரர் கணம்வைத்தார் அமரர் காணா
மறைவைத்தார் குறைமதியம் வளர வைத்தார்
செற்றம்மலி யார்வமொடு காம லோபஞ்
சிறவாத நெறிவைத்தார் துறவி வைத்தார்
நற்றவர்சேர் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 6

மாறுமலைந் தாரரண மெரிய வைத்தார்
மணிமுடிமேல் அரவைத்தார் அணிகொள் மேனி
நீறுமலிந் தெரியாடல் நிலவ வைத்தார்
நெற்றிமேற் கண்வைத்தார் நிலயம் வைத்தார்
ஆறுமலைந் தறுதிரைக ளெறிய வைத்தார்
ஆர்வத்தா லடியமரர் பரவ வைத்தார்
நாறுமலர்த் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 7

குலங்கண்மிகு மலைகடல்கண் ஞாலம் வைத்தார்
குருமணிசே ரரவைத்தார் கோலம் வைத்தார்
உலங்கிளரும் அரவத்தி னுச்சி வைத்தார்
உண்டருளி விடம்வைத்தார் எண்டோள் வைத்தார்
நிலங்கிளரும் புனல்கனலுள் அனலம் வைத்தார்
நிமிர்விசும்பின் மிசைவைத்தார் நினைந்தா ரிந்நாள்
நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 8

சென்றுருளுங் கதிரிரண்டும் விசும்பில் வைத்தார்
திசைபத்தும் இருநிலத்தில் திருந்த வைத்தார்
நின்றருளி யடியமரர் வணங்க வைத்தார்
நிறைதவமும் மறைபொருளும் நிலவ வைத்தார்
கொன்றருளிக் கொடுங்கூற்றம் நடுங்கி யோடக்
குரைகழற்சே வடிவைத்தார் விடையும் வைத்தார்
நன்றருளுந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 9

பாம்புரிஞ்சி மதிகிடந் திரைக ளேங்கப்
பனிக்கொன்றை சடைவைத்தார் பணிசெய் வானோர்
ஆம்பரிசு தமக்கெல்லாம் அருளும் வைத்தார்
அடுசுடலைப் பொடிவைத்தார் அழகும் வைத்தார்
ஓம்பரிய வல்வினைநோய் தீர வைத்தார்
உமையையொரு பால்வைத்தார் உகந்து வானோர்
நாம்பரவும் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 10

குலங்கிளரும் வருதிரைக ளேழும் வைத்தார்
குருமணிசேர் மலைவைத்தார் மலையைக் கையால்
உளங்கிளர எடுத்தவன்தோள் முடியும் நோவ
ஒருவிரலா லுறவைத்தார் இறைவா என்று
புலம்புதலும் அருளொடுபோர் வாளும் வைத்தார்
புகழ்வைத்தார் புரிந்தாளாக் கொள்ள வைத்தார்
நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 11

***திருச்சிற்றம்பலம்***

## 6:19. திருவாலவாய்: திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

முளைத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தாற் துவள நீறாத்
தூமுத்த வெண்முறுவ லுமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 1

விண்ணுலகின் மேலார்கள் மேலான் தன்னை
மேலாடு புரமூன்றும் பொடிசெய் தானைப்
பண்ணிலவு பைம்பொழில்சூழ் பழனத்தானைப்
பசும்பொன்னின் நிறத்தானைப் பால்நீற் றானை
உண்ணிலவு சடைக்கற்றைக் கங்கை யாளைக்
கரந்துமையோ டுடனாகி யிருந்தான் தன்னைத்
தெண்ணிலவு தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 2

நீர்த்திரளை நீள்சடைமேல் நிறைவித் தானை
நிலமருவி நீரோடக் கண்டான் தன்னைப்
பாற்றிரளைப் பயின்றாட வல்லான் தன்னைப்
பகைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தான் தன்னைக்
காற்றிரளாய் மேகத்தி னுள்ளே நின்று
கடுங்குரலா யிடிப்பானைக் கண்ணோர் நெற்றித்
தீத்திரளைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 3

வானமிது வெல்லா முடையான் தன்னை
வரியரவக் கச்சானை வன்பேய் சூழக்
கானமதில் நடமாட வல்லான் தன்னைக்
கடைக்கண்ணால் மங்கையுமை நோக்கா வென்மேல்
ஊனமது வெல்லா மொழித்தான் தன்னை
யுணர்வாகி யடியேன துள்ளே நின்ற
தேனமுதைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 4

ஊரானை யுலகேழாய் நின்றான் தன்னை
யொற்றைவெண் பிறையானை யுமையோ டென்றும்
பேரானைப் பிறர்க்கென்று மரியான் தன்னைப்
பிணக்காட்டில் நடமாடல் பேயோ டென்றும்
ஆரானை அமரர்களுக் கமுதீந் தானை
அருமறையால் நான்முகனும் மாலும் போற்றும்
சீரானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 5

மூவனை மூர்த்தியை மூவா மேனி
யுடையானை மூவுலகுந் தானே யெங்கும்
பாவனைப் பாவ மறுப்பான் தன்னைப்
படியெழுத லாகாத மங்கை யோடும்
மேவனை விண்ணோர் நடுங்கக் கண்டு
விரிகடலின் நஞ்சுண் டமுத மீந்த
தேவனைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 6

துறந்தார்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னைத்
துன்பந் துடைத்தாள வல்லான் தன்னை
இறந்தார்க ளென்பே யணிந்தான் தன்னை
யெல்லி நடமாட வல்லான் தன்னை
மறந்தார் மதில்மூன்றும் மாய்த்தான் தன்னை
மற்றொருபற் றில்லா வடியேற் கென்றும்
சிறந்தானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 7

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 8

பகைச்சுடராய்ப் பாவ மறுப்பான் தன்னைப்
பழியிலியாய் நஞ்சுண் டமுதீந் தானை
வகைச்சுடராய் வல்லசுரர் புரமட் டானை
வளைவிலியா யெல்லார்க்கு மருள்செய் வானை
மிகைச்சுடரை விண்ணவர்கண் மேலப் பாலை
மேலாய தேவாதி தேவர்க் கென்றும்
திகைச்சுடரைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப்பெற்றேன் நானே. 9

மலையானை மாமேரு மன்னி னானை
வளர்புன் சடையானை வானோர் தங்கள்
தலையானை யென்தலையி னுச்சி யென்றுந்
தாபித் திருந்தானைத் தானே யெங்கும்
துலையாக வொருவரையு மில்லா தானைத்
தோன்றாதார் மதில்மூன்றுந் துவள எய்த
சிலையானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 10

தூர்த்தனை தோள்முடிபத் திறுத்தான் தன்னைத்
தொன்னரம்பின் இன்னிசைகேட் டருள்செய் தானைப்
பார்த்தனைப் பணிகண்டு பரிந்தான் தன்னைப்
பரிந்தவர்க்குப் பாசுபதம் ஈந்தான் தன்னை
ஆத்தனை யடியேனுக் கன்பன் தன்னை
அளவிலாப் பல்லூழி கண்டு நின்ற
தீர்த்தனைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 11

***திருச்சிற்றம்பலம்***

## 6:27. திருவாரூர்: திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்துதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே. 1

ஐம்பொருமா பூதங்காள் ஒருவீர் வேண்டிற்
றொருவீர்வேண் டீர்ஈண்டிவ் வவனி யெல்லாம்
உம்பரமே உம்வசமே யாக்க வல்லீர்க்
கில்லையே னுகர்போகம் யானேல் வானோர்
உம்பருமா யூழியுமா யுலகே ழாகி
யொள்ளாரூர் நள்ளமிர்தாம் வள்ளல் வானோர்
தம்பெருமா னாய்நின்ற அரனைக் காண்பேன்
தடைப்படுவே னாக்கருதித் தருக்கேன் மின்னே. 2

சில்லுருவிற் குறியிருத்தி நித்தல் பற்றிச்
செழுங்கணால் நோக்குமிது வூக்க மன்று
பல்லுருவில் தொழில்பூண்ட பஞ்ச பூதப்
பளகீரும் வசமன்றே பாரே லெல்லாம்
சொல்லுருவிற் சுடர்மூன்றாய் உருவம் மூன்றாய்
தூநயனம் மூன்றாகி ஆண்ட ஆரூர்
நல்லுருவிற் சிவனடியே யடைவேன் நும்மால்
நமைப்புண்ணேன் கமைத்துநீர் நடமின் களே. 3

உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க் கையோ
வையகமே போதாதே யானேல் வானோர்
பொன்னுருவைத் தென்னாரூர் மன்னு குன்றைப்
புவிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப் புகுந்தென் சிந்தை
தன்னுருவைத் தந்தவனை யெந்தை தன்னைத்
தலைப்படுவேன் துலைப்படுப்பான் தருக்கேன் மின்னே. 4

துப்பினைமுன் பற்றறா விறலே மிக்க
சோர்வுபடு சூட்சியமே சுகமே நீங்கள்
ஒப்பினையைப் பாவித்திவ் வுலக மெல்லா
முழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யென்றன்
வைப்பினைப்பொன் மதிலாரூர் மணியை வைகன்
மணாளனையெம் பெருமானை வானோர் தங்கள்
அப்னைச்செப் பிடவடைவேன் நும்மால் நானும்
ஆட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே. 5

பொங்குமத மானமே ஆர்வச் செற்றக்
குரோதமே யுலோபமே பொறையே நீங்கள்
உங்கள்பெரு மாநிலத்தி னெல்லை யெல்லா
முழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யானேல்
அங்கமலத் தயனொடுமா லாகி மற்று
மதற்கப்பா லொன்றாகி யறிய வொண்ணாச்
செங்கனகத் தனிக்குன்றைச் சிவனை யாரூர்ச்
செல்வனைச்சேர் வேன்நும்மாற் செலுத்து ணேனே. 6

இடர்பாவ மெனமிக்க துக்க வேட்கை
வெறுப்பேயென் றனைவீரு முலகை யோடிக்
குடைகின்றீர்க் குலகங்கள் குலுங்கி நுங்கள்
குறிநின்ற தமையாதே யானேல் வானோர்
அடையார்தம் புரமூன்று மெரிசெய் தானை
அமரர்கள்தம் பெருமானை யரனை யாரூர்
உடையானைக் கடுகச்சென். றடைவேன் நும்மால்
ஆட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே. 7

விரைந்தாளும் நல்குரவே செல்வே பொல்லா
வெகுட்சியே மகிழ்ச்சியே வெறுப்பே நீங்கள்
நிரைந்தோடி மாநிலத்தை யதித்துத் தின்பீர்க்
கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
கரைந்தோட வருநஞ்சை யமுது செய்த
கற்பகத்தைத் தற்பரத்தைத் திருவா ரூரில்
பரஞ்சோதி தனைக்காண்பேன் படேன்நும் பண்பிற்
பரிந்தோடி யோட்டந்து பகட்டன் மின்னே. 8

மூள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாண் முழுதுமிவ் வுலகை யோடி
நாள்வாயு நும்முடைய மம்ம ராணை
நடாத்துகின்றீர்க் கமையாதே யானேல் வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவை யாரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவேன் நும்மால்
ஆட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே. 9

சுருக்கமொடு பெருக்கநிலை நித்தல் பற்றிச்
துப்பறையென் றனைவீரிவ் வுலகை யோடிச்
செருக்கிமிகை செலுத்தியும செய்கை வைகல்
செய்கின்றீர்க் கமையாதே யானேன் மிக்க
தருக்கிமிக வரையெடுத்த அரக்கன் ஆகந்
தளரவடி யெடுத்தவன்றன் பாடல் கேட்டு
இரக்கமெழுந் தருளியவெம் பெருமான் பாதத்
திடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே. 10

திருச்சிற்றம்பலம்

## 6:34. திருஆரூர்: திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்விண்ணுந் தெரித்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகந்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 1

மலையார்பொற் பாவையொடு மகிழ்ந்த நாளோ
வானவரை வலியமுத மூட்டி யந்நாள்
நிலைபேறு பெறுவித்து நின்ற நாளோ
நினைப்பரிய தழற்பிழம்பாய் நிமிர்ந்த நாளோ
அலைசாமே அலைகடல்நஞ் சுண்ட நாளோ
அமரர்கணம் புடைசூழ விருந்த நாளோ
சிலையால்முப் புரமெரித்த முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 2

பாடகஞ்சேர் மெல்லடிநற் பாவை யாளும்
நீயும்போய்ப் பார்த்தனது பலத்தைக் காண்பான்
வேடனாய் வில்வாங்கி யெய்த நாளோ
விண்ணவர்க்குங் கண்ணவனாய் நின்ற நாளோ
மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 3

ஓங்கி உயர்ந்தெழுந்து நின்ற நாளோ
ஓருகம்போல் ஏழுகமாய் நின்ற நாளோ
தாங்கியசீர்த் தலையான வானோர் செய்த
தக்கன்தன் பெருவேள்வி தகர்த்த நாளோ
நீங்கியநீர்த் தாமரையான் நெடுமா லோடு
நில்லாயெம் பெருமானே யென்றங் கேத்தி
வாங்கிமதி வைப்பதற்கு முன்னோ பின்னோ
வளராரூர் கோயிலாக் கொண்ட நாளே. 4

பாலனாய் வளர்ந்திலாப் பான்மை யானே
பணிவார்கட் கங்கங்கே பற்றா னானே
நீலமா மணிகண்டத் தெண்டோ ளானே
நெருநலையாய் இன்றாகி நாளை யாகுஞ்
சீலமே சிவலோக நெறியே யாகுஞ்
சீர்மையே கூர்மையே குணமே நல்ல
கோலம்நீ கொள்வதற்கு முன்னோ பின்னோ
குளிராரூர் கோயிலாக் கொண்ட நாளே. 5

திறம்பலவும் வழிகாட்டிச்செய்கை காட்டிச்
சிறியையாய்ப் பெரியையாய் நின்ற நாளோ
மறம்பலவு முடையாரை மயக்கந் தீர்த்து
மாமுனிவர்க் கருள்செய்தங் கிருந்த நாளோ
பிறங்கியசீர்ப் பிரமன்தன் தலைகை யேந்திப்
பிச்சையேற் றுண்டுழன்று நின்ற நாளோ
அறம்பலவு முரைப்பதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 6

நிலந்தரத்து நீண்டுருவ மான நாளோ
நிற்பனவும் நடப்பனவும் நீயே யாகிக்
கலந்துரைக்கக் கற்பகமாய் நின்ற நாளோ
காரணத்தால் நாரணனைக் கற்பித் தன்று
வலஞ்சுருக்கி வல்லசுரர் மாண்டு வீழ
வாசுகியை வாய்மடுத்து வானோ ருய்யச்
சலந்தரனைக் கொல்வதற்கு முன்னோ பின்னோ
தண்ணாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 7

பாதத்தால் முயலகனைப் பாது காத்துப்
பாரகத்தே பரஞ்சுடராய் நின்ற நாளோ
கீதத்தை மிகப்பாடும் அடியார்க் கென்றுங்
கேடிலா வானுலகங் கொடுத்த நாளோ
பூதத்தான் பொருநீலி புனிதன் மேவிப்
பொய்யுரையா மறைநால்வர் விண்ணோர்க் கென்றும்
வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ
விழவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 8

புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்
பூதலங்க ளவையெட்டும் பொழில்க ளெட்டும்
கலையெட்டுங் காப்பெட்டுங் காட்சி யெட்டுங்
கழற்சே வடியடைந்தார் களைக ளெட்டும்
நகையெட்டும் நாளெட்டும் நன்மை யெட்டும்
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்க ளெட்டும்
திகையெட்டுந் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 9

ஈசனா யுலகேழும் மலையு மாகி
இராவணனை யீடழித்திட் டிருந்த நாளோ
வாசமலர் மகிழ்தென்ற லான நாளோ
மதயானை யுரிபோர்த்து மகிழ்ந்த நாளோ
தாதுமலர் சண்டிக்குக் கொடுத்த நாளோ
சகரர்களை மறித்திட்டாட் கொண்ட நாளோ
தேசமுமை யறிவதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 10

திருச்சிற்றம்பலம்

## 6:38. திருவையாறு: திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 1

நோக்கரிய திருமேனி யுடையாய் நீயே
நோவாமே நோக்கருள வல்லாய் நீயே
காப்பரிய ஐம்புலனுங் காத்தாய் நீயே
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தாய் நீயே
ஆர்ப்பரிய மாநாக மார்த்தாய் நீயே
அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தீர்ப்பரிய வல்வினை நோய் தீர்ப்பாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 2

கனத்தகத்துக் கடுஞ்சுடராய் நின்றாய் நீயே
கடல்வரைவா னாகாய மானாய் நீயே
தனத்தகத்துத் தலைகலனாக் கொண்டாய் நீயே
சார்ந்தாரைத் தகைந்தாள வல்லாய் நீயே
மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே
மலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
சினத்திருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 3

வானுற்ற மாமலைக ளானாய் நீயே
வடகயிலை மன்னி யிருந்தாய் நீயே
ஊனுற்ற வொளிமழுவாட் படையாய் நீயே
ஒளிமதியோ டரவுபுனல் வைத்தாய் நீயே
ஆனுற்ற ஐந்தும் அமர்ந்தாய் நீயே
அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தேனுற்ற சொல்மடவாள் பங்கன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 4

பெண்ணான் பிறப்பிலியாய் நின்றாய் நீயே
பெரியார்கட் கெல்லாம் பெரியாய் நீயே
உண்ணா வருநஞ்ச முண்டாய் நீயே
ஊழி முதல்வனாய் நின்றாய் நீயே
கண்ணா யுலகெலாங் காத்தாய் நீயே
கழற்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்ணார் மழுவாட் படையாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 5

உற்றிருந்த உணர்வெலா மானாய் நீயே
உற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய் நீயே
கற்றிருந்த கலைஞான மானாய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் நீயே
பெற்றிருந்த தாய்அவளின் நல்லாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 6

எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 7

ஆவினில் ஐந்து மமர்ந்தாய் நீயே
அளவில் பெருமை யுடையாய் நீயே
பூவினில் நாற்றமாய் நின்றாய் நீயே
போர்க்கோலங் கொண்டெயி லெய்தாய் நீயே
நாவில் நடுவுரையாய் நின்றாய் நீயே
நண்ணி யடியென்மேல் வைத்தாய் நீயே
தேவ ரறியாத தேவன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 8

எண்டிசைக்கும் ஒண்சுடராய் நின்றாய் நீயே
ஏகம்பம் மேய இறைவன் நீயே
வண்டிசைக்கும் நறுங்கொன்றைத் தாராய் நீயே
வாரா வுலகருள வல்லாய் நீயே
தொண்டிசைத்துன் அடிபரவ நின்றாய் நீயே
தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்சிலைக்கோர் சரங்கூட்ட வல்லாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 9

விண்டார் புரமூன்று மெய்தாய் நீயே
விண்ணவர்க்கும் மேலாகி நின்றாய் நீயே
கண்டாரைக் கொல்லுநஞ் சுண்டாய் நீயே
காலங்க ளூழியாய் நின்றாய் நீயே
தொண்டாய் அடியேனை ஆண்டாய் நீயே
தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்டோள்விட் டெரியாட லுகந்தாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 10

ஆரு மறியா இடத்தாய் நீயே
ஆகாயந் தேரூர வல்லாய் நீயே
பேரும் பெரிய இலங்கை வேந்தன்
பெரிய முடிபத் திறுத்தாய் நீயே
ஊரும் புரமூன்றும் அட்டாய் நீயே
ஒண்தா மரையானும் மாலுங் கூடித்
தேரும் அடியென்மேல் வைத்தாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 11

திருச்சிற்றம்பலம்

## 6:48. திருவலிவலம்: திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நல்லான்காண் நான்மறைக ளாயி னான்காண்
நம்பன்காண் நணுகாதார் புரமூன் றெய்த
வில்லான்காண் விண்ணவர்க்கும் மேலா னான்காண்
மெல்லியலாள் பாகன்காண் வேத வேள்விச்
சொல்லான்காண் சுடர்மூன்று மாயி னான்காண்
தொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வான் ஈய
வல்லான்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 1

ஊனவன்காண் உடல்தனக்கோ ருயிரா னான்காண்
உள்ளவன்காண் இல்லவன்காண் உமையாட் கென்றுந்
தேனவன்காண் திருவவன்காண் திசையா னான்காண்
தீர்த்தன்காண் பார்த்தன்றன் பணியைக் கண்ட
கானவன்காண் கடலன்காண் மலையா னான்காண்
களியானை யீருரிவை கதறப் போர்த்த
வானவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 2

ஏயவன்காண் எல்லார்க்கு மியல்பா னான்காண்
இன்பன்காண் துன்பங்க ளில்லா தான்காண்
தாயவன்காண் உலகுக்கோர் தன்னொப் பில்லாத்
தத்துவன்காண் உத்தமன்காண் தானே யெங்கும்
ஆயவன்காண் அண்டத்துக் கப்பா லான்காண்
அகங்குழைந்து மெய்வருந்தி அழுவார் தங்கள்
வாயவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 3

உய்த்தவன்காண் உடல்தனக்கோ ருயிரா னான்காண்
ஓங்காரத் தொருவன்காண் உலகுக் கெல்லாம்
வித்தவன்காண் விண்பொழியும் மழையா னான்காண்
விளைவவன்காண் விரும்பாதார் நெஞ்சத் தென்றும்
பொய்த்தவன்காண் பொழிலேழுந் தாங்கி னான்காண்
புனலோடு வளர்மதியும் பாம்புஞ் சென்னி
வைத்தவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 4

கூற்றவன்காண் குணமவன்காண் குறியா னான்காண்
குன்றங்க ளனைத்துங்காண் கோல மாய
நீற்றவன்காண் நிழலவன்காண் நெருப்பா னான்காண்
நிமிர்புன் சடைமுடிமேல் நீரார் கங்கை
ஏற்றவன்காண் ஏழுலகு மாயி னான்காண்
இமைப்பளவிற் காமனைமுன் பொடியாய் வீழ
மாற்றவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காண்வனென் மனத்து ளானே. 5

நிலையவன்காண் தோற்றவன்காண் நிறையா னான்காண்
நீரவன்காண் பாரவன்காண் ஊர்மூன் றெய்த
சிலையவன்காண் செய்யவாய்க் கரிய கூந்தல்
தேன்மொழியை ஒருபாகஞ் சேர்த்தி னான்காண்
கலையவன்காண் காற்றவன்காண் காலன் வீழக்
கறுத்தவன்காண் கயிலாய மென்னுந் தெய்வ
மலையவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 6

பெண்ணவன்காண் ஆணவன்காண் பெரியோர்க் கென்றும்
பெரியவன்காண் அரியவன்காண் அயனா னான்காண்
எண்ணவன்காண் எழுத்தவன்காண் இன்பக் கேள்வி
இசையவன்காண் இயலவன்காண் எல்லாங் காணுங்
கண்ணவன்காண் கருத்தவன்காண் கழிந்தோர் செல்லுங்
கதியவன்காண் மதியவன்காண் கடலேழ் சூழ்ந்த
மண்ணவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 7

முன்னவன்காண் பின்னவன்காண் மூவா மேனி
முதலவன்காண் முடிவவன்காண் மூன்று சோதி
அன்னவன்காண் அடியார்க்கும் அண்டத் தார்க்கும்
அணியவன்காண் சேயவன்காண் அளவில் சோதி
மின்னவன்காண் உருமவன்காண் திருமால் பாகம்
வேண்டினன்காண் ஈண்டுபுனற் கங்கைக் கென்றும்
மன்னவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 8

நெதியவன்காண் யாவர்க்கும் நினைய வொண்ணா
நீதியன்காண் வேதியன்காண் நினைவார்க் கென்றுங்
கதியவன்காண் காரவன்காண் கனலா னான்காண்
காலங்க ளூழியாய்க் கலந்து நின்ற
பதியவன்காண் பழமவன்காண் இரதந் தான்காண்
பாம்பொடு திங்கள் பயில வைத்த
மதியவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 9

பங்கயத்தின் மேலானும் பால கனாய்
உலகளந்த படியானும் பரவிக் காணா
தங்கைவைத்த சென்னியரா யளக்க மாட்டா
அனலவன்காண் அலைகடல்சூ ழிலங்கை வேந்தன்
கொங்கலர்த்த முடிநெரிய விரலா லூன்றுங்
குழகன்காண் அழகன்காண் கோல மாய
மங்கையர்க்கோர் கூறன்காண் வானோ ரேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 10

திருச்சிற்றம்பலம்

## 6:60. திருக்கற்குடி: திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

மூத்தவனை வானவர்க்கும் மூவா மேனி
முதலவனைத் திருவரையின் மூர்க்கப் பாம்பொன்
றார்த்தவனை யக்கரவ மார மாக
அணிந்தவனைப் பணிந்தடியா ரடைந்த வன்போ
டேத்தவனை யிறுவரையில் தேனை ஏனோர்க்
கின்னமுத மளித்தவனை யிடரை யெல்லாங்
காத்தவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 1

செய்யானை வெளியானைக் கரியான் தன்னைச்
திசைமுகனைத் திசையெட்டுஞ் செறிந்தான் தன்னை
ஐயானை நொய்யானைச் சீரி யானை
அணியானைச் சேயானை ஆனஞ் சாடும்
மெய்யானைப் பொய்யாது மில்லான் தன்னை
விடையானைச் சடையானை வெறித்த மான்கொள்
கையானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 2

மண்ணதனில் ஐந்தைமா நீரில் நான்கை
வயங்கெரியில் மூன்றை மாருதத் திரண்டை
விண்ணதனி லொன்றைவிரி கதிரான் தன்னை
தண்மதியைத் தாரகைகள் தம்மின் மிக்க
எண்ணதனி லெழுத்தை ஏழிசையைக் காம
னெழிலழிய எரியுமிழ்ந்த இமையா நெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 3

நற்றவனைப் புற்றரவம் நாணி னானை
நாணாது நகுதலையூண் நயந்தான் தன்னை
முற்றவனை மூவாத மேனி யானை
முந்நீரின் நஞ்சமுகந் துண்டான் தன்னைப்
பற்றவனைப் பற்றார்தம் பதிகள் செற்ற
படையானை அடைவார்தம் பாவம் போக்கக்
கற்றவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 4

சங்கைதனைத் தவிர்த்தாண்ட தலைவன் தன்னைச்
சங்கரனைத் தழலுறுதாள் மழுவாள் தாங்கும்
அங்கையனை அங்கமணி ஆகத் தானை
ஆகத்தோர் பாகத்தே அமர வைத்த
மங்கையனை மதியொடுமா கணமுந் தம்மின்
மருவவிரி சடைமுடிமேல் வைத்த வான்நீர்க்
கங்கையனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 5

பெண்ணவனை ஆணவனைப் பேடா னானைப்
பிறப்பிலியை யிறப்பிலியைப் பேரா வாணி
விண்ணவனை விண்ணவர்க்கும் மேலா னானை
வேதியனை வேதத்தின் கீதம் பாடும்
பண்ணவனைப் பண்ணில்வரு பயனா னானைப்
பாரவனைப் பாரில்வாழ் உயிர்கட் கெல்லாங்
கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 6

பண்டானைப் பரந்தானைக் குவிந்தான் தன்னைப்
பாரானை விண்ணாயிவ் வுலக மெல்லாம்
உண்டானை உமிழ்ந்தானை உடையான் தன்னை
யொருவருந்தன் பெருமைதனை அறிய வொண்ணா
விண்டானை விண்டார்தம் புரங்கள் மூன்றும்
வெவ்வழலில் வெந்துபொடி யாகி வீழக்
கண்டானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 7

வானவனை வானவர்க்கும் மேலா னானை
வணங்குமடி யார்மனத்துள் மருவிப் புக்க
தேனவனைத் தேவர்தொழு கழலான் தன்னைச்
செய்குணங்கள் பலவாகி நின்ற வென்றிக்
கோனவனைக் கொல்லைவிடை யேற்றி னானைக்
குழல்முழவ மியம்பக்கூத் தாட வல்ல
கானவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 8

கொலையானை யுரிபோர்த்த கொள்கை யானைக்
கோளரியைக் கூரம்பா வரைமேற் கோத்த
சிலையானைச் செம்மைதரு பொருளான் தன்னைத்
திரிபுரத்தோர் மூவர்க்குச் செம்மை செய்த
தலையானைத் தத்துவங்க ளானான் தன்னைத்
தையலோர் பங்கினனைத் தன்கை யேந்து
கலையானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 9

பொழிலானைப் பொழிலாரும் புன்கூ ரானைப்
புறம்பயனை அறமபுரிந்த புகலூ ரானை
எழிலானை இடைமருதி னிடங்கொண் டானை
ஈங்கோய்நீங் காதுறையும் இறைவன் தன்னை
அழலாடு மேனியனை அன்று சென்றக்
குன்றெடுத்த அரக்கன்தோள் நெரிய வூன்றுங்
கழலானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 10

திருச்சிற்றம்பலம்

## 6:63. திருவானைக்கா: திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

முன்னானைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்னானை யாப்பண்ணி யேறி னானைச்
சார்தற் கரியானைத் தாதை தன்னை
என்னானைக் கன்றினையென் ஈசன் தன்னை
எறிநீர்த் திரையுகளுங் காவி ரிசூழ்
தென்னானைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 1

மருந்தானை மந்திரிப்பார் மனத்து ளானை
வளர்மதியஞ் சடையானை மகிழ்ந்தென் உள்ளத்
திருந்தானை யிறப்பிலியைப் பிறப்பி லானை
இமையவர்தம் பெருமானை யுமையா ளஞ்சக்
கருந்தான மதகளிற்றி னுரிபோர்த் தானைக்
கனமழுவாட் படையானைப் பலிகொண் டூரூர்
திரிந்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 2

முற்றாத வெண்திங்கள் கண்ணி யானை
முந்நீர்நஞ் சுண்டிமையோர்க் கமுதம் நல்கும்
உற்றானைப் பல்லுயிர்க்குந் துணையா னானை
ஓங்காரத் துட்பொருளை உலக மெல்லாம்
பெற்றானைப் பின்னிரக்கஞ் செய்வான் தன்னைப்
பிரானென்று போற்றாதார் புரங்கள் மூன்றுஞ்
செற்றானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 3

காராரும் மணிமிடற்றெம் பெருமான் தன்னைக்
காதில்வெண் குழையானைக் கமழ்பூங் கொன்றைத்
தாரானைப் புலியதளி னாடை யானைத்
தானன்றி வேறொன்று மில்லா ஞானப்
பேரானை மணியாரம் மார்பி னானைப்
பிஞ்ஞகனைத் தெய்வநான் மறைகள் பூண்ட
தேரானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 4

பொய்யேது மில்லாத மெய்யன் தன்னைப்
புண்ணியனை நண்ணாதார் புரம்நீ றாக
எய்தானைச் செய்தவத்தின் மிக்கான் தன்னை
ஏறமரும் பெருமானை யிடமான் ஏந்து
கையானைக் கங்காள வேடத் தானைக்
கட்டங்கக் கொடியானைக் கனல்போல் மேனிச்
செய்யானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 5

கலையானைப் பரசுதர பாணி யானைக்
கனவயிரத் திரளானை மணிமா ணிக்க
மலையானை யென்தலையி னுச்சி யானை
வார்தருபுன் சடையானை மயானம் மன்னும்
நிலையானை வரியரவு நாணாக் கோத்து
நினையாதார் புரமெரிய வளைத்த மேருச்
சிலையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 6

ஆதியனை யெறிமணியி னோசை யானை
அண்டத்தார்க் கறிவொண்ணா தப்பால் மிக்க
சோதியனைத் தூமறையின் பொருளான் தன்னைச்
சுரும்பமரும் மலர்க்கொன்றைத் தொன்னூல் பூண்ட
வேதியனை அறமுரைத்த பட்டன் தன்னை
விளங்குமல ரயன்சிரங்கள் ஐந்தி லொன்றைச்
சேதியனைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 7

மகிழ்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னை
மறவாது கழல்நினைந்து வாழ்த்தி ஏத்திப்
புகழ்ந்தாரைப் பொன்னுலகம் ஆள்விப் பானைப்
பூதகணப் படையானைப் புறங்காட் டாடல்
உகந்தானைப் பிச்சையே யிச்சிப் பானை
ஒண்பவளத் திரளையென் னுள்ளத் துள்ளே
திகழ்ந்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 8

நசையானை நால்வேதத் தப்பா லானை
நல்குரவுந் தீப்பிணிநோய் காப்பான் தன்னை
இசையானை யெண்ணிறந்த குணத்தான் தன்னை
யிடைமருதும் ஈங்கோயும் நீங்கா தேற்றின்
மிசையானை விரிகடலும் மண்ணும் விண்ணும்
மிகுதீயும் புனலெறிகாற் றாகி யெட்டுத்
திசை யானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 9

பார்த்தானைக் காமனுடல் பொடியாய் வீழப்
பண்டயன்மால் இருவர்க்கும் அறியா வண்ணஞ்
சீர்த்தானைச் செந்தழல்போ லுருவி னானைத்
தேவர்கள்தம் பெருமானைத் திறமுன் னாதே
ஆர்த்தோடி மலையெடுத்த இலங்கை வேந்தன்
ஆண்மையெலாங் கெடுத்தவன்தன் இடரப் போதே
தீர்த்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 10

திருச்சிற்றம்பலம்

## 6:65. திருவேகம்பம்: திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

உரித்தவன்காண் உரக்களிற்றை உமையாள் ஒல்க
ஓங்காரத் தொருவன்காண் உணர்மெய்ஞ் ஞானம்
விரித்தவன்காண் விரித்தநால் வேதத் தான்காண்
வியனுலகிற் பல்லுயிரை விதியி னாலே
தெரித்தவன்காண் சில்லுருவாய்த் தோன்றி யெங்குந்
திரண்டவன்காண் திரிபுரத்தை வேவ வில்லால்
எரித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 1

நேசன்காண் நேசர்க்கு நேசந் தன்பால்
இல்லாத நெஞ்சத்து நீசர் தம்மைக்
கூசன்காண் கூசாதார் நெஞ்சு தஞ்சே
குடிகொண்ட குழகன்காண் அழகார் கொன்றை
வாசன்காண் மலைமங்கை பங்கன் றான்காண்
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி யேத்தும்
ஈசன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 2

பொறையவன்காண் பூமியேழ் தாங்கி யோங்கும்
புண்ணியன்காண் நண்ணியபுண் டரீகப் போதில்
மறையவன்காண் மறையவனைப் பயந்தோன் தான்காண்
வார்சடைமா சுணமணிந்து வளரும் பிள்ளைப்
பிறையவன்காண் பிறைதிகழும் எயிற்றுப் பேழ்வாய்ப்
பேயோடங் கிடுகாட்டில் எல்லி யாடும்
இறையவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 3

பாரவன்காண் விசும்பவன்காண் பவ்வந் தான்காண்
பனிவரைகள் இரவினொடு பகலாய் நின்ற
சீரவன்காண் திசையவன்காண் திசைக ளெட்டுஞ்
செறிந்தவன்காண் சிறந்தடியார் சிந்தை செய்யும்
பேரவன்காண் பேரா யிரங்க ளேத்தும்
பெரியவன்காண் அரியவன்காண் பெற்றம் ஊர்ந்த
ஏரவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 4

பெருந்தவத்தெம் பிஞ்ஞகன்காண் பிறைசூ டிகாண்
பேதையேன் வாதையுறு பிணியைத் தீர்க்கும்
மருந்தவன்காண் மந்திரங்க ளாயி னான்காண்
வானவர்கள் தாம்வணங்கும் மாதே வன்காண்
அருந்தவத்தாள் ஆயிழையாள் உமையாள் பாகம்
அமர்ந்தவன்காண் அமரர்கள்தாம் அர்ச்சித் தேத்த
இருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 5

ஆய்ந்தவன்காண் அருமறையோ டங்கம் ஆறும்
அணிந்தவன்காண் ஆடரவோ டென்பு மாமை
காய்ந்தவன்காண் கண்ணழலாற் காமன் ஆகங்
கனன்றெழுந்த காலனுடல் பொடியாய் வீழப்
பாய்ந்தவன்காண் பண்டுபல சருகால் பந்தர்
பயின்றநூற் சிலந்திக்குப் பாராள் செல்வம்
ஈந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 6

உமையவளை யொருபாகஞ் சேர்த்தி னான்காண்
உகந்தொலிநீர்க் கங்கைசடை யொழுக்கி னான்காண்
இமய வடகயிலைச் செல்வன் தான்காண்
இல்பலிக்குச் சென்றுழலும் நல்கூர்ந் தான்காண்
சமயமவை யாறினுக்குந் தலைவன் தான்காண்
தத்துவன்காண் உத்தமன்காண் தானே யாய
இமையவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 7

தொண்டுபடு தொண்டர்துயர் தீர்ப்பான் தான்காண்
தூமலர்ச்சே வடியிணையெம் சோதி யான்காண்
உண்டுபடு விடங்கண்டத் தொடுக்கி னான்காண்
ஒலிகடலில் அமுதமரர்க் குதவி னான்காண்
வண்டுபடு மலர்க்கொன்றை மாலை யான்காண்
வாண்மதியாய் நாண்மீனு மாயி னான்காண்
எண்டிசையும் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 8

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையொன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 9

பொன்னிசையும் புரிசடையெம் புனிதன் தான்காண்
பூதகண நாதன்காண் புலித்தோ லாடை
தன்னிசைய வைத்தஎழி லரவி னான்காண்
சங்கவெண் குழைக்காதிற் சதுரன் தான்காண்
மின்னிசையும் வெள்ளெயிற்றோன் வெகுண்டு வெற்பை
யெடுக்கஅடி யடர்ப்பமீண் டவன்றன் வாயில்
இன்னிசைகேட் டிலங்கொளிவா ளீந்தோன் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 10

*திருச்சிற்றம்பலம்*

## 6:78. திருவாலங்காடு: திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

ஒன்றா வுலகனைத்து மானார் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி யெங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானார் தாமே
கொன்றாடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்க ளானார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 1

மலைமகளைப் பாக மமர்ந்தார் தாமே
வானோர் வணங்கப் படுவார் தாமே
சலமகளைச் செஞ்சடைமேல் வைத்தார் தாமே
சரணென் றிருப்பார்கட் கன்பர் தாமே
பலபலவும் வேடங்க ளானார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
சிலைமலையா மூவெயிலும் அட்டார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 2

ஆவுற்ற ஐந்தும் உகந்தார் தாமே
அளவில் பெருமை யுடையார் தாமே
பூவுற்ற நாற்றமாய் நின்றார் தாமே
புனிதப் பொருளாகி நின்றார் தாமே
பாவுற்ற பாட லுகப்பார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
தேவுற் றடிபரவ நின்றார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 3

நாறுபூங் கொன்றை முடியார் தாமே
நான்மறையோ டாறங்கஞ் சொன்னார் தாமே
மாறிலா மேனி யுடையார் தாமே
மாமதியஞ் செஞ்சடைமேல் வைத்தார் தாமே
பாறினார் வெண்தலையி லுண்டார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
தேறினார் சித்தத் திருந்தார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 4

அல்லும் பகலுமாய் நின்றார் தாமே
அந்தியுஞ் சந்தியு மானார் தாமே
சொல்லும் பொருளெலா மானார் தாமே
தோத்திரமுஞ் சாத்திரமு மானார் தாமே
பல்லுரைக்கும் பாவெலா மானார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
செல்லும் நெறிகாட்ட வல்லார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 5

தொண்டாய்ப் பணிவார்க் கணியார் தாமே
தூநீ றணியுஞ் சுவண்டர் தாமே
தண்தா மரையானும் மாலுந் தேடத்
தழலுருவா யோங்கி நிமிர்ந்தார் தாமே
பண்தான் இசைபாட நின்றார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
திண்டோள்க ளெட்டு முடையார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 6

மையாருங் கண்ட மிடற்றார் தாமே
மயானத்தி லாடல் மகிழ்ந்தார் தாமே
ஐயாறும் ஆரூரும் ஆனைக் காவும்
அம்பலமுங் கோயிலாக் கொண்டார் தாமே
பையா டரவ மசைத்தார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
செய்யாள் வழிபட நின்றார்தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 7

விண்முழுதும் மண்முழுது மானார் தாமே
மிக்கோர்க ளேத்துங் குணத்தார் தாமே
கண்விழியாற் காமனையுங் காய்ந்தார் தாமே
காலங் களூழி கடந்தார் தாமே
பண்ணியலும் பாட லுகப்பார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
திண்மழுவா ளேந்து கரத்தார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 8

காரார் கடல்நஞ்சை யுண்டார் தாமே
கயிலை மலையை உடையார் தாமே
ஊரா ஏகம்ப முகந்தார் தாமே
ஒற்றியூர் பற்றி யிருந்தார் தாமே
பாரார் புகழப் படுவார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
தீராத வல்வினைநோய் தீர்ப்பார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 9

மாலைப் பிறைசென்னி வைத்தார் தாமே
வண்கயிலை மாமலையை வந்தி யாத
நீலக் கடல்சூ ழிலங்கைக் கோனை
நெரிய விரலா லடர்த்தார் தாமே
பாலொத்த மேனி நிறத்தார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
சீலத்தா ரேத்துந் திறத்தார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 10

***திருச்சிற்றம்பலம்***

## 6:83. திருப்பாசூர்: திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

விண்ணாகி நிலனாகி விசும்பு மாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்பு கின்ற
எண்ணாகி எழுத்தாகி இயல்பு மாகி
ஏழுலகுந் தொழுதேத்திக் காண நின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சி யாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவ நின்ற
பண்ணாகி இன்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 1

வேதமோர் நான்காய் ஆறங்க மாகி
விரிக்கின்ற பொருட்கெல்லாம் வித்து மாகிக்
கூதலாய்ப் பொழிகின்ற மாரி யாகிக்
குவலயங்கள் முழுதுமாய்க் கொண்ட லாகிக்
காதலால் வானவர்கள் போற்றி யென்றுங்
கடிமலர்கள் அவைதூவி ஏத்த நின்ற
பாதியோர் மாதினனைப் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 2

தடவரைக ளேழுமாய்க் காற்றாய்த் தீயாய்த்
தண்விசும்பாய்த் தண்விசும்பி னுச்சி யாகிக்
கடல்வலயஞ் சூழ்ந்ததொரு ஞால மாகிக்
காண்கின்ற கதிரவனும் மதியு மாகிக்
குடமுழவச் சதிவழியே அனல்கை யேந்திக்
கூத்தாட வல்ல குழக னாகிப்
படவரவொன் றதுவாட்டிப் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 3

நீராருஞ் செஞ்சடைமேல் அரவங் கொன்றை
நிறைமதிய முடன்சூடி நீதி யாலே
சீராரும் மறையோதி யுலக முய்யச்
செழுங்கடலைக் கடைந்தகடல் நஞ்ச முண்ட
காராருங் கண்டனைக் கச்சி மேய
கண்ணுதலைக் கடலொற்றி கருதி னானைப்
பாரோரும் விண்ணோரும் பரசும் பாசூர்ப்
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 4

வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான்
வில்பிடித்துக் கொம்புடைய ஏனத் தின்பின்
கூடினார் உமையவளுங் கோலஞ் கொள்ளக்
கொலைப்பகழி உடன்கோத்துக் கோரப் பூசல்
ஆடினார் பெருங்கூத்துக் காளி காண
அருமறையோ டாறங்கம் ஆய்ந்து கொண்டு
பாடினார் நால்வேதம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 5

புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயின் நூலால்
பொதுப்பந்தர் அது இழைத்துச் சருகால் மேய்ந்த
சித்தியினா லரசாண்டு சிறப்புச் செய்யச்
சிவகணத்துப் புகப்பெய்தார் திறலால் மிக்க
வித்தகத்தால் வெள்ளானை விள்ளா அன்பு
விரவியவா கண்டதற்கு வீடு காட்டிப்
பக்தர்களுக் கின்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 6

இணையொருவர் தாமல்லால் யாரு மில்லார்
இடைமருதோ டேகம்பத் தென்றும் நீங்கார்
அணைவரியர் யாவர்க்கு மாதி தேவர்
அருமந்த நன்மையெலா மடியார்க் கீவர்
தணல்முழுகு பொடியாடுஞ் செக்கர் மேனித்
தத்துவனைச் சாந்தகிலி னளறு தோய்ந்த
பணைமுலையாள் பாகனையெம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 7

அண்டவர்கள் கடல்கடைய அதனுள் தோன்றி
அதிர்ந்தெழுந்த ஆலாலம் வேலை ஞாலம்
எண்டிசையுஞ் சுடுகின்ற வாற்றைக் கண்டு
இமைப்பளவி லுண்டிருண்ட கண்டர் தொண்டர்
வண்டுபடு மதுமலர்கள் தூவி நின்று
வானவர்கள் தானவர்கள் வணங்கி யேத்தும்
பண்டரங்க வேடனையெம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 8

ஞாலத்தை யுண்டதிரு மாலும் மற்றை
நான்முகனு மறியாத நெறியான் கையிற்
சூலத்தால் அந்தகனைச் சுருளக் கோத்துத்
தொல்லுலகிற் பல்லுயிரைக் கொல்லுங் கூற்றைக்
காலத்தா லுதைசெய்து காதல்செய்த
அந்தணனைக் கைக்கொண்ட செவ்வான் வண்ணர்
பாலொத்த வெண்ணீற்றர் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 9

வேந்தன்நெடு முடியுடைய அரக்கர் கோமான்
மெல்லியலாள் உமைவெருவ விரைந்திட் டோடிச்
சாந்தமென நீறணிந்தான் கயிலை வெற்பைத்
தடக்கைகளா லெடுத்திடலுந் தாளா லூன்றி
ஏந்துதிரள் திண்தோளுந் தலைகள் பத்தும்
இறுத்தவன்தன் இசைகேட்டு இரக்கங் கொண்ட
பாந்தளணி சடைமுடியெம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 10

திருச்சிற்றம்பலம்

## 6:99. திருப்புகலூர்: திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 1

அங்கமே பூண்டாய் அனலா டினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்ச டையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேற் றரவ றுத்தாய்
அவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 3

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 4

நீரேறு செஞ்சைடமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டநங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 5

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 6

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டு தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும்போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 7

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறையுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்டமடவாள் பாகத் தானே
மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 8

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னணையுந் தண்மதியும் பாம்பும் நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடை மடவாள் பாகத் தானே
யக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 9

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 10

திருச்சிற்றம்பலம்

# சுந்தரமூர்த்தி நாயனார்

## ஏழாம் திருமுறை

## 7:1. திருவெண்ணெய் நல்லூர்: பண் - இந்தளம்

*திருச்சிற்றம்பலம்*

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 1

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகா அருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆயாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 2

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு(து) உந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அன்னேயுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 3

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அடிகேளுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 4

பாதம்பணி வார்கள்பெறு பண்டம்அது பணியாய்
ஆதன்பொரு ளானேன்அறி வில்லேனரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆதியுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 5

தண்ணார்மதி சூடிதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றும்எரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அண்ணாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 6

ஊனாய்உயி ரானாய்உட லானாய்உல கானாய்
வானாய்நிலன் ஆனாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆனாயுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 7

ஏற்றார்புர மூன்றும்எரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆற்றாயுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 8

மழுவாள்வலன் ஏந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தல்உன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அழகாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 9

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்(கு)ஆ ளல்லேனென லாமே. 10

*திருச்சிற்றம்பலம்*

## 7:7. திருஎதிர்கொள்பாடி: பண் - இந்தளம்

*திருச்சிற்றம்பலம்*

மத்த யானை யேறி மன்னர் சூழவரு வீர்காள்
செத்த போதில் ஆரு மில்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த வுள்ளம் மாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர் கோயி லெதிர்கொள் பாடி என்ப தடைவோமே. 1

தோற்ற முண்டேல் மரண முண்டு துயர மனைவாழ்க்கை
மாற்ற முண்டேல் வஞ்ச முண்டு நெஞ்ச மனத்தீரே
நீற்றர் ஏற்றர் நீல கண்டர் நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றர் கோயி லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே. 2

செடிகொ ளாக்கை சென்றுசென்று தேய்ந்தொல்லை வீழாமுன்
வடிகொள் கண்ணார் வஞ்சனையுட் பட்டு மயங் காதே
கொடிகொ ளேற்றர் வெள்ளை நீற்றர் கோவண ஆடையுடை
அடிகள் கோயி லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே. 3

வாழ்வர் கண்டீர் நம்முள் ஐவர் வஞ்ச மனத்தீரே
யாவ ராலும் இகழப் பட்டிங்(கு) அல்லலில் வீழாதே
மூவ ராயும் இருவ ராயும் முதல்வன் அவனேயாம்
தேவர் கோயி லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே. 4

அரித்து நம்மேல்ஐவர் வந்திங்(கு) ஆறலைப்பான் பொருட்டால்
சிரித்த பல்வாய் வெண்தலைபோய் ஊர்ப்புறஞ் சேராமுன்
வரிக்கொ டுத்திவ் வாள ரக்கர் வஞ்ச மதில்மூன்றும்
எரித்த வில்லி யெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே. 5

பொய்யர் கண்டீர் வாழ்க்கை யாளர் பொத்தடைப்பான் பொருட்டால்
மையல் கொண்டீ ரெம்மோ டாடி நீரும் மனத்தீரே
நைய வேண்டா இம்மை யேத்த அம்மை நமக்கருளும்
ஐயர் கோயி லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே. 6

கூசம் நீக்கிக் குற்றம் நீக்கிச் செற்ற மனநீக்கி
வாசம் மல்கு குழலி னார்கள் வஞ்ச மனைவாழ்க்கை
ஆசை நீக்கி அன்பு சேர்த்தி என்பணிந்(து) ஏறேறும்
ஈசர் கோயி லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே. 7

இன்ப முண்டேல் துன்ப முண்டு ஏழை மனைவாழ்க்கை
முன்பு சொன்னால் மோழை மையான் முட்டை மனத்தீரே
அன்ப ரல்லால் அணிகொள் கொன்றை அடிகள் அடிசேரார்
என்பர் கோயி லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே. 8

தந்தை யாருந் தவ்வை யாரும் எட்டனைச் சார்வாகார்
வந்து நம்மோ டுள்ளளாவி வான நெறி காட்டும்
சிந்தை யீரே நெஞ்சி னீரே திகழ்மதியஞ் சூடும்
எந்தை கோயி லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே. 9

குருதி சோர ஆனை யின்தோல் கொண்ட குழற்சடையன்
மருது கீறி ஊடு போன மாலயனும்அறியாச்
சுருதி யார்க்குஞ் சொல்ல வொண்ணாச் சோதியெம் ஆதியான்
கருது கோயி லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே. 10

முத்து நீற்றுப் பவள மேனிச் செஞ்சடை யானுறையும்
பத்தர் பந்தத் தெதிர்கொள் பாடிப் பரமனையே பணியச்
சித்தம் வைத்த தொண்டர் தொண்டன் சடையனவன் சிறுவன்
பத்த னூரன் பாடல் வல்லார் பாதம்பணி வாரே. 11

***திருச்சிற்றம்பலம்***

## 7:34. திருப்புகலூர்: பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்(கு)
யாதும் ஐயுற வில்லையே. 1

மிடுக்கிலா தானை வீமனே விறல்
விசயனே வில்லுக் கிவனென்று
கொடுக்கிலா தானைப் பாரியே யென்று
கூறினுங் கொடுப் பாரிலை
பொடிக்கொள் மேனியெம் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேல் அம ருலகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே. 2

காணியேற் பெரி துடையனே கற்று
நல்லனே சுற்றம் நன்கிளை
பேணியே விருந் தோம்புமே யென்று
பேசினுங் கொடுப் பாரிலை
பூணிபூண் டுழப் புட்சிலம் புந்தண்
புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆணியாய் அம ருலகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே. 3

நரைகள் போந்துமெய் தளர்ந்து மூத்துடல்
நடுங்கி நிற்குமிக் கிழவனை
வரைகள் போல்திரள் தோளனே யென்று
வாழ்த்தினுங் கொடுப் பாரிலை
புரைவெள் ளேறுடைப் புண்ணியன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அரைய னாயம ருலகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே.

வஞ்ச நெஞ்சனை மாசழக் கனைப்
பாவியை வழக் கில்லியைப்
பஞ்ச துட்டனைச் சாதுவே யென்று
பாடினுங் கொடுப் பாரிலை
பொன்செய் செஞ்சடைப் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில் நோயறுத் துஞ்சு போவதற்
கியாது மையுற வில்லையே. 5

நலமிலா தானை நல்லனே யென்றும்
நரைத்த மாந்தரை யிளையனே
குலமிலா தானைக் குலவனே யென்று
கூறினுங் கொடுப் பாரிலை
புலமெலாம் வெறி கமழும் பூம்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அலமரா தம ருலகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே. 6

நோய னைத்தடந் தோளனே யென்றும்
நொய்ய மாந்தரை விழுமிய
தாயன் றோபுல வோர்க்கெலா மென்று
சாற்றினுங் கொடுப் பாரிலை
போயு ழன்றுகண் குழியாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆய மின்றிபோய் அண்டம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே. 7

எள்வி ழுந்திடம் பார்க்கு மாகிலும்
ஈக்கு மீகில னாகிலும்
வள்ள லேயெங்கள் மைந்தனே யென்று
வாழ்த்தினுங் கொடுப் பாரிலை
புள்ளெ லாஞ்சென்று சேரும் பூம்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அள்ளற் பட்டழுந் தாது போவதற்
கியாது மையுற வில்லையே. 8

கற்றி லாதானைக் கற்று நல்லனே
காம தேவனை யொக்குமே
முற்றி லாதானை முற்றனே யென்று
மொழியினுங் கொடுப் பாரிலை
பொத்தி லாந்தைகள் பாட்ட றாப்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்த னாயம ருலக மாள்வதற்
கியாது மையுற வில்லையே. 9

தைய லாருக்கோர் காம னேசால
நலவழ குடை யையனே
கையு லாவிய வேல னேயென்று
கழறி னுங்கொடுப் பாரிலை
பொய்கை வாவியின் மேதி பாய்புக
லூரை ப்பாடுமின் புலவீர்காள்
ஐய னாரம ருலகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே. 10

செறுவி னிற்செழுங் கமல மோங்குதென்
புகலூர் மேவிய செல்வனை
நறவம் பூம்பொழில் நாவ லூரன்
வனப்பகை யப்பன் சடையன்றன்
சிறுவன் வன்றொண்ட னூரன் பாடிய
பாடல் பத்திவை வல்லவர்
அறவ னாரடி சென்று சேர்வதற்
கியாது மையுற வில்லையே. 11

திருச்சிற்றம்பலம்

## 7:48. திருப்பாண்டிக்கொடுமுடி:

**பண் - பழம்பஞ்சுரம்**

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேன் இனிப்பிற
வாததன் மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனை நான்மறக் கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 1

இட்டன் நும்மடி ஏத்து வாரிகழ்ந்
திட்டநாள் மறந் திட்டநாள்
கெட்ட நாளிவை யென்ற லால்கரு
தேன்கிளர் புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்டடி தொழு
தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாவுனை நான்மறக் கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 2

ஓவு நாளுணர் வழியும்நா ளுயிர்
போகுநா ளுயர் பாடைமேல்
காவு நாளிவை யென்றலால் கரு
தேன்கிளர் புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்திழி பரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாவுனை நான்மறக் கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 3

எல்லை யில்புகழ் எம்பிரா னெந்தை
தம்பிரா னென்பொன் மாமணி
கல்லை உந்தி வளம்பொழிந் திழி
காவிரிய தன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாவுனை நான்மறக் கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 4

அஞ்சி னார்க்கரண் ஆதியென் றடி
யேனும்நான் மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்டனேற் கருள்
நல்கினாய்க் கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவைமார் குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்மறக் கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 5

ஏடு வான்இளந் திங்கள் சூடினை
யென்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடும் பாம்பத ரைக்க சைத்த
அழகனே யந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்திழி பரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேயுனை நான்மறக் கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 6

விரும்பி நின்மலர்ப் பாதமே நினைந்
தேன்வி னைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில் பெற
நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதைமார் குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
விரும் பனேயுனை நான்மறக் கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 7

செம்பொன் நேர்சடை யாய்திரி புரந்
தீயெழச் சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாகம்
அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயி
லாடு பாண்டிக் கொடுமுடி
நம்பனே யுனை நான்மறக் கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 8

சாரணன் தந்தை எம்பிரா னெந்தை
தம்பிரா னென்பொன் மணியென்று
பேரெண் ஆயிர கோடி தேவர்
பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன் பிர மன்தொழுங் கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
காரணா வுனை நான்மறக் கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே. 9

கோணிய பிறை சூடியைக் கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணிய பெரு மானைப் பிஞ்ஞகப்
பித்தனைப் பிறப் பில்லியைப்
பாணுலா வரி வண்டறை கொன்றைத்
தாரனைப் படப் பாம்பரை
நாணனைத் தொண்ட னூரன் சொல்லிவை
சொல்லுவார்க் கில்லைத்துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

## 7:53. திருக்கடவூர் மயானம்: பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 1

விண்ணோர் தலைவர் வெண்புரிநூல் மார்பர் வேத கீதத்தர்
கண்ணார் நுதலர் நகுதலையர் கால காலர் கடவூரர்
எண்ணார் புரமூன் றெரிசெய்த இறைவ ருமையோ ரொருபாகம்
பெண்ஆண் ஆவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 2

காயும் புலியின் அதளுடையர் கண்ட ரெண்தோட் கடவூரர்
தாயுந் தந்தை பல்லுயிர்க்குந் தாமே யாய தலைவனார்
பாயும் விடையொன் றதுவேறிப் பலிதேர்ந் துண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழும் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 3

நறைசேர் மலரைங் கணையானை நயனத் தீயாற் பொடிசெய்த
இறையா ராவர் எல்லார்க்கும் இல்லை யென்னா தருள்செய்வார்
பறையார் முழவம் பட்டோடு பயிலுந் தொண்டர் பயில்கடவூர்ப்
பிறையார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 4

கொத்தார் கொன்றை மதிசூடிக் கோள்நா கங்கள் பூணாக
மத்த யானை உரிபோர்த்து மருப்பு மாமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள் பாடி யாடப் பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 5

துணிவார் கீளுங் கோவணமுந் துதைந்து சுடலைப் பொடியணிந்து
பணிமே லிட்ட பாசுபதர் பஞ்ச வடிமார் பினர்கடவூர்த்
திணிவார் குழையார் புரமூன்றுந் தீவாய்ப் படுத்த சேவகனார்
பிணிவார் சடையர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 6

காரார் கடலின் நஞ்சுண்ட கண்டர் கடவூ ருறைவாணர்
தேரார் அரக்கன் போய்வீழ்ந்து சிதைய விரலா லூன்றினார்
ஊர்தா னாவ துலகேழும் உடையார்க் கொற்றி யூர்ஆரூர்
பேரா யிரவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 7

வாடா முலையாள் தன்னோடு மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கோடார் கேழற் பின்சென்று குறுகி விசையன் தவம் அழித்து
நாடா வண்ணம் செருச்செய்து ஆவ நாழி நிலையருள்செய்
பீடார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 8

வேழம் உரிப்பர் மழுவாளர் வேள்வி அழிப்பர் சிரமறுப்பர்
ஆழி யளிப்பர் அரிதனக்கன் றானைந் துகப்ப ரறமுரைப்பர்
ஏழைத் தலைவர் கடவூரில் இறைவர் சிறுமான் மறிக்கையர்
பேழைச் சடையர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 9

மாடம் மல்கு கடவூரில் மறையோ ரேத்தும் மயானத்துப்
பீடை தீர அடியாருக் கருளும் பெருமான் அடிகள்சீர்
நாடி நாவ லாரூரன் நம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடும் அடியார் கேட்பார்மேற் பாவ மான பறையுமே. 10

திருச்சிற்றம்பலம்

## 7:55. திருப்புன்கூர்: பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்தன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும் பொழில்திருப் புன்கூ ருளானே. 1

வையகம் முற்றும் மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யும் மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளுஞ்
செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும் பொழில்திருப் புன்கூ ருளானே. 2

ஏதம் நன்னிலம் ஈரறு வேலி
ஏயர்கோ னுற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்தன்மேற் சென்ற
தாதை தாளற எறிந்தசண் டிக்குன்
சடைமிசை மலர் அருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன்
பூம்பொ ழில்திருப் புன்கூ ருளானே. 3

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல் லன்என் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே. 4

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளரவு சுற்றிக் கடைந்து எழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
அமரர் கட்டருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே. 5

இயக்கர் கின்னரர் யமனொடு வருண
ரியங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை
அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே. 6

போர்த்த நீள்செவி யாளர்அந் தணர்க்குப்
பொழில்கொள் ஆல்நிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்
தருளினாய் பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை
நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்தனே நின்தன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே. 7

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரி
லிருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
யொருவன், நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ,
மணிமு ழாமுழக் கஅருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே. 8

அறிவி னால்மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து
எறியும் மாகடல் இலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே. 9

கம்ப மால்களிற் றின்னுரி யானைக்
காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்
செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானை
உம்ப ராளியை உமையவள் கோனை
ஊரன் வன்தொண்டன் உள்ளத் தாலுகந்(து)
அன்பி னாற்சொன்ன அருந்தமி ழைந்தோ
டைந்தும் வல்லவர் அருவினை யிலரே. 10

திருச்சிற்றம்பலம்

## 7:64. திருத்தினை நகர்: பண் - தக்கேசி

*திருச்சிற்றம்பலம்*

நீறு தாங்கிய திருநுத லானை
நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக்
குற்ற மில்லியைக் கற்றையஞ் சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை அமரர்க்
கரிய சோதியை வரிவரால் உகளுஞ்
சேறு தாங்கிய திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 1

பிணிகொ ளாக்கை பிறப்பிறப் பென்னும்
இதனைநீக்கி ஈசன் திருவடி யிணைக்காள்
துணிய வேண்டிடிற் சொல்லுவன் கேள்நீ
அஞ்சல் நெஞ்சமே வஞ்சர்வாழ் மதில்மூன்(று)
அணிகொள் வெஞ்சிலை யாலுகச் சீறும்
ஐயன் வையகம் பரவிநின் றேத்துந்
திணியும் வார்பொழில் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 2

வடிகொள் கண்ணிணை மடந்தையர் தம்பால்
மயல துற்றுவஞ் சனைக்கிட மாகி
முடியு மாகரு தேல்எரு தேறு
மூர்த்தி யைமுத லாய பிரானை
அடிக ளென்றடி யார்தொழு தேத்தும்
அப்பன் ஒப்பிலா முலையுமை கோனைச்
செடிகொள் கான்மலி திருத்தினை நகருள்
சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே. 3

பாவ மேபுரிந் தகலிடம் தன்னிற்
பலப கர்ந்தல மந்துஉயிர் வாழ்க்கைக்(கு)
ஆவ வென்றுழந் தயர்ந்துவீ ழாதே
அண்ணல் தன்திறம் அறிவினாற் கருதி
மாவின் ஈருரி உடைபுனைந் தானை
மணியை மைந்தனை வானவர்க் கமுதைத்
தேவ தேவனைத் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 4

ஒன்ற லாவுயிர் வாழ்க்கையை நினைந்திட்(டு)
உடல்த ளர்ந்தரு மாநிதி யியற்றி
என்றும் வாழலா மெமக்கெனப் பேசும்
இதுவும் பொய்யென வேநினை யுளமே
குன்று லாவிய புயமுடை யானைக்
கூத்த னைக்குலா விக்குவ லயத்தோர்
சென்றெ லாம்பயில் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 5

வேந்த ராய்உல காண்டறம் புரிந்து
வீற்றி ருந்தஇவ் வுடல்இது தன்னைத்
தேய்ந்தி றந்துவெந் துயருழந் திடுமிப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்தள் அங்கையி லாட்டுகந் தானைப்
பரம னைக்கடற் சூர்தடிந் திட்ட
சேந்தர் தாதையைத் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 6

தன்னில் ஆசறு சித்தமு மின்றித்
தவம்மு யன்றவ மாயின பேசிப்
பின்ன லார்சடை கட்டியென் பணிந்தால்
பெரிதும் நீந்துவ தரிதது நிற்க
முன்னெ லாம்முழு முதலென்று வானோர்
மூர்த்தி யாகிய முதலவன் றன்னைச்
செந்நெ லார்வயல் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 7

பரிந்த சுற்றமும் மற்றுவன் துணையும்
பலருங் கண்டழு தெழவுயி ருடலைப்
பிரிந்து போமிது நிச்சயம் அறிந்தாற்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்த டங்கண்ணி பங்கனை உயிரைக்
கால காலனைக் கடவுளை விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 8

நமையெ லாம்பலர் இகழ்ந்துரைப் பதன்முன்
நன்மை யொன்றிலாத் தேரர்புன் சமணாஞ்
சமய மாகிய தவத்தினார் அவத்தத்
தன்மை விட்டொழி நன்மையை வேண்டில்
உமையோர் கூறனை ஏறுகந் தானை
யும்பர் ஆதியை யெம்பெரு மானைச்
சிமயம் ஆர்பொழில் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 9

நீடு பொக்கையிற் பிறவியைப் பழித்து
நீங்கலா மென்று மனத்தினைத் தெருட்டிச்
சேடு லாம்பொழில் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினை திருவடி யிணைதான்
நாடெ லாம்புகழ் நாவலூ ராளி
நம்பி வன்றொண்ட னூர னுரைத்த
பாட லாந்தமிழ் பத்திவை வல்லார்
முத்தி யாவது பரகதிப் பயனே. 10

திருச்சிற்றம்பலம்

## 7:95. திருவாரூர்: பண்- செந்துருத்தி

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னாக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 1

விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே. 2

அன்றில் முட்டா தடையுஞ் சோலை ஆரூ ரகத்தீரே
கன்று முட்டி யுண்ணச் சுரந்த காலி யவைபோல
என்றும் முட்டாப் பாடும் அடியார் தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் வீழ்ந்தால் வாழ்ந்து போதீரே. 3

துருத்தி உறைவீர் பழனம் பதியாச் சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே உடையீர் மனமே எனவேண்டா
அருத்தி யுடைய அடியார் தங்க ளல்லல் சொன்னாக்கால்
வருத்தி வைத்து மறுமை பணித்தால் வாழ்ந்து போதீரே. 4

செந்தண் பவளம் திகழுஞ் சோலை இதுவோ திருவாரூர்
எந்தம் அடிகள் இதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ என்றால் வாழ்ந்து போதீரே. 5

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியா ரிருந்தால் வாழ்ந்து போதீரே. 6

ஆயம் பேடை அடையுஞ் சோலை ஆரூ ரகத்தீரே
ஏ(ய்)யெம் பெருமான் இதுவே ஆமா றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்நீர் கொண்டால் வாழ்ந்து போதீரே. 7

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழா தேத்துவோம்
பழிதான் ஆவ தறியீ ரடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே. 8

பேயோ டேனும் பிரிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாங்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 9

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றுங் கிடந்தும் உம்மை இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே. 10

காரூர் கண்டத் தெண்தோள் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே. 11

திருச்சிற்றம்பலம்

## 7:100. திருநொடித்தான்மலை: பண் - பஞ்சமம்
## (திருக்கைலாய மலை)

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தா னதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர்கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 1

ஆனை யுரித்தபகை யடியேனொடு மீளக்கொலோ
ஊனை யுயிர்வெருட்டி யொள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை ஏறவைக்க
ஆனை யருள்புரிந்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 2

மந்திர மொன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயுந் தொண்டனெனை
அந்தர மால்விசும்பில் அழகானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை யுத்தமனே. 3

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப்பட்(டு)
ஆழ முகந்தஎன்னை யதுமாற்றி அமரரெல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன்பர மல்லதொரு
வேழ மருள்புரிந்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 4

மண்ணுல கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்டனேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 5

அஞ்சினை ஒன்றிநின்று அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என்மனமே வைகிவானநன் னாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன்பர மல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 6

நிலைகெட விண்அதிர நிலமெங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானையேறி வழியேவரு வேனெதிரே
அலைகட லாலரையன் அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித்தான்மலை யுத்தமனே. 7

அரவொலி ஆகமங்கள் அறிவாரறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 8

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை யுத்தமனே. 9

ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல வூரன்சொன்ன
ஏழிசை யின்தமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே. 10

திருச்சிற்றம்பலம்

# எட்டாம் திருமுறை
# மாணிக்கவாசக சுவாமிகள்
# திருவாசகம்

## 8:1. சிவபுராணம்

### (திருப்பெருந்துறையில் அருளியது)

### சிவனது அநாதி முறையான பழமை

*திருச்சிற்றம்பலம்*

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண் நுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டிப்
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே

நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆர் உயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்ச்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண் ஆர் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

# 8:9. திருவெம்பாவை

**(திருவண்ணாமலையில் அருளியது)**

**சத்தியை வியந்தது**

***திருச்சிற்றம்பலம்***

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவுபாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண் முலையீர் வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்

# 8:20. திருப்பள்ளியெழுச்சி

(திருப்பெருந்துறையில் அருளியது)

## திரோதான சுத்தி

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்(டு)
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப் பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 1

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப் பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி யுதயத்(து)
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டு கொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உ_னைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தரகோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே

செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய் உலகுக் குயிரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

## 8:24. அடைக்கலப்பத்து

### (திருப்பெருந்துறையில் அருளியது)

**பக்குவநிண்ணயம்**

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியர் உடன் போயினர்யான் பாவியென்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக் கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்உன் அடைக்கலமே. 1

வெறுப்பனவே செய்யும்என் சிறுமையைநின் பெருமையினாற்
பொறுப்பவ னேஅராப் பூண்பவ னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு ளால்என் பிறவியைவேர்
அறுப்பவ னேஉடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே. 2

பெரும்பெரு மான்என் பிறவியை வேரறுத் துப்பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு மான்என் மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோன் நெடு மாலறி யாமல்நின்ற
அரும்பெரு மான்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே. 3

பொழிகின்ற துன்பப் புயல்வெள்ளத் தில்நின் கழற்புணைகொண்
டிழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச் சுறவெறிய
அழிகின் றனன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே. 4

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறம்மறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன் பங்கவிண்ணோர்பெருமான்
அருள்புரி யாய்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே. 5

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாஉடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே. 6

மின்கணினார் நுடங்கும் இடையார் வெகுளி வலையில் அகப்பட்டுப்
புன்கண னாய்ப்புரள்வேனைப் புரளாமற் புகுந்தருளி
என்கணிலே அமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கணனே உடையாய் அடியேன்உன் அடைக்கலமே. 7

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடு வேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே. 8

பிறிவறி யாஅன்பர் நின்அருட் பெய்கழல் தாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றார்உன்னை வந்திப்பதோர்
நெறியறி யேன்நின்னை யேஅறி யேன்நின்னையே அறியும்
அறிவறி யேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே. 9

வழங்குகின் றாய்க்குன் அருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேன்என் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே. 10

திருச்சிற்றம்பலம்

# 8:27. புணர்ச்சிப் பத்து

## திருப்பெருந்துறையில் அருளியது
## (அத்துவித இலக்கணம்)

திருச்சிற்றம்பலம்

சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்புகந்து
கடைபட் டேனை ஆண்டு கொண்ட
கருணா லயனைக் கருமால் பிரமன்
தடைபட் டின்னுஞ் சார மாட்டாத்
தன்னைத் தந்த என்னா ரமுதைப்
புடைபட் டிருப்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 1

ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்தைம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமான் என்றேத்தி
ஊற்று மணல்போல் நெக்குநெக்
குள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 2

நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பி லேனை
ஆண்டுகொண்ட என்ஆ ரமுதை
அள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 3

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனுஞ்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை

நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறைஇன் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 4

திகழத் திகழும் அடியும் முடியும்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்துங் காண மாட்டா
அம்மான் இம்மா நிலமுழுதும்
நிகழப் பணிகொண் டென்னை ஆட்கொண்
டாவா என்ற நீர்மை யெல்லாம்
புகழப் பெறுவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 5

பரிந்து வந்து பரமா னந்தம்
பண்டே அடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமா லுற்றேன் என்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
உரோமஞ் சிலிர்ப்ப உகந்தன் பாய்ப்
புரிந்து நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 6

நினையப் பிறருக் கரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
நோக்கித் தழைத்து தழுத்த கண்டங்
கனையக் கண்ணீர் அருவி பாயக்
கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 7

நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்

செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்கு நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 8

தாதாய் மூவே ழுலகுக்குந்
தாயே நாயேன் தனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும்
ஏதா மணியே என்றென் றேத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதாய்ந் தணைவதென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 9

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க் கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனையாண்ட
பார்ப்பா னேஎம் பரமா என்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போ தணைவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 10

திருச்சிற்றம்பலம்

# 8:28. வாழாப் பத்து

## (திருப்பெருந்துறையில் அருளியது)

### முத்தி உபாயம்

திருச்சிற்றம்பலம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 1

வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவுஞ்
செம்பெரு மானே சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே என்னையாள் வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே. 2

பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ டுவப்பதும் உன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 3

வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே

எல்லைமூ வுலகும் உருவியன் றிருவர்
காணும்நாள் ஆதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 4

பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 5

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 6

பரிதிவாழ் ஒளியாய் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 7

பந்தணை விரலாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே

அந்தமில் அமுதே அரும்பெரும் பொருளே
ஆரமு தேஅடி யேனை
வந்துய்ய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 8

பாவநா சாஉன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 9

பழுதில்தொல் 'புகழாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோ
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 10

திருச்சிற்றம்பலம்

## 8:32. பிரார்த்தனைப் பத்து

### திருப்பெருந்துறையில் அருளியது

### (சதா முத்தி)

திருச்சிற்றம்பலம்

கலந்து நின்னடியா ரோடன்று
வாளா களித்தி ருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்து நின்ற திடர்பின்னாள்
உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பச் சுடர்காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய்
ஆர்வங் கூர அடியேற்கே. 1

அடியார் சிலர்உன் அருள்பெற்றார்
ஆர்வங் கூர யான்அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி
முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியேனுடைய கடுவினையைக்
களைந்துன் கருணைக் கடல்பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
ஓவா துருக அருளாயே. 2

அருளா ரமுதப் பெருங்கடல்வாய்
அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளார் ஆக்கை இதுபொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்மானே
மருளார் மனத்தோர் உன்மத்தன்
வருமால் என்றிங் கெனக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை
உடையாய் பெறநான் வேண்டுமே. 3

வேண்டும் வேண்டும் மெய்யடியா
ருள்ளே விரும்பி எனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
அமுதே அருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடரணையாய்
தொண்ட னேற்கும் உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே. 4

மேவும் உன்றன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள்
பங்கா உன்றன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ
பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்
தாவி யாக்கை யானெனதென்
றியாது மின்றி அறுதலே. 5

அறவே பெற்றார் நின்னன்பர்
        அந்த மின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
        புலம்பு கின்றென் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
        பேரா ஒளியாய் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
        மாளா இன்ப மாகடலே. 6

கடலே அனைய ஆனந்தம்
        கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண
இடரேபெருக்கி ஏசற்றிங்
        கிருத்த லழகோ அடிநாயேன்
உடையாய் நீயே அருளிதியென்
        றுணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடரார் அருளால் இருள்நீங்கச்
        சோதீ இனித்தான் துணியாயே. 7

துணியா உருகா அருள்பெருகத்
        தோன்றுந் தொண்ட ரிடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன்
        சிவனே நின்று தேய்கின்றேன்
அணியா ரடியார் உனக்குள்ள
        அன்புந் தாராய் அருளளியத்
தணியா தொல்லை வந்தருளித்
        தளிர்பொற் பாதந் தாராயே. 8

தாரா அருளொன் றின்றியே
        தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும்
        அயலார் போல அயர்வேனோ
சீரார் அருளாற் சிந்தனையைத்
        திருத்தி ஆண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை
        வைக்க வேண்டும் பெருமானே. 9

மானோர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனநெகா
நானோர் தோளாச் சுரையொத்தால்
நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனையுணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளுங் காலந்தான்
கொடியேற் கென்றோ கூடுவதே. 10

கூடிக் கூடி உன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடி வாடி வழியற்றேன்
வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு
கலந்துள் ளுருகிப் பெருகிநெக்கு
ஆடி ஆடி ஆனந்தம்
அதுவே யாக அருள்கலந்தே. 11

திருச்சிற்றம்பலம்

# 8:33. குழைத்த பத்து

## (திருப்பெருந்துறையில் அருளியது)

## ஆத்தும நிவேதனம்

திருச்சிற்றம்பலம்

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி யுண்டோதான்
உமையாள் கணவா எனை ஆள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோஎன்(று)
அழைத்தால் அருளா தொழிவதே
அம்மா னேஉன் னடியேற்கே. 1

அடியேன் அல்லல் எல்லாம்முன்
அகல ஆண்டாய் என்றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறாஎம்
கோவே ஆவா என்றருளிச்
செடிசேர் உடலைச் சிதையாத
தெத்துக் கெங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணிகொள்ளா(து)
ஒறுத்தால் ஒன்றும் போதுமே. 2

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எம்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே நீகொண்டால்
என்றான் கெட்ட திரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே. 3

மானேர் நோக்கி மணவாளா
மன்னே நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகஎன் றனைநூக்கி
உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளும்நாள்
என்றென் றுன்னைக் கூறுவதே. 4

கூறும் நாவே முதலாகக்
கூறுங் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்பும்நீ
தீமை நன்மை முழுதும்நீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை
மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்
தேறும் வகைஎன் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ. 5

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே. 6

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே. 7

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்ன தோஇங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே. 8

கண்ணார் நுதலோய் கழலிணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணா திரவும் பகலும்நான்
அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ
அடிமை சால அழகுடைத்தே. 9

அழகே புரிந்திட் டடிநாயேன்
        அரற்று கின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
        காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம்எனக்குப்
        புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே
        கோனே என்னைக் குழைத்தாயே. 10

திருச்சிற்றம்பலம்

# ஒன்பதாம் திருமுறை

## திருவிசைப்பா

### 1. திருமாளிகைத் தேவர் அருளியவை

**கோயில்:** **பண் - பஞ்சம்**

*திருச்சிற்றம்பலம்*

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

தற்பரம் பொருளே சசிகண்டா சிகண்டா
சாமகண்டா அண்ட வாணா
நற்பெரும் பொருளாய் உரைகலந் துன்னை
என்னுடை நாவினால் நவில்வான்
அற்பனென் னுள்ளத் தளவிலா உன்னைத்
தந்தபொன் னம்பலத் தாடீ
கற்பமாய் உலகாய் அல்லையா னாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே. 2

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாய்என்
பிறப்பிறப் பறுத்தபே ரொளியே
கருமையின் வெளியே கயற்கணாள் இமவான்
மகள்உமை யவள்களை கண்ணே
அருமையின் மறைநான் கோலமிட் டரற்றும்
அப்பனே! அம்பலத் தமுதே
ஒருமையிற் பலபுக் குருவிநின் றாயைத்
தொண்டனேன் உரைக்குமா றுரையே. 3

கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி இறந்ததோர் குணமே
காலமே! கங்கை நாயகா எங்கள்
காலகா லா! காம நாசா

ஆலமே அமுதுண் டம்பலஞ் செம்பொற்
கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே! தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே. 4

உயர்கொடி யாடை யிடைபட லத்தின்
ஓமதூ மப்பட லத்தின்
பெயர்நெடு மாடத்(து) அகிற்புகைப் படலம்
பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிகள் நிரந்துசேர் கனகம்
நிறைந்தசிற் றம்பலக் கூத்தா
மயர்வறும் அமரர் மகுடந்தோய் மலர்ச்சே
வடிகள்என் மனத்துவைத் தருளே. 5

திருநீ றிடாவுருத் தீண்டேன் என்னும்
திருநீறு மெய்த்திரு முண்டத்திட்டுப்
பெருநீல கண்டன் திறங்கொண்(டு) இவள்
பிதற்றிப் பெருந்தெரு வேதிரியும்
வருநீர் அருவி மகேந்தி ரப்பொன்
மலையின் மலைமக ளுக்கருளுங்
குருநீ என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 6

உற்றாய் எண்ணும் உன்னை யன்றி மற்றொன்(று)
உணரேன் என்னும் உணர்வுகள் கலக்கப்
பெற்றாய ஐந்தெ ழுத்தும் பிதற்றிப்
பிணிதீர வெண்ணீறிடப் பெற்றேன் என்னும்
கற்றாய சோதி மகேந்தி ரம்சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாதநெஞ்சிற்
குற்றாய் என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 7

### 2. சேந்தனார் அருளியவை

### (அ) திருவீழிமிழலை: பண் - பஞ்சமம்

ஏகநா யகனை இமையவர்க்(கு) அரசை
என்னுயிர்க்(கு) அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற்(கு) அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த

மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே. 8

**(ஆ) திருவாவடுதுறை: பண் - பஞ்சமம்**

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காமபு ராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்குநீர்த்
திருவா வடுதுறை வேந்தனோ(டு)
ஆலு மதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே. 9

**(இ) திருவிடைக்கழி: பண் - பஞ்சமம்**

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள் சூழ்கோழிவெல் கொடியோன்
காலல்நற் சேனையென் னக்காப் பவன்என்
பொன்னை மேகலை கவர்வானே
தேவின்நற் றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூரும்
சுப்பிர மண்ணியன் தானே. 10

தானமர் பொருது வானவர் சேனை
மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கோனமர் கூர்தன் குலவிளங் களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே? 12

குணமணி குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குறிக்கொளா(து) அழகோ?
மணமணி மறையோர் வானவர் வையம்
உய்யமற்(று) அடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே. 12

## 3. கருவூர்த் தேவர் அருளியவை

### (அ) கோயில் பண் - புறநீர்மை

கணம்விரி குடுமிச் செம்மணிக் கவைநாக்
கறையணல் கட்செவிப் பகுவாய்ப்
பணம்விரி துத்திப் பொறிகொள்வெள் ளெயிற்றுப்
பாம்பணி பரமர்தங் கோயில்
மணம்விரி தருதே மாம்பொழில் மொழுப்பில்
மழைதவழ் வளரிளங் கமுகந்
திணர்நிரை அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 13

### (ஆ) தஞ்சை இராசராசேச்சரம்: பண் - பஞ்சமம்

உலகெலாம் தொழவந்(து) எழுகதிர்ப் பருதி
ஒன்றுநூ றாயிரங் கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்(பு) அச்சோ
அங்ஙனே அழகிதோ் அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத்(து) இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத்(து) இவர்க்கே. 14

நெற்றியிற் கண்என் கண்ணின்நின் றகலா
நெஞ்சினில் அஞ்சிலம்(பு) அலைக்கும்
பொற்றிரு வடிஎன் குடிமுழு தாளப்
புகுந்தள் போந்தன இல்லை

மற்றெனக்(கு) உற(வு) ஏன் மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 15

**(இ) திருவிடைமருதூர்: பண் - பஞ்சமம்**

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிருள் நடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி உமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொற்றோட் டவிர்சடை மொழுப்பின்
அழிவழ கிய திரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடம் திருவிடை மருதே. 16

பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவல்
படிவழி சென்று சென்றேறிச்
சிந்தையுந் தானும் கலந்ததோர் கலவி
தெரியினும் தெரிவுறா வண்ணம்
எந்தையுந் தாயும் யானும் என்(று) இங்ஙன்
எண்ணில்பல் லூழிகள் உடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே. 17

## 4. சேதிராயர் அருளியவை

**கோயில் - பண்: பஞ்சமம்**

சேலு லாம்வயல் தில்லையுளீர்! உமைச்
சால நாள்அயன் சார்வதி னால்இவள்
வேலை யார்விடம் உண்டுகந் தீர்என்று
மால தாகும்என் வாணுதலே. 18

வாணு தற்கொடி மாலது வாய்மிக
நாணம் அற்றனள் நான்அறி யேன்இனிச்
சேணு தற்பொலி தில்லையுளீர்! உமைக்
காணில் எய்ப்பிவள் காரி கையே. 19

காரி கைக்கரு ளீர் கரு மால்கரி
ஈரு ரித்தெழு போர்வையி னீர்! மிகு
சீரி யல்தில்லை யாய்சிவ னே! என்று
வேரி நற்குழ லாள்இவள் விம்முமே. 20

விம்மி விம்மியே வெய்துயிர்த்(து) ஆளெனா
உம்மை யேநினைத்(து) ஏத்துமொன்(று)ஆகிலன்
செம்ம லோர்பயில் தில்லையு ளீர்! எங்கள்
அம்மல் ஓதி அயர்வு றுமே. 21

அயர்வுற்(று) அஞ்சலி கூப்பி அந்தோ! எனை
உயவுன் கொன்றையந்தார்அரு ளாய்எனும்
செயலுற் றார்மதில் தில்லையு ளீர்! இவண்
மயலுற் றாள்என் நன்மா திவளே. 22

திருச்சிற்றம்பலம்

## சேந்தனார் அருளிய
## திருப்பல்லாண்டு

**கோயில்:** **பண் - பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 1

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்தபொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே. 2

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக்(கு) ஆலநிழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 3

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங் கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 4

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு)
ஓலமிட்(டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பன்என் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே. 5

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந்திசை திசையன்
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்
தனத்தனை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 6

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற
உளறி இமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. 7

சேலுங் கயலுந் திளைக்குங்
கண்ணார்இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி
தந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 8

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 9

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 10

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம்பெருகி
விழலொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 11

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே. 12

எந்தை எந்தாய் சுற்ற(ம்) முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண்டா ருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே. 13

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# பத்தாம் திருமுறை

## திருமூல நாயனார் அருளிய

# திருமந்திரம்

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. 1

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே. 2

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே. 3

யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. 4

தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக் கண்டார்நிலை சொல்வதெவ் வாறே. 5

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே. 6

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. 7

அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும்அ றிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 8

அன்பும் அறிவும் அடக்கமு மாய்நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்
முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்
அன்புற ஐந்தில் அமர்ந்துநின் றானே. 9

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியி லோரே. 10

உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனைக்
கள்ளத்தி னாலுங் கலந்தறி வார்இல்லை
வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினைப்
பள்ளத்தி லிட்டதோர் பந்தருள் ளானே. 11

கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத் திடையில்நின் றானே. 12

மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே. 13

கூத்தனைக் காணுங் குறிபல பேசிடிற்
கூத்த னெழுத்தின் முதலெழுத் தோதினார்
கூத்தனொ டொன்றிய கொள்கைய ராய்நிற்பர்
கூத்தனைக் காணுங் குறியது வாமே. 14

காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்
பேணுஞ் சிவனும் பிரமனும் மாயனுங்
காணுந் தலைவிநற் காரணி காணே. 15

யோகநற் சத்தி ஒளிபீடந் தானாகும்
யோகநற் சத்தி ஒளிமுகந் தெற்காகும்
யோகநற் சத்தி உதர நடுவாகும்
யோகநற் சத்திதாள் உத்தரந் தேரே. 16

கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டனர்
கண்டங்கள் ஒன்பதுங் கண்டாய் அரும்பொருள்
கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டமாங்
கண்டங்கள் கண்டோர் கடுஞ்சுத்த சைவரே. 17

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே. 18

சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது
மன்மார்க்க மாமுத்தி சித்திக்குள் வைப்பதாம்
பின்மார்க்க மானது பேராப் பிறந்திறந்
துன்மார்க்க ஞானத் துறுதியு மாமே. 19

மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி வினையறுத்தின்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
அருட்டிகழ் ஞான மதுபுரிந் தானே. 20

ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவனலன்
தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்
மாறுதல் இன்றி மனைபுக லாமே. 21

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. 22

ஒடுங்கி நிலைபெற்ற வுத்தமர் உள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை
படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே. 23

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே. 24

சத்தி சிவன்விளை யாட்டாம் உயிராகி
ஒத்த இருமாயா கூட்டத் திடையூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிறிவித்துச்
சித்தம் புகுந்து சிவமக மாக்குமே. 25

தானே யறியும் வினைகள் அழிந்தபின்
நானே யறிகிலன் நந்தி யறியுங்கொல்
ஊனே யுருகி யுணர்வை யுணர்ந்தபின்
தேனே யனையனந் தேவர் பிரானே. 26

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே. 27

அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே. 28

மோனத்து முத்திரை முத்தர்க்கு முத்திரை
ஞானத்து முத்திரை நாதர்க்கு முத்திரை
தேனிக்கு முத்திரை சித்தாந்த முத்திரை
கானிக்கு முத்திரை கண்ட சமயமே. 29

ஐந்தில் ஒடுங்கில் அகலிட மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவ மாவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பத மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே. 30

இன்புறு வீர்அறிந் தேஎம் இறைவனை
அன்புறு வீர்தவஞ் செய்யுமெய்ஞ் ஞானத்துப்
பண்புறு வீர்பிற வித்தொழி லேநின்று
துன்புறு பாசத் துழைத்தொழிந் தீரே. 31

ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே. 32

ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்
காணு முளைக்குத் தவுடுமி யான்மாவுந்
தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே. 33

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே. 34

வெல்லும் அளவில் விடுமின் வெகுளியை
செல்லும் அளவுஞ் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினாற்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே. 35

ஆதித்தன் தோன்ற வரும்பது மாதிகள்
பேதித்த தவ்வினை யாற்செயல் சேதிப்ப
ஆதித்தன் றன்கதி ராலவை சேட்டிப்பப்
பேதித்துப் பேதியா வாறருட் பேதமே. 36

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே. 37

மாய விளக்கது நின்று மறைந்திடுந்
தூய விளக்கது நின்று சுடர்விடுங்
காய விளக்கது நின்று கனன்றிடுஞ்
சேய விளக்கினைத் தேடுகின் றேனே. 38

சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே. 39

வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே. 40

அகாரம் உயிரே உகாரம் பரமே
மகாரஞ் சிவமாய் வருமுப் பதத்துச்
சிகாரஞ் சிவமே வகாரம் பரமே
அகாரம் உயிரென் றறையலு மாமே. 41

முத்திக்கு வித்து முதல்வன்தன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரந் தானாதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே. 42

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன் தோய்ந்துந்தோ யாதவர்
முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே. 43

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே. 44

ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொரு மொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே. 45

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 46

எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ்சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே. 47

தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே. 48

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே. 49

வாழ்கவே வாழ்என் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே. 50

திருச்சிற்றம்பலம்

*திருச்சிற்றம்பலம்*

# பதினோராந் திருமுறை

## காரைக்கால் அம்மையார் அருளிய

## திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி அலறி உலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. 1

கள்ளிக் கவட்டிடைக் காலைநீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்துமையை
விள்ள எழுதி வெடுவெடென்ன
நக்கு வெருண்டு விலங்குபார்த்துத்
துள்ளிச் சுடலைச் சுடுபிணத்தீச்
சுட்டிட முற்றுஞ் களிந்துபூழ்தி
அள்ளி அவிக்கநின் றாடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. 2

வாகை விசிந்துவெண் ணெற்றொலிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளையாங்கே
கூகையொ டாண்டலை பாடஆந்தை
கோடதன் மேற்குதித் தோடவீசி
ஈகை படர்தொடர் கள்ளிநீழல்
ஈமம் இடுசுடு காட்டகத்தே
ஆகங் குளிர்ந்தனல் ஆடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. 3

குண்டிலோ மக்குழிச் சோற்றைவாங்கிக்
குறுநரி தின்ன அதனைமுன்னே
கண்டிலோம் என்று கனன்றுபேய்கள்
கையடித் தோடிடு காடரங்கா

மண்டலம் நின்றங் குளாளம்இட்டு
வாதித்து வீசி எடுத்தபாதம்
அண்டம் உறநிமிர்ந் தாடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. 4

விழுது நிணத்தை விழுங்கியிட்டு
வெண்டலை மாலை விரவப்பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளியென்று
பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொடுத்துப்
போயின தாயை வரவுகாணா
தழுதுறங் கும்புறங் காட்டில்ஆடும்
அப்பன் இடந்திரு வாலங்காடே. 5

பட்டடி நெட்டுகிர்ப் பாறுகாற்பேய்
பருந்தொடு கூகை பகண்டைஆந்தை
குட்டி யிடமுட்டை கூகைபேய்கள்
குறுநரி சென்றணங் காடுகாட்டிற்
பிட்டடித் துப்புறங் காட்டில்இட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டிஆங்கே
அட்டமே பாயநின் றாடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. 6

சுழலும் அழல்விழிக் கொள்ளிவாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட்டோடி ஆடித்
தழலுள் எரியும் பிணத்தைவாங்கித்
தான்தடி தின்றணங் காடுகாட்டிற்
கழல்ஒலி ஓசைச் சிலம்பொலிப்பக்
காலுயர் வட்டணை இட்டுநட்டம்
அழல்உமிழ்ந் தோரி கதிக்க ஆடும்
அப்பன் இடந்திரு வாலங்காடே. 7

நாடும் நகரும் திரிந்துசென்று
நன்னெறி நாடி நயந்தவரை
மூடி முதுபிணத் திட்டமாடே
முன்னிய பேய்க்கணம் சூழச்சூழக்

காடும் கடலும் மலையும் மண்ணும்
விண்ணுஞ் சுழல் அனல்கையேந்தி
ஆடும் அரவப் புயங்கன் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. 8

துத்தங்கைக் கிள்ளை விளரிதாரம்
உழைஇளி ஓசைபண் கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதந் துந்துபி தாளம்வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்றோல்
தமருகங் குடமுழா மொந்தைவாசித்
தத்தனை விரவினோ டாடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. 9

புந்தி கலங்கி மதிமயங்கி
இறந்தவ ரைப்புறங் க ாட்டில் இட்டுச்
சந்தியில் வைத்துக் கடமை செய்து
தக்கவர் இடர் செந்தீவிளக்கா
முந்தி அமரர் முழவின் ஓசை
திசைகது வச்சிலம் பார்க்கஆர்க்க
அந்தியில் மாநடம் ஆடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. 10

ஒப்பினை இல்லவன் பேய்கள்கூடி
ஒன்றினை ஒன்றடித் தொக்கலித்துப்
பப்பினை யிட்டுப் பகண்டையாடப்
பாடிருந் தந்நரி யாழ்அமைப்ப
அப்பனை அணிதிரு வாலங்காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும்வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே. 11

திருச்சிற்றம்பலம்

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிச் செய்த

# சேத்திரத்திருவெண்பா

திருச்சிற்றம்பலம்

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று - நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். 1

கடுவடுத்த நீர்கொடுவா காடிதா என்று
நடுநடுத்து நாஅடங்கா முன்னம் - பொடி அடுத்த
பாழ்க்கோட்டஞ் சேராமுன் பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டஞ் செப்பிக் கிட. 2

குந்தி நடந்து குனிந்தொருகை கோல்ஊன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி - வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை. 3

காளை வடிவொழிந்து கையுறவோ டையுறவாய்
நாளும் அணுகி நலியாமுன் - பாளை
அவிழ்கமுகம் பூஞ்சோலை ஆரூரற் காளாய்க்
கவிழ்கமுகம் கூம்புகஎன் கை. 4

வஞ்சியன நுண்ணிடையார் வாள்தடங்கண் நீர்சோரக்
குஞ்சி குறங்கின்மேற் கொண்டிருந்து - கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா என்னாமுன் நெஞ்சே
திருத்துருத்தி யான்பாதம் சேர். 5

காலைக் கலையிழையாற் கட்டித்தாங் கையார்த்து
மாலை தலைக்கணிந்து மைஎழுதி - மேலோர்
பருக்கோடி முடிப் பலர்அழா முன்னம்
திருக்கோடி காஅடைநீ சென்று. 6

மாண்டுவாய் அங்காவாய் முன்னம் மடநெஞ்சே
வேண்டுவாய் ஆகி விரைந்தொல்லைப் - பாண்டவாய்த்
தென்னிடைவாய் மேய சிவனார் திருநாமம்
நின்னிடைவாய் வைத்து நினை. 7

தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப் பிணம்என்று பேரிட்டுக் - கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை. 8

அழுகு திரிகுரம்பை ஆங்கதுவிட் டாவி
ஒழுகும் பொழுதறிய ஒண்ணா - கழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் தென்பால்
குழித்தண் டலையானைக் கூறு. 9

படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலாம் ஆண்ட
முடியரசர் செல்வத்து மும்மைக் - கடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்(டு)
ஓடேந்தி உண்ப துறும். 10

குழீஇயிருந்த சுற்றம் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த அங்கங்கள் எல்லாம் - தழீஇயிருந்தும்
என்னானைக் காவா இதுதகா தென்னாமுன்
தென்னானைக் காவடைநீ சென்று. 11

குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சே - மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்
இருப்பின்னை அங்காந் திளைத்து. 12

காளையர்கள் ஈளையர்கள் ஆகிக் கருமயிரும்
பூளையெனப் பொங்கிப் பொலிவழிந்து - சூளையர்கள்
ஓகாளஞ் செய்யாமுன் நெஞ்சமே உஞ்சேனை
மாகாளங் கைதொழுது வாழ்த்து. 13

இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே - நல்ல
கிளைகுளத்து நீர் அளவே கிற்றியே நெஞ்சே
வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து. 14

அஞ்சனஞ்சேர் கண்ணார் அருவருக்கும் அப்பதமாய்க்
குஞ்சி வெளுத்துடலங் கோடாமுன் - நெஞ்சமே
போய்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழுநீ சார்ந்து. 15

இட்ட குடிநீர் இருநாழி ஓர்உழக்காச்
சட்டஒரு முட்டை நெய் தான்கலந் - தட்ட
அருவாச்சா ரென்றங் கழாமுன்னம் பாச்சிற்
றிருவாச்சி ராமமே சேர். 16

கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்த துடன்இரா வண்ணம் - அழிந்த
திராமலையா கொண்டுபோ என்னாமுன் நெஞ்சே
சீராமலையான் பாதமே சேர். 17

இழவாடிச் சுற்றத்தார் எல்லாருங் கூடி
விழவாடி ஆவிவிடா முன்னம் - மழபாடி
ஆண்டானை ஆரமுதை அன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை. 18

உள்ளிடத்தான் வல்லையே நெஞ்சமே ஊழ்வினைகள்
கள்ளிடத்தான் வந்து கலவாமுன் - கொள்ளிடத்தின்
தென்றிருவாப் பாடியான் தெய்வமறை நான்கனையும்
தன்றிருவாய்ப் பாடியான் தாள். 19

என்னெஞ்சே உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னஞ்செய் வாயாகிற் காலத்தால் - வன்னெஞ்சேய்
மாகம்பத் தானை உரித்தானை வண்கச்சி
ஏகம்பத் தானை இறைஞ்சு. 20

கரம்ஊன்றிக் கண்இடுங்கிக் கால்குலைய மற்றோர்
மரம்ஊன்றி வாய்குதட்டா முன்னம் - புரம்மூன்றும்
தீச்சரத்தாற் செற்றான் திருப்பனந்தாள் தாடகைய
ஈச்சரத்தான் பாதமே ஏத்து. 21

தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்(டு)
எஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன் - நஞ்சம்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண் டிருக்கப் பெறின். 22

நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விளையாதே - கூற்றுதைத்தான்
ஆடரவங் கச்சா அரைக்கசைத்த அம்மான்றன்
பாடரவங் கேட்ட பகல். 23

உய்யும் மருந்திதனை உண்மின் எனஉற்றார்
கையைப் பிடித்தெதிரே காட்டியக்காற் - பைய
எழுந்திருமி யான்வேண்டேன் என்னாமுன் நெஞ்சே
செழுந்திரும யானமே சேர். 24

திருச்சிற்றம்பலம்

### சேரமான்பெருமாள் நாயனார் அருளிச்செய்த

## பொன்வண்ணத்தந்தாதி

### (முதற் பத்துப் பாடல்கள்)

திருச்சிற்றம்பலம்

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே. 1

ஈசனைக் காணப் பலிகொடு செல்லஎற் றேஇவளோர்
பேயனைக் காமுறு பிச்சிகொ லாம்என்று பேதையர்முன்
தாயெனை ஈர்ப்பத் தமியேன் தளர அத் தாழ்சடையோன்
வாவெனைப் புல்லஎன் றான்இமை விண்டன வாட்கண்களே. 2

கண்களங் கஞ்செய்யக் கைவளை சோரக் கலையுஞ்செல்ல
ஒண்களங் கண்நுதல் வேர்ப்பஒண் கொன்றையந் தார்உருவப்
பெண்களங் கம்மிவள் பேதுறும் என்பதோர் பேதைநெஞ்சம்
பண் களங் கம்மிசை பாடநின் ற ாடும் பரமனையே. 3

பரமனை யேபலி தேர்ந்துநஞ் சுண்டது பன்மலர்சேர்
பிரமனை யேசிரங் கொண்டுங் கொடுப்பது பேரருளாம்
சரமனை யெஉடம் பட்டும் உடம்பொடு மாதிடமாம்
வரமனை யேகிளை யாகுமுக் கண்ணுடை மாதவனே. 4

தவனே உலகுக்குத் தானே முதல்தான் படைத்த எல்லாம்
சிவனே முழுதும்என் பார்சிவ லோகம் பெறுவர்செய்ய
அவனே அடல்விடை ஊர்தி கடலிடை நஞ்சம்உண்ட
பவனே எனச்சொல்லு வாரும் பெறுவர்இப் பாரிடமே. 5

இடமால் வலந்தான் இடப்பால் துழாய்வலப் பால்ஒண்கொன்றை
வடமா லிடந்துகில் தோல்வலம் ஆழி இடம்வலம்மான்
இடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழில் நலஞ்சேர்
குடமால் இடம்வலங் கொக்கரை யாம்எங்கள் கூத்தனுக்கே. 6

கூத்துக் கொலாம்இவர் ஆடித் திரிவது கோல்வளைகள்
பாத்துக்கொலாம்பலி தேர்வது மேனி பவளங்கொலாம்
ஏத்துக் கொலாம்இவர் ஆதரிக் கின்ற திமையவர்தம்
ஓத்துக் கொலாம்இவர் கண்டதிண் டைச்சடை உத்தமரே. 7

உத்தம ராய்அடி யார்உல காளத் தமக்குரிய
மத்தம் அராமதி மாடம் பதிநலஞ் சீர்மைகுன்றா
எத்தம ராயும் பணிகொள்ள வல்ல இறைவர்வந்தென்
சித்தம ராய்அக லாதுடன் ஆடித் திரிதவரே. 8

திரிதவர் கண்ணுள்ளும் உள்ளத்தின் உள்ளுந் திரிதரினும்
அரிதவர் தன்மை அறிவிப்ப தாயினும் ஆழிநஞ்சேய்
கரிதவர் கண்டம் வெளிதவர் சாந்தம்கண் மூன்றொடொன்றாம்
பரிதவர் தாமே அருள்செய்து கொள்வர்தம் பல்பணியே. 9

பணிபதம் பாடிசை ஆடிசை யாகப் பணிமலரால்
அணி பதங் கன்பற் கொளப்பனை அத்தவற் கேஅடிமை
துணிபதங் காமுறு தோலொடு நீறுடல் தூர்த்துநல்ல
தணிபதங் காட்டிடுஞ் சஞ்சலம் நீஎன் தனிநெஞ்சமே. 10

திருச்சிற்றம்பலம்

## நக்கீரர் அருளிய

# திருமுருகாற்றுப்படை

### 1. திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டாஅங்கு
ஓ அற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி
உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன் தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை

மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூழ் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறிக்
தலைப்பெயல் தலைஇய தண்நறும் கானத்து
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து

உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணிக் கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்

பலகாசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்(து) இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழைச்
சேண் இகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்

செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாள் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியோடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்

துவர முடித்த துகள் அறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ் அரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக

வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குற(டு) உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலை கொட்டி விரிமலர்

வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்(று)அடு விறல்கொடி
வாழிய பெரி(து) என்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்

சூர் அர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்க உள் புக்குச்

சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பில் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதில் பிணர் மோட்டு

உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்(டு) உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்(று)அடு விறல்களம் பாடித் தோள்பெயரா

நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து

எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்(து) உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலஉடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்(று) எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து

மாடமலி மறுகில் கூடல் குடவயின்
இருஞ்சேற்(று) அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்

அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன் அதா அன்று.

## 2. திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வர
படுமணி இரட்டு மருங்கிற் கடுநடைக்

கூற்றத்(து) அன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந்து அன்ன வேழமேல் கொண்டு
ஐவே(று) உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னி பொற்ப

நகைதாழ்பு துயல்வரூஉம் வகை அமை பொலங்குழை
சேணவிளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாஇல் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன் நேர்பு எழுதரு வாள்நிற முகனே

மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பலகதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத் தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்முற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் குமே ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கருவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே ஒருமுகம்

குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு

வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை உக்கம் சேர்த்தியது ஒருகை
நலம்பெறு கலிங்கத்துக் குரங்கின்மிசை அசைஇயது ஒருகை
அங்குசம் கடாவ ஒருகை இருகை

ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப ஒருகை
மார்பொடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப, ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட ஒருகை

நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞரல

உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்(பு) ஆறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் விழுச்சீர்
அலைவாய் சேறலும் நிலைஇய பண்பே அதாஅன்று.

## 3. திருவாவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்(பு) எழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்

பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்(பு) ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை

யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந்(து) அன்ன மாசில் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்

நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம்(பு) உளர
நோய் இன்(று) இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர், அவிர்தொறும்
பொன்உரை கடுக்கும் திதலையர், இன் நகைப்

பருமம் தாங்கிய பணிந்(து) ஏந்(து) அல்குல்
மா(சு)இல் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவொ(டு) ஒடுங்கிய தூம்பு(உ)டை வால்எயிற்(று)
அழல் என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ் சிறைப்

புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூ எயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப் பத்(து) அடுக்கிய நாட்டத்து நூறுபல்

வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரிரண்(டு) ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நால்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய

உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏம் உறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வர

பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரோடு
ஒன்பதிற்(று) இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத்(து) அன்ன தோன்றலர் மீன் சேர்பு
வளி கிளர்ந்தன்ன செலவினர் வளியிடைத்

தீ எழுந்(து) அன்ன திறலினர் தீப்பட
உரும் இடித்(து) அன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்து உடன் காணத்
தாஇல் கொள்கை மடந்தையொடு சின்னாள்

ஆவினன்குடி அசைதலும் உரியன் அதா அன்று.

## 4. திருவேரகம்

இருமூன்(று) எய்திய இயல்பினின் வழாஅ(து)
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்(கு) இரட்டி இளமைநல் யாண்டு
ஆறினில் கழிப்பிய அறன்நவில் கொள்கை

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்(து)

ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரி(து) உவந்து
ஏரகத்து உறைதலும் உரியன் அதாஅன்று.

## 5. குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்

அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீ(டு) அமை விளைந்த தேக்கள் தேறல்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல் உளர்ப்(பு) அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்

முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மரா அத்த வால்இணர் இடைஇடுபு
சுரும்பு உணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு

செய்யன், சிவந்த ஆடையன், செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன், கழலினன், செச்சைக் கண்ணியன்,
குழலன், கோட்டன், குறும்பல் இயத்தன்
தகரன், மஞ்ஞையன், புகரில்சேவலம்

கொடியன் நெடியன் தொடிஅணி தோழன்
நரம்(பு) ஆர்த்(து) அன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன் நேர்பு துகிலினன்
முழ(வு) உறழ் தடக்கையின் இயல் ஏந்தி

மென்தோள் பலபிணை தழீஇத் தலைதந்து
குன்றுதோறா டலும் நின்றதன் பண்பே அதாஅன்று.

## 6. பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து
வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்

யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்

மன்றமும் பொதியிலும், கந்துடை நிலையினும்,
மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர,
நெய்யோடு ஐயவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டை உடீஇச்,

செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து, பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்

பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையுற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பில் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியோடு இன்னியம் கறங்க

உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியனநகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்

கோடுவாய் வைத்து கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்(கு) எய்தினர் வழிபட
ஆண்டாண்(டு) உறைதலும் அறிந்த வாறே
ஆண்டாண்டு ஆயினும் ஆகக் காண்தக

முந்து நீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெரும் சிமயத்து நீலப் பைஞ்சுனை

ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ

ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பின் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!

மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக
நசையுநர்க்கு ஆர்த்தும் இசை பேராள

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்(டு) அமர் கடந்தநின் வென்(று) ஆ(டு) அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்(கு) அறுத்த மொய்ம்பின் மதவலி!

போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான் அறி அளவையின் ஏத்தி, ஆனாது
நின் அளந்(து) அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தெனென் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய் எனக்

குறித்தது மொழியா அளவையில் குறித்துடன்
வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்
சா(று) அயர் களத்து வீறு பெறத் தோன்றி

அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்(து) என

இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்(கு) உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்(து) எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளம் நலம் காட்டி

அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வர(வு) என
அன்புடை நன்மொழி அளைஇ விளிவு இன்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்குமதி பலவுடன்

வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய, நன்பல

ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று

நன்பொன்மணி நிறம்கிளர பொன் கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்

கோழி வயப்பெடை இரீயக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாஅடி உளியம்

பெருங்கல் விடர் அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேண் நின்று

இழுமென இழிதரும் அருவிப்
பழம் முதிர் சோலை மலைக் கிழவோனே.

***திருச்சிற்றம்பலம்***

**திருமுருகாற்றுப்படை முற்றிற்று.**

### பட்டினத்துப்பிள்ளையார் அருளிய

# திருவேகம்பமுடையார் திருவந்தாதி

## முதற்பத்துப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

மெய்த்தொண்டர் செல்லும் நெறி அறி யேன்மிக நற்பணிசெய
கைத்தொண்டர் 'தம்மிலும் நற்றொண் டுவந்திலன் உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற மேஉன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி யோகச்சி ஏகம்பனே. 1

ஏகம்ப னேஎன்னை ஆள்பவ னேஇமை யோர்க்கிரங்கிப்
போகம்பன் னாளுங் கொடுக்கின்ற நாயக பொங்கும்ஐவாய்
நாகம்பொன் னாரம் எனப்பொலி வுற்றுநன் னீறணியும்
ஆகம்பொன் மாமலை ஒப்பவ னேஎன்பன் ஆதரித்தே. 2

தரித்தேன் மனத்துன் திகழ்தரு நாமம் தடம்பொழில்வாய்
வரித்தேன் முரல்கச்சி ஏகம்ப னேஎன்றன் வல்வினையை
அரித்தேன் உனைப்பணி யாதவர் ஏழைமை கண்டவரைச்
சிரித்தேன் உனக்கடி யார்அடி பூணத் தெளிந்தனனே. 3

தெளிதரு கின்றது சென்றென் மனம்நின் திருவடிவந்
தளிதரு நின்னருட் கையம் இனியில்லை அந்திச்செக்கர்
ஒளிதரு மேனிஎம் ஏகம்ப னேஎன் றுகந்தவர்தாள்
தளிதரு தூளிஎன் றன்தலை மேல்வைத்த தன்மைபெற்றே. 4

பெற்றுகந் தேன்என்றும் அர்ச்சனை செய்யப் பெருகுநின்சீர்
கற்றுகந் தேன்என் கருத்தினி தாக்கச்சி ஏகம்பத்தின்
பற்றுகந் தேறும் உகந்தவ னேபட நாகக்கச்சின்
சுற்றுகந் தேர்விடை மேல்வரு வாய்நின் துணையடியே.

அடிநின்ற சூழல் அகோசரம் மாலுக் கயற்கலரின்
முடிநின்ற சூழ்முடி காண்பரி தாயிற்றுக் கார்முகிலின்
இடிநின்ற சூழ்குரல் ஏறுடை ஏகம்ப யாம்எங்ஙனே
வடிநின்ற சூலப் படையுடை யாயை வணங்குவதே. 6

வணக்கந் தலைநின் திருவடிக் கேசெய்யும் மையல்கொண்டோர்
இணக்கன்றி மற்றோர் இணக்கறி வோமல்லம் வல்லரவின்
குணக்குன்ற வில்லி குளிர்கச்சி ஏகம்பங் கூடினல்லாற்
கணக்கன்று மற்றொரு தேவரைப் பாடுங் கவிநலமே. 7

நலந்தர நானொன்று சொல்லுவன் கேண்மின்நல் லீர்கள் அன்பு
கலந்தர னார்க்கச்சி ஏகம்பம் கண்டு கனற்றிகிரி
சலந்தரன் ஆகம் ஒழிக்கவைத் தாய்தக்கன் வேள்வியெல்லாம்
நிலந்தர மாகச் செய் தாயென்று பூசித்து நின்மின்களே. 8

மின்களென் றார்சடை கொண்டலென் றார்கண்டம் மேனி வண்ணம்
பொன்களென் றார்வெளிப் பாடுதம் பொன்அடி பூண்டுகொண்ட
என்களென் றாலும் பிரிந்தறி யார்கச்சி ஏகம்பத்தான்
தன்களென் றாருல கெல்லாம் நிலைபெற்ற தன்மைகளே. 9

தன்மையிற் குன்றாத் தவத்தோர்இமையவர் தாம்வணங்கும்
வன்மையிற் குன்றா மதிற்கச்சி ஏகம்பர் வண்கயிலைப்
பொன்மயிற் சாயலுஞ் சேயரிக் கண்ணும் புரிகுழலும்
மென்மையிற் சாயும் மருங்குனுங் காதல் விளைத்தனவே. 10

***திருச்சிற்றம்பலம்***

**நம்பியாண்டார் நம்பி அருளிய**

# திருநாரையூர்
# விநாயகர் திருவிரட்டைமணிமாலை

திருச்சிற்றம்பலம்

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான். 1

முகத்தாற் கரியன்னென் றாலும் தனியே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென் றேமெய்ம்மை உன்னும் விரும்படியார்
அகத்தான் திகழ்திரு நாரையூர் அம்மான் பயந்தஎம்மான்
உகத்தா னவன்றன் உடலம் பிளந்த ஒருகொம்பனே. 2

கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர் - நம்பனையே
தன்னவலஞ் செய்துகொளுந் தாழ்தடக்கை யாயென்நோய்
பின்வலஞ் செய்வதெனோ பேசு. 3

பேசத் தகாதெனப் பேயெரு தும்பெருச் சாளியும்என்(று)
ஏசத் தகும்படி ஏறுவ தேஇமை யாதமுக்கட்
கூசத் தகுந்தொழில் நுங்கையும் நுந்தையும் நீயும்இந்தத்
தேசத் தவர்தொழு நாரைப்பதியுட் சிவக்களிறே. 4

களிறு முகத்தவனாய்க் காயஞ்செந் தீயின்
ஒளிறும் உருக்கொண்ட தென்னே - அளறுதொறும்
பின்னாரை யூர்அரல் ஆரம் பெரும்படுகர்
மன்னாரை யூரான் மகன். 5

மகத்தினன் வானவர் பற்கண் சிரந்தோள் நெரித்தருளும்
சுகத்தினன் நீள்பொழில் நாரைப் பதியுட்சுரன்மகற்கு
முகத்தது கைஅந்தக் கையது மூக்கந்த மூக்கதனின்
அகத்தது வாய்அந்த வாயது போலும் அடுமருப்பே. 6

மருப்பைஒரு கைக்கொண்டுநாரையூர் மன்னும்
பொருப்பைஅடி போற்றத் துணிந்தால் - நெருப்பை
அருந்தஎண்ணு கின்றஎறும் பன்றே அவரை
வருந்த எண்ணுகின்ற மலம். 7

மலஞ்செய்த வல்வினை நோக்கி உலகை வலம்வருமப்
புலஞ்செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடைமேற்
சலஞ்செய்த நாரைப் பதிஅரன் றன்னைக் கனிதரவே
வலஞ்செய்து கொண்ட மதக்களி றேஉன்னை வாழ்த்துவனே. 8

வனஞ்சாய வல்வினைநோய் நீக்கி வனசத்
தனஞ்சாய லைத்தருவா னன்றோ - இனஞ்சாயத்
தேரையூர் நம்பர்மகன் திண்டோள் நெரித்தருளும்
நாரையூர் நம்பர்மக னாம். 9

நாரணன் முன்பணிந் தேத்தநின் றெல்லை நடாவியவத்
தேரண வுந்திரு நாரையூர் மன்னு சிவன்மகனே
காரண னேஎம் கணபதி யேநற் கரிவதனா
ஆரண நுண்பொரு ளேஎன் பவர்க்கில்லை அல்லல்களே. 10

அல்லல் களைந்தான்றன் அம்பொன் உலகத்தின்
எல்லை புகுவிப்பான் ஈண்டுழவர் - நெல்லல்களை
செங்கழுநீர் கட்குந் திருநாரை யூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதார் ஐங்கரத்த கோ. 11

கோவிற் கொடிய நமன்தமர் கூடா வகைவிடுவன்
காவிற் றிகழ்திரு நாரைப் பதியிற் கரும்பனைக்கை
மேவற் கரிய இருமதத் தொற்றை மருப்பின்முக்கண்
ஏவிற் புருவத் திமையவன் றான்பெற்ற யானையையே. 12

யானேத் தியவெண்பா என்னை நினைந்தடிமை
தானே சனார்த்தனற்கு நல்கினான் - தேனே
தொடுத்தபொழில் நாரையூர்ச் சூலம் வலன்ஏந்தி
எடுத்த மதமுகத்த ஏறு. 13

ஏறிய சீர்வீ ரணக்குடி ஏந்திழைக் கும்மிருந்தேன்
நாறிய பூந்தார்க் குமரற்கும் மன்னினை நண்ணலரைச்
சீறிய வெம்பணைச் சிங்கத்தி னுக்கிளை யானைவிண்ணோர்
வேறியல் பாற்றொழு நாரைப் பதியுள் விநாயகனே. 14

கனமதில்சூழ் நாரையூர் மேவிக கசிந்தார்
மனமருவி னான்பயந்த வொய்ந்த - சினமருவு
கூசாரம் பூண்டமுகக் குஞ்சரக்கன் றென்றார்க்கு
மாசார மோசொல்லு வான். 15

வானிற் பிறந்த மதிதவ ழும்பொழில் மாட்டளிசூழ்
தேனிற் பிறந்த மலர்திரு நாரைப் பதிதிகழும்
கோனிற் பிறந்த கணபதி தன்னைக் குலமலையின்
மானிற் பிறந்த களிறென் றுரைப்பரிவ் வையகத்தே. 16

வையகத்தார் ஏத்த மதில்நாரை யூர்மகிழ்ந்து
பொய்யகத்தார் உள்ளம் புகலொழிந்து-கையகத்தோர்
மாங்கனிதன் கொம்பண்டம் பாசமழு மல்குவித்தான்
ஆங்கனிநஞ் சிந்தைஅமர் வான். 17

அமரா அமரர் தொழுஞ்சரண்நாரைப் பதிஅமர்ந்த
குமரா குமரற்கு முன்னவ னேகோடித் தேர் அவுணர்
தமரா சறுத்தவன் றன்றுழைத் தோன்றின னேஎனநின் (று)
அமரா மனத்தவர் ஆழ்நர கத்தில் அழுந்துவரே. 18

அவமதியா துள்ளமே அல்லலற நல்ல
தவமதியால் ஏத்திச் சதுர்த்தோம் - நவமதியாம்
கொம்பன் விநாயகன்கொங் கார்பொழில்சூழ் நாரையூர்
நம்பன் சிறுவன்சீர் நாம். 19

நாந்தன மாமனம் ஏத்துகண் டாய்என்றும் நாண்மலரால்
தாந்தன மாகஇருந்தனன் நாரைப் பதிதன்னுளே
சேர்ந்தன னேஐந்து செங்கைய னேநின் திரண்மருப்பை
ஏந்தின னேஎன்னை ஆண்டவ னேஎனக் கென்னையனே. 20

திருச்சிற்றம்பலம்

# பன்னிரண்டாம் திருமுறை
## சேக்கிழார் பெருமான் அருளிய
# திருத்தொண்டர் புராணம்

திருச்சிற்றம்பலம்

உலகுஎலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகுஇல் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம். 1

ஒருமைந்தன் தன்குலத்துக்கு
உள்ளான் என்பதும் உணரான்
'தருமம், தன்வழிச் செல்கை
கடன்' என்று தன் மைந்தன்
மருமம், தன்தேர் ஆழி
உற ஊர்ந்தான் - மனு வேந்தன்
அருமந்த அரசு ஆட்சி
அரிதோ மற்று எளிதோ தான். 2

'அகில காரணர் தாள் பணிவார்கள் தாம்
அகில லோகமும் ஆளற்கு உரியர்' என்று
அகில லோகத்து உளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வது அதன் இடை. 3

அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்
மெய்த்தழைந்து விதிர்ப்பு உறு சிந்தையார்
கைத்திருத் தொண்டு செய்கடப் பாட்டினார்
இத்திறத்தவர் அன்றியும் எண்ணிலார். 4

மாசு இலாத மணி திகழ் மேனிமேல்
பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத்திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார். 5

பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதுஓர் பாகர் மலர்த்தாள் மறப்புஇலார்
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்
கோது இலாத குணப்பெருங் குன்று அனார். 6

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார். 7

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அலது ஒன்றுஇலார்
ஈர அன்பினர் யாதும் குறைவுஇலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ? 8

'மற்று நீ வன்மை பேசி
வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பின்
பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொல் தமிழ் பாடுக என்றார்
தூ மறை பாடும் வாயார். 9

'தெள் நிலா மலர்ந்த வேணியாய் உன் தன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிது ஆம் இன்பம் ஆம்' என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சி மேல் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவு அரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார். 10

வாழிய மாமறைப் புற்றுஇடம் கொள்
மன்னவன் ஆர்அருளால்ஓர் வாக்குத்
'தோழமை ஆக உனக்கு நம்மைத்
தந்தனம் நாம்முன்பு தொண்டுகொண்ட
வேள்வியில் அன்றுநீ கொண்டகோலம்
என்றும் புனைந்துநின் வேட்கைதீர
வாழிமண் மேல்விளை யாடுவாய்' என்று
ஆரூரர்கேட்க எழுந்தது அன்றே. 11

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெரு வாழ்வோ
பொற்புஉடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவன் அருளோ அறியேன்' என்று அதிசயித்தார்.12

பாசம் ஆம் வினைப் பற்றுஅறுப் பான்மிகும்
ஆசை மேலும், ஓர் ஆசை அளிப்பதுஓர்
தேசு மன்னஎன் சிந்தை மயக்குற
ஈச னார்அருள் எந்நெறிச் சென்றதே? 13

உம்பர் நாயகர் தம்கழல் அல்லது
நம்பு மாறுஅறி யேனை நடுக்குஉற
வம்பு மால்செய்து வல்லியின் ஒல்கிஇன்று,
எம்பி ரான்அருள் எந்நெறிச் சென்றதே? 14

பந்தம் வீடுத ரும்பர மன் கழல்
சிந்தை ஆரவும் உன்னும்என் சிந்தையை
வந்து மால்செய்து மான்எனவே விழித்து
எந்தை யார்அருள் எந்நெறிச் சென்றதே? 15

ஆதிஆய் நடுவும் ஆகி
அளவுஇலா அளவும் ஆகிச்
சோதிஆய் உணர்வும் ஆகித்
தோன்றிய பொருளும்ஆகிப்
பேதியா ஏகம் ஆகி
பெண்ணும்ஆய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப்
பொதுநடம் போற்றி! போற்றி! 16

கற்பனை கடந்த சோதி
கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி
அருமறைச் சிரத்தின் மேல்ஆம்
சிற்பர வியோமம் ஆகும்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்பு உற நடம் செய்கின்ற
பூங்கழல் போற்றி! போற்றி! 17

வேதியர் தில்லை மூதூர்
வேட் கோவர் குலத்து வந்தார்
மாது ஒரு பாகம் நோக்கி
மன்னு சிற்றம்ப லத்தே
ஆதியும் முடிவும் இல்லா
அற்புதத் தனிக் கூத்து ஆடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி
வழிபடும் நலத்தின் மிக்கார். 18

அரசியல் நெறியின் வந்த
அற நெறி வழாமல் காத்து
வரைநெடுந் தோளால் வென்று
மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி
ஓங்குநீர் மையினின் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையான் அன்பர்
வேடமே சிந்தை செய்வார். 19

சிந்தை செய்வது சிவன்கழல் அல்லதுஒன்று இல்லார்
அந்தி வண்ணர்தம் அடியவர்க்கு அமுது செய்வித்துக்
கந்தை, கீளுடை, கோவணம் கருத்துஅறிந்து உதவி
வந்த செல்வத்தின் வளத்தினால் வரும்பயன் கொள்வார். 20

மாகம்ஆர் திருக்காளத்தி
மலைஎழு கொழுந்தாய் உள்ள
ஏகநா யகரைக் கண்டார் ·
எழுந்தபேர் உவகை அன்பின்
வேகமானது மேற் செல்ல
மிக்கதோர் விரைவி னோடு,
மோகமாய் ஓடிச் சென்றார்
தழுவினார் மோந்து நின்றார். 21

மாகம்-ஆகாயம்; ஆர் - நிறைந்த.

'அவனுடைய வடிவுஎல்லாம் நம்பக்கல் அன்புஎன்றும்
அவனுடைய அறிவுஎல்லாம் நமைஅறியும் அறிவுஎன்றும்
அவனுடைய செயல்எல்லாம் நமக்குஇனிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வாறு அறிநீ' என்ற அருள்செய்தார். 22

தீதுகொள் வினைக்கு வாரோம்
செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசும்
கதிர்நிலவு இருள்கால் சீப்ப
மாதுகொள் புலவி நீக்க
மனையிடை இருகால் செல்லத்
தூதுகொள் பவராம் நம்மைத்
தொழும்புகொண் டுஉரிமை கொள்வார். 23

ஏயுமாறுபல் உயிர்களுக்கு எல்லைஇல் கருணைத்
தாய்அனான் தனிஆயின தலைவரைத் தழுவ
ஆயும் நான்மறை போற்றநின்று அருந்தவம் புரியத்
தூய மாதவம் செய்தது - தொண்டைநன் னாடு. 24

கரம் தரும்பயன் இதுஎன உணர்ந்து
கம்பம் மேவிய உம்பர்நாயகர் பால்
நிரந்த காதல்செய் உள்ளத்தள் ஆகி
நீடு நன்மைகள் யாவையும் பெருக
வரம் தரும் பொரு ளாம்மலை வல்லி
மாறு இலாவகை மலர்ந்தபேர் அன்பால்
சிரம் பணிந்துஎழு பூசை நாள் தொறும்
திருவுளம் கொளப் பெருகியது அன்றே. 25

நேசம் நிறைந்த உள்ளத் தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்(து)
ஈசன் அடியார் பெருமையினை
எல்லாஉயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல் வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம். 26

மெய்ம்மைப் பணிசெய் தவிருப்பு அதனால்
விண்ணோர் தனிநா யகனார் கழலில்
தம்இச் சைநிரம் பவரம் பெறும்அத்
தன்மைப் பதிமே வியதா பதியார்

'பொய்ம்மைச் சமயப் பிணிவிட் டவர்முன்
போதும் பிணிவிட் டருளிப் பொருளா
எம்மைப் பணிகொள் கருணைத் திறம்இங்கு
யார்பெற்றனர்' என்ன இறைஞ்சினரே. 27

நாட்டார் அறிய முன் நாளில்
நல் நாள் உலந்த ஐம்படையின்
பூட்டுஆர் மார்பின் சிறியாரைப்
புதல்வன் தன்னைப் புக்கொளியூர்த்
தாள்தா மரையின் மடுவின்கண்
தனிமா முதலை வாய்நின்று
மீட்டார் கழல்கள், நினைவாரை
மீளா வழியின் மீட்பனவே. 28

வேதநெறி தழைத்துஓங்க மிகுசைவத்துறவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயல்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். 29

அவம்பெருக்கும் புல்அறிவின் அமண்முதல் ஆம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட நல்ஊழிதொறும்
தவம்பெருக்கும் சண்பையிலே தாஇல் சராசரங்கள் எலாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருஅவதா ரம்செய்தார். 30

அன்னையையும் அத்தனையும் பிரிந்து நின்னை
அடைவுஆக உடன்போந்தேன் அரவால் வீடி
என்னை உயிர்விட்டு அகன்றாய் யான்என் செய்கேன்
இவ்இடுக்கண் தீர்க்கின்றார் யாரும் இல்லை
மன்னியசீர் வணிகர்குல மணியே யானும்
வாழேன் என்று என்று அயர்வாள் மதியினாலே
சென்னிஇளம் பிறை அணிவார் கோயில் வாயில்
திசைநோக்கித் தொழுதுஅழுதாள் செயல்ஒன்று
இல்லாள். 31

பாடல் ஆடல் இன்னியங்கள்
பயிறல் முதல்ஆம் பண்ணையினில்
நீடும் இனிய விநோதங்கள்
நெருங்கு காலம் தொறும்நிகழ

மாடு விரைப்பூந் தருமணம்செய்
அரா மங்கள் கைகுவித்துக்
கூட முனைப்பா டியார் கோவைக்
கொண்டு மகிழ்ந்தார் கோதையார். 32

தேனும் குழலும் பிழைத்த திரு
மொழியாள் புலவி தீர்க்க மதி
தானும் பணியும் பகை தீர்க்கும்
சடையார் தூது தரும் திருநாள்
கூனும் குருடும் தீத்து ஏவல்
கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றேன்
ஏழு பிறப்பின் முடங்கு கூன். 33

அகில லோகமும் பொருள் முதற்று ஆம் எனும் அளவில்
புகலும் அப் பெரும் பற்றினைப் புரைஅற எறிந்த
இகல்இல் மெய்த்திருத்தொண்டர் முன் இறைவர்தாம் விடைமேல்
முகில் விசும்பிடை அணைந்தனர் பொழிந்தனர் முகைப்பூ. 34

ஈசனுக்கே அன்பானார்
யாவரையும் தாம் கண்டால்
கூசி மிகக் குதுகுதுத் துக்
கொண்டாடி மனம் மகிழ்வுற்று
ஆசையினால் ஆவின்பின் கன்று
அணைந்தார்போல் அணைந்து
பேசுவன பணிந்த மொழி
இனியனவே பேசுவார். 35

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றஆடும் மலர்ப்பாதம் ஒருகாலம் மறவாமை
குன்றாத உணர்வு உடையார் தொண்டர்ஆம் குணம்மிக்கார். 36

சங்கரனுக்கு ஆளான தவம்காட்டித் தாம்அதனால்
பங்கம்அறப் பயன்துய்ப்பார் படிவிளக்கும பெருமையினார்
அம்கணனைத் திருஆரூர் ஆள்வானை அடிவணங்கிப்
பொங்கிஎழும் சித்தமுடன் பத்தராய்ப் போற்றுவார். 37

தென்தமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருள்ஆக
ஒன்றியமெய் யுணர்வோடும் உள்உருகிப் பாடுவார்
பன்றியுடன் புள்காணாப் பரமனையே பாடுவார். 38

காரணபங் கயம்ஐந்தின் கடவுளர்தம் பதம்கடந்து
பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்துஇலங்கு நாதாந்தத்
தாரணையால் சிவத்துஅடைந்த சித்தத்தார் தனிமன்றுள்
ஆரணகா ரணக்கூத்தர் அடித்தொண்டின் வழிஅடைந்தார். 39

திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தார்
பெருக்கியசீர்த் திருஆரூர்ப் பிறந்தார்கள் ஆதலினால்,
தருக்கியஐம் பொறிஅடக்கி மற்று அவர்தம் தாள் வணங்கி
ஒருக்கியநெஞ்சு உடையவர்க்கே அணிந்து ஆகும் உயர் நெறியே. 40

எப்போதும் இனிய்பிரான் இன்அருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக்கு அப்போதும் ஆர்வம்மிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதல் சைவர் ஆம் முனிவர். 41

சாதியினில் தலையான தருமசீலர்
தத்துவத்தின் நெறி உணர்ந்தோர் தங்கள் கொள்கை
நீதியினில் பிழையாது நெறியில் நிற்போர்
நித்தம் நியமத்து நிகழ் அங்கி தன்னில்
பூதியினைப் புதிய பாசனத்துக் கொண்டு
புலி அதளின் உடையானைப் போற்றி நீற்றை
ஆதிவரு மும்மலமும் அறுத்த வாய்மை
அருமுனிவர் முழுவதும் மெய் அணிவர் அன்றே. 42

மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக்கு அப்பால்
முதல்வனார் அடிச் சார்ந்த முறைமை யோரும்
நா வேய்ந்த திருத் தொண்டத் தொகையில் கூறும்
நல் தொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூ வேய்ந்த நெடுஞ் சடைமேல் அடம்பு தும்பை
புதிய மதி நதி இதழி பொருந்த வைத்த
சே ஏந்து வெல் கொடியான் அடிச் சார்ந்தாரும்
செப்பிய அப்பாலும் அடிச் சார்ந்தார் தாமே. 43

செற்றார்தம் புரம் எரித்த சிலையார் செல்வத்
திரு முருகன் பூண்டியினில் செல்லும் போதில்
சுற்று ஆரும் சிலை வேடர் கவர்ந்து கொண்ட
தொகுநிதியின் பரப்பு எல்லாம் சுமந்து கொண்டு
முற்றாத முலை உமையாள் பாகன் பூத
முதல் கணமே உடன் செல்ல முடியாப் பேறு
பெற்றார்தம் கழல் பரவ அடியேன் முன்னைப்
பிறவியினில் செய்த தவம் பெரிய ஆமே. 44

மங்கையர்க்குத் தனிஅரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திரு மடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே
இருந்தமிழ் நாடு உற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கு ஒளி வெண் திரு நீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே. 45

ஒளியாப் பெருமைச் சடையனார்
உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் புரங்கள் எய்து அழித்தார்
ஆண்டநம்பி தனைப்பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப்
பிராட்டியாரை என்சிறுபுன்
மொழியால் புகழ முடியுமோ
முடியாது எவர்க்கும் முடியாதால். 46

ஆரண மொழிகள் முழங்கிட
ஆடினார் - குணலைகள் அந்தணர்
வாரண மதமழை சிந்தின
வாசிகள் கிளர்ஒளி பொங்கின
பூரண கலிசம் மலிந்தன
பூ மழை மகளிர் பொழிந்திடும்
தோரண மறுகு புகுந்தது
தோழர்கள் நடவிய குஞ்சரம். 47

வான நாடர்கள் அரி அயன் முதலினோர்
வணங்கி முன் விடைகொண்டு
தூ நலம் திகழ் சோதி வெள் ளானையும்
கொண்டு வன் தொண்டர்க்குத்
தேன் அலம்பு தண்சோலை சூழ் மகோதையில்
திரு அஞ்சைக் களம் சேரக்
கானிலம் கொள வலம் கொண்டு மேவினார்
கடி மதில் திரு வாயில். 48

வாழி மாதவர் ஆலால சுந்தரர்
வழியிடை அருள்செய்த
ஏழ் இசைத் திருப்பதிகம் இவ் உலகினில்
ஏற்றிட எறிமுந்நீர்
ஆழி வேந்தனாம் வருணனுக்கு அளித்திட
அவனும் அவ் அருள் சூடி
ஊழியின் தனி ஒருவர்தம் திரு அஞ்சைக்
களத்தில் உய்த்து உணர்வித்தான். 49

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று உளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம். 50

*திருச்சிற்றம்பலம்*

**பயனுள்ள**
**திருமுறைப் பாக்கள்**
**தொகுப்பு**
**முற்றிற்று**

# 2006ம் ஆண்டு பன்னிரு திருமுறை முற்றோதும் அடியார்கள்

1. திரு. சிவ. முத்துலிங்கம்
2. திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர்
3. திருமதி கமலாதேவி மகாலிங்கம்
4. திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம்
5. திருமதி இராசமலர் சின்னராசா
6. திருமதி சற்குணம் நடராசா
7. திருமதி பத்மதேவி சிறிசுப்பிரமணியம்
8. திருமதி நாகேஸ்வரி கணேஸ்
9. திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு
10. திரு.கயிரித்தம்பி நவரத்தினம்
11. திரு. காசிப்பிள்ளை கோபாலபிள்ளை
12. திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்
13. திரு. செல்லத்தம்பி மார்க்கண்டு
14. திருமதி தேவமலர் நாகராசா
15. திரு. மருதையினார் சிவசாமி
16. திருமதி மகாலட்சுமி பொன்னம்பலம்
17. திரு. சி. பாலசுப்பிரமணியம்
18. திரு. சுப்பையா சிவபரமானந்தம்
19. திருமதி சியாமளா ஆறுமுகம்
20. திருமதி விஜயலட்சுமி விக்கினேஸ்வரன்
21. திருமதி தங்கமுத்து தம்பித்துரை
22. திருமதி இராசமலர் முத்தையா
23. திருமதி இரத்தினமலர் செந்திவடிவேல்
24. திருமதி கனகாம்பிகை வில்வரத்தினம்
25. திருமதி பார்வதி நடராசா
26. திருமதி காந்திமலர் பரஞ்சோதி
27. திருமதி செல்வராணி நடராசா
28. திருமதி அன்பூரணம் கார்த்திகேசு
29. திருமதி கமலாதேவி அமிர்தராஜா
30. திருமதி அன்னபூரணம் அரசரத்தினம்
31. திரு. முருகவே பரமநாதன்
32. திரு. அருளானந்தம் குமரகுருபரன்
33. திரு. கணபதிப்பிள்ளை வித்தியானந்தன்

34. திருமதி இ. பாலசுந்தரம்
35. திருமதி தவனேஸ்வரி சாம்பசிவம்
36. திரு. சி. முத்துத்தம்பி
37. திரு. செ. சோமசுந்தரம்
38. திரு. பெரியதம்பி விக்கினேஸ்வரன்
39. திரு. ஞா. புவனேந்திரன்
40. திரு. சி. தம்பிராசா
41. திருமதி சந்திரவதனா குலரஞ்சிதசிங்கம்
42. திரு சி. நாராயணசுவாமி
43. திரு இராசையா சிவஞானசுந்தரம்
44. திருமதி தவமணி தியாகராசா
45. திருமதி கமலாம்பிகை தியாகரத்தினம்
46. திரு. த. செ. நடராசா
47. திருமதி மகேஸ்வரி வியாகரத்தினம்
48. திருமதி குலமணி கந்தசாமி
49. திரு. இரத்தினம் லோகேஸ்வரன்
50. திருமதி திலகா ஞானி
51. திரு. ஞான சபாபதி
52. திருமதி மீனாம்பிகை இரத்தினம்
53. திருமதி வி. ஸ்கந்தாரணியம்
54. திருமதி பூ. தங்கராணி
55. திருமதி கமலாசனி கோபாலபிள்ளை
56. செல்வி பரமேஸ்வரி சரவணைமுத்து
57. திரு. சு. திருச்செல்வம்
58 திருமதி .பரமேஸ்வரி பரமநாதன்
59. திரு. கா. கதிரவேல்
60. திரு. இ. சிவஞானசுந்தரம்
61. திரு. செ. பொன்னம்பலம்
62. திருமதி சின்னத்துரை செல்லமுத்து
63. திருமதி ப. யோகரத்தினம்
64. திருமதி ம. தனபாலசிங்கம்
65. திரு. லெ. பக்கீர்சாமி
66. திருமதி பக்கீர்சாமி இராஜமணி

## இந்து சமயப் பேரவை வெளியீடுகள்.

| | |
|---|---|
| தரிசனம் | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| அர்ச்சனை மாலை | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதர் | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| திருமுறைக் கதைகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| முத தான தொண்டர் | கவிஞர். வி. கந்தவனம் |
| புதிய சைவ வினாவிடை(முதலாம் புத்தகம்) | கவிஞர். வி. கந்தவனம் |
| தங்கம்மா நான்மணிமாலை | கவிஞர். வி. கந்தவனம் |
| சிவயோக சுவாமிகளின் அருள்மொழிகள் | மார்க்கண்டு சுவாமிகள் |
| பன்னிருமாத நினைவுகள் | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| கனடாவிற் சைவ சமயம் | கவிஞர். வி. கந்தவனம் |
| ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமி | பேரறிஞர் முருகவே பரமநாதன் |
| சைவத் திருமுறைகளின் விழுமியம் | பேரறிஞர் முருகவே பரமநாதன் |
| புதிய சைவ வினவிடை (இரண்டாம் புத்தகம்) | கவிஞர் வி. கந்தவனம் |
| நல்லூர் நாற்பது | கவிஞர் வி. கந்தவனம் |
| யோகி ராம் சுரத்குமார் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைச் செல்வம் | சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் |
| தேவைக்கேற்ற திருமுறைத்திரட்டு | (தொகுத்தவர்) கவிஞர் வி. கந்தவனம் |
| விதியை வெல்வது எப்படி | திரு கு. வைத்தியநாதன்(சைவசித்தாந்த சாகரம்) |
| கந்தன் கதை | கவிஞர் வி. கந்தவனம் |
| குரு வழிபாடு | கவிஞர் வி. கந்தவனம் |
| அகத்தியரும் விநாயகரும் | கவிஞர் வி. கந்தவனம் |

| | |
|---|---|
| முருகப்பெருமானும் அவ்வையாரும் | கவிஞர் வி. கந்தவனம் |
| சிந்தனைத் தேன் துளிகள் | மாதாஜி புலவர் சி. விசாலாட்சி |
| ஞானவிளக்கு | சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் |
| விநாயக வெண்பா | கவிஞர் வி. கந்தவனம் |
| விநாயக விருத்தம் | கவிஞர் வி. கந்தவனம் |
| சுவாமி சதானந்தர் நற்போதனை | தொகுப்பு சபா சிவானந்தன் |
| கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| தெய்வீக வாழ்க்கை | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| முப்பெரும் சித்தர்கள் | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| திருமுறைக்காட்சி | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| கேதார பத்திரி யாத்திரை | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| கந்தக் கதம்பம் | தொகுத்தவர் ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |

இந்து சமயப் பேரவையின் வெளியீடுகள் தேவையானோர்

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்

416-724-6240





ஆலய பிரதம குருக்களுடன்
திருமுறை முற்றோதிய அடியார்கள்